பக்கங்கள்: இருபத்தெட்டு + 2

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 18 புதன்கிழமை (05.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 313


11 மன்னார் தம்பனைக்கு குடிதண்ணீர் பிரச்சினை


14 பழைய பூங்கா


23 விஞ்ஞானிகளுக்கு நோபல் பரிசு


24 அனோஷனுக்கு வெள்ளிப் பதக்கம்

# இந்திய வெளியுறவுச் செயலர் சனியன்று கொழும்பு வருகை

## ஜனாதிபதி, கூட்டமைப்புடன் பேச்சு

கொழும்பு, ஒக்ரோபர் 5

இந்திய வெளிவிவகாரச் செயலர் ரஞ்சன் மாத்தாய் எதிர்வரும் சனிக்கிழமை இலங்கை வருகிறார். அவர் யாழ்ப்பாணத்துக்கும் வருகை தருவார் என்று தெரிகிறது. இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகளை அவர் சந்தித்து அரசியல் பேச்சு மற்றும் தீர்வு குறித்துப் பேச உள்ளார். வெளிவிவகாரச் செயலராகப் பதவியேற்ற பின்னர் அவர் இலங்கைக்குப் பயணம் செய்வது இதுவே முதற் தடவை.



மாத்தாயின் பயணம் 8ஆம் திகதி ஆரம்பமாகிறது என்று புதுடில்லியில் இந்திய வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இந்தியாவின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி, புனர்வாழ்வுத் திட்டங்கள் குறித்தும் மாத்தாய் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறைச் செயலராக இருந்த நிருபமா ராவ் பதவி விலகிச் சென்றதன் பின்னர் அந்தப் பதவியைப் பொறுப்பேற்றவர் ரஞ்சன் மாத்தாய். கொழும்புக்கு அதிகம் பரிச்சயமானவர் இவர் என்று ராஜதந்திர வட்டாரங்களில் கூறப்படுகிறது.

தனது பயணத்தின்போது யாழ்ப்பாணம் வருவதற்கும் பக் 27

# நாரந்தனைக் கடலில் மீட்கப்பட்ட சடலம்

யாழ்ப்பாணம், ஒக்.5

ஊர்காவற்றுறை சரவணைக்கும், நாவாந்துறைக்கும் இடைப்பட்ட கடல் ஏரிப் பிரதேசத்திலிருந்து பழுதடைந்த நிலையில் ஆணொருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

இதுவிடயம் குறித்து தெரிய வருவதாவது:

குறித்த பிரதேச கடற்கரையிலிருந்து 100 மீற்றர் தூரத்தில் சடலமொன்று இருப்பதை கண்ட மீனவர்கள் உடனடியாக ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். இதனடிப்படையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை கரைக்குக் கொண்டு வந்தனர்.

மாலையளவில் அந்த இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி. ஜோய் மகிழ் மகாதேவா சடலத்தைப் பார்வையிட்ட பின்னர் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக பக் 25

## 23 உள்ளூராட்சி சபைகளுக்கான

# சூறாவளிப் பிரசாரம் இன்றுடன் முடிவு கட்சித் தாவல், பேரங்களும் தாராளம்

## கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு

கொழும்பு, ஒக்.4

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்றுடன் முடிவடைகின்றன. அதேசமயம், வேட்பாளர்களை விலைக்கு வாங்கும் பேரப்பேச்சுகளில் பிரதான இரு கட்சிகளான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியும் தீவிரமாக இறங்கியுள்ளன. இதனால் கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் சிலர் அரசதரப்பு உயர் மட்டத்துடன் நேற்று இரகசிய சந்திப்புப் பேச்சுகளில் ஈடுபட்டனர் எனவும் அதேபோல், அரச தரப்பு வேட்பாளர்கள் சிலர் ஐ.தே.க. உயர்மட்டத்துடன் இரகசிய சந்திப்புகளை நடத்தியுள்ளனர் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, தேர்தல் நெருங்கி வரும் இறுதி நாட்களில் வேட்பாளர்களிடையே கட்சித் தாவல்கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பு மாநகரசபை உட்பட 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் இன்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளன.

17 மாநகரசபைகள், ஒரு நகர சபை மற்றும் 5 பிரதேச சபைகள் உட்பட 23 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 8ஆம் திகதி நடைபெறவுள் பக் 27

# வலி.தெற்கு பிரதேச சபையின் சுத்திகரிப்பு தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக்.5

வலி.தெற்குப் பிரதேச சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் நேற்று திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

கடந்த சனிக்கிழமை உழவு இயந்திர சாரதியினால் வேலை மேற்பார்வையாளர் ஒருவர் தாக்கப்பட்டார். இதனைச் சபையின் செயலாளரின் கவனத்துக்குப் பாதிக்கப்பட்ட ஊழியர் எழுத்து மூலம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து குறிப்பிட்ட உழவு இயந்திர சாரதி ஒழுக்காற்று விசாரணைக்காக இடைநிறுத்தப்பட்டார்.

இந்த நிலையில் உழவு இயந்திர சாரதிக்குப் பதிலாக ஒருவரைத் தற்காலிகமாக நியமித்து சுகாதார வாரத்தையொட்டி பக் 25

# தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரித்துச் செயற்பட அங்கீகாரம்

## யாழ்.அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவை இரண்டாகப் பிரிப்பது மீள் நிர்ணயம் செய்வது தொடர்பான தீர்மானம் எதுவித எதிர்ப்பும் இன்றி அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

60 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவை இரண்டாக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாகப் பிரதேச மக்களால் முன்வைக்கப்பட்டு வந்தது.

இதன் அடிப்படையில் நேற்றைய தினம் இது தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், அ.விநாயகமூர்த்தி, ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான மு.சந்திரகுமார் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலதரப்பட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

நேற்றைய தீர்மானத்தின் படி சாவகச்சேரியை மையமாகக் கொண்டு தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு அமையவுள்ளது. இதில் 32 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடக்கப்படவுள்ளன. ஜே/288 முதல் ஜே/319 வரையான கிராம சேவையாளர் பிரிவுகளே இதில் இடம்பிடிக்கவுள்ளன.

இரண்டாவது பிரிவு பக் 27

## வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில்

# மாணவிக்கு எதிராக சக மாணவரே ஆர்ப்பாட்டத்தில் குதித்த அதிசயம்

யாழ்ப்பாணம், ஒக்.5

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் உயர்தர உயிரியல் பிரிவில் கல்வி கற்க பாடசாலை நிர்வாகம் மறுத்துவிட்டது. எனினும் மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டின் பின்னர் அந்த மாணவி மீண்டும் பாடசாலைக்கு நேற்றுச் சென்றிருந்தார். அந்தவேளை சிலரின் தூண்டுதலால் அந்த மாணவியை பாடசாலையில் அனுமதிக்கக் கூடாது எனத் தெரிவித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவிக்கு எதிராக சகமாணவர்களே நடத்திய இந்தப் போராட்டம் குறித்துத் தெரியவருவதாவது:

குறித்த பாடசாலையின் உயர்தர உயிரியல் பிரிவில் கல்வி கற்பதற்கு ஈவி பக் 25



உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

ஊர்காவற்றுறைப் பகுதியின் அநேக பாடசாலைகளில்

# அதிபர்கள், ஆசிரியர்கள் வருகையில் தாமதம் மாணவர்கள் வெளியில் காத்திருக்கும் அவலம்

யாழ்ப்பாணம்,ஒக்.05

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு உரிய நேரத்துக்கு அதிபர்கள், ஆசிரியர்கள் வருகை தராமையால் மாணவர்கள் பாடசாலைக்கு வெளியில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகப் பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் அமைந்துள்ள பெரும்பாலான பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் யாழ். நகரப் பகுதிகளில் இருந்து வருகை தருகின்றனர். இவர்கள் பாடசாலை ஆரம்பமாகும் நேரத்துக்கு குறித்த பாடசாலைகளுக்கு வருவதில்லை என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலைகளுக்கு நேரத்துடன் செல்லும் மாணவர்கள் பாடசாலைக்கு வெளியில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அத்துடன் சில பாடசாலைகளில் முதலாம் பாட வேளை நேரம் தாமதித்து ஆரம்பமாவதாகவும் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் யாழ். நகரப் பகுதியிலிருந்து காலை 8 மணிக்கே தனியார் பேருந்துகளில் புறப்படுகின்றனர். இதனாலேயே தீவகப் பகுதி பாடசாலைகளுக்கு செல்வதற்கு நேரதாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே ஆசிரியர்கள், அதிபர்கள் உரிய நேரத்துக்கு பாடசாலைக்கு வருகை தர வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இதேவேளை அல்லைப்பிட்டியில் அமைந்துள்ள குறிப்பிட்ட பாடசாலை ஒன்றில் அதிபர் பெரும்பாலான நாள்கள் கடமைக்கு வருவதில்லை என்று முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-15)

# அரச தரப்பு உறுப்பினர் செலவில் வலி.மேற்கில் 200 வீதி விளக்குகள்

யாழ்ப்பாணம், ஒக். 5

வலி.மேற்குப் பிரதேசசபைக்கு உட்பட்ட 15 கிராம அலுவலர் பிரிவுகளில் 200 வீதி விளக்குகளை வலி.மேற்கு பிரதேச சபையின் அரச தரப்பு உறுப்பினர் சிவகுரு பாலகிருஷ்ணன் (ஜீவன்) தனது சொந்தச் செலவில் பொருத்தியுள்ளார்.

இவருடைய சேவையை இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் வலி.மேற்கு பிரதேச சபை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித் தனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொது அமைப்பு ஒன்றின் தலைவர் கருத்துக் கூறுகையில்;

வலி.மேற்கு பிரதேச சபை எல்லைக்குள் வீதி விளக்குகள் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார். இதன்போது அங்கிருந்த அரச அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்;

வலி.மேற்கு பிரதேசம் நீண்ட பல வருடங்களாக வீதி வெளிச்சம் இன்றி இருளில் இருந்தது.

வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினரான சிவகுரு பாலகிருஷ்ணன் தனது சொந்தச் செலவில் 200 தரம் வாய்ந்த மின்குமிழ்களை முக்கியமான பிரதேசங்களில் பொருத்தியுள்ளார். இதன்மூலம் வீதியில் சகலரும் கஷ்டமின்றி பயணிக்க கூடியதாய் உள்ளதாகத் தெரிவித்தார்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்த பாலகிருஷ்ணன்;

முதற்கட்டமாக 200 விளக்குகள் என்னால் இலங்கை மின்சார சபையின் உதவியுடன் பொருத்தப்பட்டுள்ளன. விரைவில் 70 விளக்குகளை முக்கியமாக இனங்காணும் பிரதேசங்களில் பொருத்தி உதவுவேன் என்றார். (த-302)

# வாக்காளர் பதிவு விண்ணப்பங்களை பெற வசதி

வெளிநாடுகளில் வாழ்பவர்கள் இங்கு தம்மை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வாழ்பவர்களும் தாம் விரும்பினால் இங்கு தம்மை வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களைத் தமது உறவினர்கள் ஊடாகக் கிராமசேவகர்களிடமோ அல்லது தேர்தல் திணைக்களத்திடமோ பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த விண்ணப்பப்படிவங்களை யாழ்.கோயில் வீதி இல.14 இல் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்திலும், யாழ். மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள ஹரித்தாஸ்-கியுடெக் நிறுவனத்திலும் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பவ்ரல் அமைப்பு அறிவித்துள்ளது. (த)

# சிறுகுற்றச் செயல்

யாழ்ப்பாணம், ஒக். 5

அனுமதிப்பத்திரமின்றி கஞ்சா வைத்திருந்த யாழ்.நகர் சின்னக்கடையைச் சேர்ந்த நபர் யாழ்.நீதிமன்றில் ஐயாயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

நேற்றுமுன்தினம் இரவு பிரஸ்தாப நபர் யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 26 கிராம் கஞ்சாவுடன் சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார். யாழ். நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்றையதினம் முன்னிலைப்படுத்தப்பட்டார். சந்தேக நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து நீதிவான் ஐயாயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.


* * *

அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திச் சென்ற நபர் யாழ்.நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார். யாழ்.நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் சந்தேகநபர் முன்னிலைப்படுத்தப்பட்டார். பிரஸ்தாப நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-4)

# இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் பதிவாளர் மீது தாக்குதல்

இலங்கை மருத்துவ கவுன்ஸிலின் பதிவாளர் டாக்டர் என்.ஜே. நோனிஸ், இனந்தெரியாத நபர்களால் நேற்றிரவு தாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொரட்டுவையிலுள்ள அவரின் வீட்டிற்கு அருகில் வைத்து இனந்தெரியாதவர்கள் மீது இத்தாக்குதல் நடத்தியதாக இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (10)




முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இடி மின்னலும் பிற மாவட்டங்களில் தெளிவான வானிலையும் நிலவும் சாத்தியம்

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
ஐப்பசி 04 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,725.19↓
மிலங்கா(MPI) 5,978.42↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,961.28 Mn
பங்குகளின் அளவு(No.) 79.05Mn
வியாபாரம்(No.) 18.033
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கப்பிற்றல் அலயன் பைனான்ஸ் 39.00
மல்வத்தை(x) 7.20
மஸ்கலியா 23.50
சிங்கபுத்திர பைனான்ஸ் 130.00
ஏசியல் கேபிள் 80.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சி.எவ்.எல் 300.00
செலான் மேச்சன்(x) 0.70
சாம்சன் இன்ரனசனல் 159.00
ஆசிரி சென்றல் 225.10
கெ(ഉ)ஸ்ற் அனோ்ஸ் 361.00
மேலதிக தகவல்கள்- www.csc.lk

# சனீஸ்வர மஹாயாகம்

யாழ்ப்பாணம், ஒக.5

அகில இலங்கை சபரிமலை சாஸ்திர பீடம் புராட்டாதிச் சனிக்கிழமைகளை முன்னிட்டு நடத்தும் சனீஸ்வர கிரகதோஷ மாஹாயாகம் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5.30 மணிக்கு ஸ்ரீ வித்தி விநாயகர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் மஹா யாகம் நடைபெறும். (எ-313)

# நிகழ்வுகள்

**கலந்துரையாடல்**

நல்லூர் பிரதேச சபைப் பகுதியின் அபிவிருத்திகள் தொடர்பான கலந்துரையாடல் பிரதேச சபைத் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும். இக் கூட்டத்தில் நல்லூர் பிரதேசசெயலாளர் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர். (ஒ-7)

**வாய்ப்பாட்டு மனனப் போட்டி**

தீவக வலயமட்ட பாடசாலை மாணவர்களுக்கான வாய்ப்பாட்டு மனனப் போட்டிகள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இடம்பெறும் கோட்ட மட்டப் போட்டியில் முதலாம் இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் அனைவரையும் இதில் பங்குபற்றுமாறு தீவக வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.தனிநாயகம் அறிவித்துள்ளார். (ஒ-267-31)

* * *

வடமாராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு கிடையிலான வலயமட்ட வாய்ப்பாட்டு மனனப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி மருதங்கேணி கோட்டங்களில் வெற்றியீட்டிய மாணவர்கள் இந்தப் போட்டிகளில் பங்கு பற்றவுள்ளார்கள். (எ-190)

**கவிதைத் தொகுப்பு வெளியீடு**

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி முகிழ் நிலை ஆசிரியர் து.சுதர்சனின் ''விடியாத இரவுகள்'' கவிதைத் தொகுப்பும் இறுவட்டு வெளியீடும் கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதனும் சிறப்பு விருந்தினராக ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி பணிப்பாளர் ரி.சோமசுந்தரமும் கலந்துகொள்வர். ஜனசக்தி காப்புறுதி நிறுவன வடபிராந்திய முகாமையாளரான இம்மானுவெல் ஆனல்ட் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்வர். (ஒ-4)

**பரிசளிப்பு விழா**

கட்டைவேலி யாக்கரை விநாயகர் வித்தியாலயத்தில் வாணிவிழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சோ.கருணேஸ்வரன் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப்பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் கலந்துகொள்வர். (ஒ-253)

* * *

உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (எ-313)

**ஆசிரியர் தின விழா**

தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஆசிரியர் தின விழா இன்று முற்பகல் 10 மணியளவில் நடைபெறும். (ஒ-253)

* * *

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இன்று புதன்கிழமை உலக ஆசிரியர் தினை வைபவம், திருவள்ளுவர் சிலை திரைநீக்கம், கல்லூரி இணையத்தளம் அங்குரார்ப்பணம் ஆகிய வைபவங்கள் இடம்பெறவுள்ளன.

உலக ஆசிரியர் தின வைபவம் சிரேஷ்ட மாணவர் தலைவர் மு.அபிராம் தலைமையில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.உலக ஆசிரியர் தின வைபவத்துக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை தலைவர் கலாநிதி த.கலாமணி கலந்துகொள்வார். (எ-190)

* * *

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் உலக ஆசிரியர் தின நிகழ்வு இன்று காலை 9.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன. சிரேஷ்ட மாணவத் தலைவி செல்வி ஜீ.சர்மிளா தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் ஓய்வுபெற்ற செயலர் சுந்தரம் டிவகலாலா கலந்துகொள்வார். (ஒ-10)

* * *

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் ஆசிரியர் தினவிழாவும், வாணிவிழாவும் இன்று காலை 9.30 மணிக்கு பாடசாலை கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன. பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலர் வே.செல்வகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன், சிறப்புவிருந்தினராக பிரதேச உறுப்பினர் நா.இலட்சுமிகாந்தன் ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் ஆசியுரையை சிவத்திரு சிவசண்முக வடிவேல் நிகழ்த்துவார். (ஒ-10)

* * *

பண்ணாகம் மெண்கண்டான் மகா வித்தியாலய ஆசிரியர் தினம் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

* * *

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலய ஆசிரியர் தின நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. செல்வி கா.சரண்யா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொட்டடி நமசிவாய மகாவித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் சு.நடராஜலிங்கம், கௌரவ விருந்தினராக வண்ணை நாவலர் மகா வித்தியாலய ஓய்வுநிலை பிரதி அதிபர் திருமதி ர.ஜெயராஜா ஆகியோர் கலந்துகொள்வர். நிகழ்வில் ஆசியுரையை பாடசாலை அதிபர் சு.சிவபாதசுந்தரம் நிகழ்த்துவார். (ஒ-10)

**வேலணையில் வாணி விழா**

வேலணை பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலையத்தின் வாணி விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெற உள்ளது. வேலணை பிரதேச செயலகத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ப.ஞானபண்டிதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தீவக வலய சேவைக் கால ஆலோசகர் ப.ஆரூரன் வழங்கும் சிறப்புரை ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (ஒ-313)

# எண்ணெய் வளம் கண்டறிவதைத் தடுக்கவே விடுதலை புலிகளை ஆதரித்ததாம் நோர்வே

கொழும்பு, ஒக்.5

எண்ணெய்வளத்தையும், வாயு வளத்தையும் கண்டுபிடிப்பதை தடுத்து நிறுத்தவே நோர்வே, புலிகளுக்கு ஆதரவளித்து அவர்களைக் காப்பாற்றி வந்ததாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்த குற்றம் சாட்டியுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்திராது போனால் மன்னார் படுக்கையில் மட்டுமல்ல, மன்னார் பக்கமே யாரும் தலை வைத்துப் படுத்திருக்கவே முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

மன்னார் படுகையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள எரிவாயுவை இன்னும் மூன்று வருடங்களில் மின்னுற்பத்திக்கும், போக்கு வரத்துக்கும் பயன்படுத்த முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

முதலாவது எண்ணெய்க் கிணறு மூலம் ஹைட்ரோகார்பன் என்ற வாயு கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும், இதனை உடனடியாகப் பயன்படுத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்த வாயுவை கடல் மட்டத்துக்கு மேல் கொண்டு வந்தால் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்த முடியும் என்றும் அதன் மூலம் மிகக்குறைந்த செலவுடன் மின் உற்பத்தி செய்ய முடியும் என்றும் சுசில் பிறேம் ஜெயந்த குறிப்பிட்டுள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள எரிவாயு சமையலுக்காகப் பயன்படுத்தப்படும் திரவ எரிவாயு அல்ல என்றும், இந்த இயற்கை எரிவாயுவைத் திரவ நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தத் திரவ எரிவாயுவைக் கொண்டே ஜப்பான், கொரியா போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் தமது மின்உற்பத்தித் தேவையில் 30 வீதத்தைப் பூர்த்தி செய்வதாகவும் அவர் கூறியுள்ளார். (ஒ-10)

பாடசாலை விட்டு வீடு சென்ற

# மாணவி வாயில் துணியைத் திணித்து வன்புணர்வில் ஈடுபட்ட மாணவன்

யாழ்ப்பாணம், ஒக்.05

11 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவியை 10 ஆம் தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவன் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் சுழிபுரம் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: வட்டுக்கோட்டையில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே குறித்த இருவரும் கல்வி கற்று வருகின்றனர். அவர்கள் இருவரும் உறவினர்கள் என்று கூறப்படுகிறது.

சம்பவதினம் குறித்த மாணவி பாடசாலையால் வீடு திரும்பி தனியாக இருந்த வேளையிலேயே மாணவன் அவரை வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார். மாணவி சத்தமிட்ட போதும் மாணவன் வாயினுள் துணியைத் திணித்துவிட்டு வன்புணர்வு செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட மாணவி தற்போது யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். மாணவன் வட்டுக் கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ஒ-15)

# உலக உணவுத்திட்ட பிரதிநிதி யாழ். வருகை தந்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஒக்.5

உலக உணவுத் திட்டத்தினால் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை ஆராய்வதற்காக உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான பிரதிநிதி அட்கான் கர் இங்கு விஜயம் மேற்கொண்டு திரும்பியுள்ளார்.

நேற்றும், நேற்று முன்தினமும் யாழ். மாவட்டத்தில் தங்கியிருந்து அவர் இங்கு உலக உணவுத் திட்டத்தினால் விநியோகிக்கப்படும் நிவாரண உணவுப்பொருள்கள் மக்களை உரிய வகையில் சென்றடைகின்றனவா என்பதையும் ஆராய்ந்தார்.

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த அட்கான், விடுவிக்கப் பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான உணவுப்பொருள்கள் உரிய வகையில் விநியோகிக்கப்பட்டுள்ளனவா என ஆராய்ந்ததுடன், மேலதிகமாக உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகள் விடுவிக்கப்பட்டால் அந்த மக்களுக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. அதன்போது அவர்களுக்குக் கட்டாயம் நிவாரணமாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வலி. வடக்கு பிரதேசத்தில் மக்கள் மீளக் குடியமர்ந்த பகுதிகளில் மலசல கூடம் அமைக்கப்பட்டு வருகின்றது. இதற்கு உலக உணவுத் திட்டத்தினால் ஏதாவது உதவி வழங்க முடியுமா என்றும் அவர் ஆராய்ந்துள்ளார்.

**மீளக் குடியமராமல் நிவாரணம் பெறும் மக்கள்**

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை நேற்றுக்காலை சந்தித்த அட்கான், முஸ்லிம் மக்கள் இங்கு மீளக் குடியமராமல் தமக்கான உலக உணவுத் திட்டத்தின் உணவுப் பொருள்களைப் பெற்று விற்பனை செய்வதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அரச உயர் மட்டங்களில் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-15)

# உள்ளூர் வளப் பயன்பாடுகளுக்கான கண்காட்சி கைதடியில் சனி முதல்

யாழ்ப்பாணம், ஒக்.5

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் ஏற்பாட்டில் உள்ளூர் வளப்பயன்பாடுகளை ஊக்குவித்தலை மையமாகக் கொண்டு எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 10 ஆம் திகதி வரை கைதடியில் அமைந்துள்ள உள்ளூராட்சி அமைச்சின் வளாகத்தில் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறவுள்ளது.

''அபிவிருத்தியில் உள்ளூர் வளப் பயன்பாடு'' எனும் தொனிப் பொருளில் மு.ப. 9 மணிமுதல் பி.ப.6 மணிவரை இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் வடமாகாணத்தில் உள்ள உள்ளூர் வளப்பயன்பாட்டை ஊக்குவித்தல், சுயதொழிலாளர்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், புதிய சுயதொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல் போன்ற இலக்குகளை நிறைவு செய்யும் பொருட்டு காட்சிக் கூடம், விற்பனைக் கூடம், செய்முறைக் கூடங்கள் என்பவை அமைக்கப்படவுள்ளன.

இந்தக் கண்காட்சியில் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் சகல திணைக்களங்களும் தம் உற்பத்திகளை காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் தொழில் துறைத் திணைக்களத்தின் சார்பில் கைத்தறி நெசவு ஆடைகள், ஏணைய நெசவு உற்பத்திகள், கணக்கவர் பற்றிக் துணி வகைகள், தும்பிலான உற்பத்திப் பொருள்கள், மண்பாண்டப் பாவனைப் பொருள்கள், பனை சார் கைவினைப் பொருள்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன.

விற்பனைக் கூடங்களில் மாபிளினாலான பலதரப்பட்ட வீட்டுப் பாவனைப் பொருள்கள், சித்த மருத்துவ உற்பத்திப் பொருள்கள், கோடியல், சோஸ், ஊறுகாய், பழரசங்கள், பொதி செய்யப்பட்ட சிற்றுண்டி வகைகள், கருங்கல் சிற்பங்கள், செப்புத் தகட்டிலான புடைப்புச் சிற்பங்கள், தோலினாலான பாதணிகள், பெண்களுக்கான கைப் பைகள், பயணப் பைகள், பனைசார் கைவினைப் பொருள்கள், கைத்தறி உற்பத்திகள், தும்பினாலான பாவனைப் பொருள்கள், மட்பாண்ட அழகு சாதனப் பொருள்கள், மரத்தினாலான வீட்டு அலங்காரப் பொருள்களுடன் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திகளான மெழுகுதிரி, சிரட்டையினாலான அழகு சாதனப் பொருள்கள், கழிவுத் துணிகளினாலான வீட்டின் அழகினை மெருகூட்டும் அலங்காரப் பொருள்கள் என்பனவும் விற்பனைக்காக வைக்கப்படவுள்ளன.

மேலும் தொழில்சார்ந்த செய்முறைக் கூடங்களான நெசவு நெய்தல், தும்பு திரித்தல், மட்பாண்ட பொருள்கள் வனைதல், 'பற்றிக்' வர்ணமிடல், பன்ன வேலை போன்ற செய்முறைகளும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

# நவாலி கொத்துக்கட்டியில் திண்மக் கழிவு அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஒக். 5

கடந்த 8 மாதங்களாக மக்களுக்குத் தீங்கு ஏற்படுத்தி வந்த நவாலி கொத்துக்கட்டி திண்மக் கழிவுகள் 80 வீதமானவை வலி. தென்மேற்குப் பிரதேச சபையால் அகற்றப்பட்டன.

மிகுதித் திண்மக்கழிவுகள் அடுத்தவாரமளவில் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நவாலி கொத்துக்கட்டிப் பகுதியில் உள்ள திண்மக் கழிவு மற்றும் வீதியின் இருமருங்கிலுமுள்ள பற்றைக்காடுகள் தொடர்பாகப் பிரதேச சபைத் தலைவர் அ.ஜெபநேசனிடம் கேட்ட போது;

திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டு டெங்கு நோயில் இருந்து மக்களை காப்பதற்கான முதற் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் சபையில் தீர்மானம் மேற்கொண்டு வீதியின் இரு மருங்கிலுமுள்ள பற்றைகள் அகற்றப்படும்.

அத்துடன் அந்தப்பகுதிக் கேணியைச் சுத்தப்படுத்தி கால்நடைகளின் குடிதண்ணீர் பாவனைக்கு விடப்படும். அருகில் உள்ள கிணறும் புனரமைப்புச் செய்யப்பட்டு வழங்கப்படும்- என்றார்.

நவாலி கொத்துக்கட்டித் திண்மக்கழிவு அகற்றப்பட்டது குறித்து மானிப்பாய் வங்கி அதிகாரி கந்தவனம் சுதனன் கருத்துத் தெரிவிக்கையில்;

மக்களது நியாயமான கோரிக்கைகளைச் செவிமடுத்து அதற்கான நடவடிக்கையை மானிப்பாய் பிரதேச சபைத் தலைவர் மேற்கொண்டுள்ளார். வினைத் திறனான நவாலி மக்கள் பாராட்டியுள்ளனர்- என்றார். (த-302)

உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...

City & Guilds

சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Engineering
Qualifications



Civil Engineering
Quantity Surveying
Electrical & Electronics
Motor Vehicle
Mechanical

Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

0214 66 66 99 / 0771 067 394



SIPL JOB NETWORK
LEARNING PLUS
WORK PLACE LEARNING

SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
No. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

Colombo | Kandy | Jaffna
தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

## இலவச வினாத்தாள் திருத்தற்சேவையுடன் புலமைச்சுடர் பிரதிகளைச் சந்தாமூலம் பெற விரும்பும் பெற்றோர்களே.....

**புலமைச்சுடர் 2012-2013**

திங்கள் தோறும்

ஒரு வார ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் முன்னோடிக் கையேடு

இக் கையேட்டைப் பெறுவதில் இடர்பாடுகள் அல்லது நீங்கள் வசிக்கும் இடங்களிலுள்ள விற்பனை முகவர்களிடம் இருந்து பிரதிகளைப் பெறுவதில் சிரமங்கள் உள்ள தரம் 3, 4 மாணவர்களின் பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு ''புலமைச்சுடர்'' பிரதியைப் பெற்றுக்கொடுக்க விரும்பின் கீழுள்ள முறைகளின் ஊடாக பெறக்கூடிய வாய்ப்பினை புலமைச்சுடர் விநியோகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாமாக 40 பிரதிகள் வெளிவரவுள்ளன. ஒரு பிரதி 15 ரூபாப்படி 40 பிரதிகளுக்கும் 600 ரூபாவும், தபால் கட்டணமாக 400 ரூபாவும் மொத்தமாக 1000 ரூபாவை காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது வங்கிக் கணக்கில் வைப்பு செய்வதனூடாகவோ உங்கள் இல்லங்களில் இருந்தே கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை

| காசுக்கட்டளையாயின்- | வங்கி வைப்பாயின் - |
|---|---|
| ''கணக்காளர், Landmark Enterprises'' என்ற பெயருக்கு கிராண்ட்பாஸ் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் மாற்றக்கூடியவாறு | (126- 1- 001-0-3452799) என்ற மக்கள் வங்கி இலக்கக் கணக்கில் Landmark Enterprises, கிராண்ட்பாஸ்) |

மேற்கூறிய முறைகளினூடாக அனுப்பிய காசுக்கட்டளை அல்லது பணவைப்பு பற்றுச்சீட்டை கீழுள்ள சந்தாப்படிவத்துடன் இணைத்து ''விநியோக முகாமையாளர், புலமைச்சுடர், 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14.,'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

*புலமைச்சுடர் சந்தாப்படிவம்*

1. பெயர் : ..............................
2. விலாசம் : ..............................
..............................
3. தொ.பேசி இலக்கம் :..............................
4. பிரதிகளின் எண்ணிக்கை:..............................
5. செலுத்தப்பட்ட பணம் : .............................. ரூபா
6. வைப்புச் செய்த முறை : வங்கி / காசுக்கட்டளை

மேலதிக தொடர்புகளுக்கு - கல்விச்சுடர் : 0716850005/ 0115738855

(இவ்விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்)

### சந்தா பிரதிக்கான வினாத்தாள் திருத்தற்சேவை

சந்தா மூலம் பிரதியைப் பெறும் மாணவர்களுக்கு இலவசமாக வினாத்தாள் திருத்தச்சேவையினை புலமைச்சுடர் கையேடானது ஆற்றவுள்ளது. இக்கையேட்டில் வரும் வினாத்தாள்களுக்கான விடைகளை எழுதி ''கல்விச்சுடர், வினாத்தாள் திருத்தற் சேவை, 85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு 14'' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அவ்வினாத்தாள் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் திருத்தப்பட்டு புள்ளிகளுடன் அடுத்த வாரபுலமைச்சுடருடன் அனுப்பிவைக்கப்படும். இதனால் நீங்கள் இப்பரீட்சைகளில் பெறும் உண்மையான புள்ளிகளை அறிந்து உங்களைத் திருத்திக்கொள்ள இச்சேவை உங்களுக்கு பெரிதும் உதவும் என நம்புகின்றேன். எனவே சந்தா மூலம் பிரதியைப் பெற்று புலமைச்சுடரின் இச்சேவையின் பயனைப் பெறுக.

- ஆசிரியர் -

## Talent Search 2011 - Western Music Sponsored by the Jaffna YMCA

**Calling for applications for a Western Music Talent Search under the following categories:**

- Vocal (Individual)
- Group Vocal
- Instrumental Individual (Individual)
- Group Instrumental

Participants may choose any song or instrumental in Western Music. Numbers for group items are flexible.

Age Categories are as follows:

| | Date of Birth |
|---|---|
| 1. Primary | On or after 31st December, 2005 |
| 2. Junior | On or after 31st December, 2000 |
| 3. Intermediate | On or after 31st December, 1995 |
| 4. Senior | On or after 31st December, 1990 |
| 5. Open | Before 31st December, 1990 |

**Application Form should contain:**
*Full name/ Date of Birth/ Address/ Category/ School/ Telephone*

**Applications close:** *Monday 10th October, 2011, 5.00 p.m.*

**Semi finals:** *October 15th, 2011.*

**Entries should be sent to:**
*The Coordinator, Western Music Talent Search 2011, YMCA, Jaffna.*

## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

மங்கள கர வருஷம் புரட்டாதி மாதம் 19 ஆம் நாள் [06.10.2011] வியாழக் கிழமை, தசமித்திதியும் உத்தராட நட்ஷத்திரமும் கூடிய காலை 7.00 மணி 30 நிமிடம் முதல் 9.00 மணிவரை உள்ள சுபவேளையில்

**S.S.M.S.T**
**ஜிஷான் மொபைல் வேல்ட்**

எனும் கடையினை கோலாகலமாக திறந்து வைக்க ஆண்டவன் அருள் பாலித்துள்ளார் இந்த விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்பு டன் அழைக்கின்றோம்.

பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம். T.P.0213216967

இவ்வண்ணம், தங்கள் நல்வரவைநாடும் திரு,திருமதி ரவி, மிதுலா குடும்பத்தினர்

## மானிப்பாய்இந்துக்கல்லூரி-தேசியபாடசாலை ஆசிரியர்தின வாழ்த்துக்கள்

வலிகாமம் வலயத்தின் முதலாவது தேசிய பாடசாலையாக தரமுயர்ந்து நிற்கும் எமது கல்லூரி அன்னையை இந்நாளில் வணங்குவதுடன்

**1. கடந்த ஆண்டில் க.பொ.த சாதாரண தரத்தில் 84% சித்தியை பெற்றுத் தந்தமைக்கும்**

**2. விளையாட்டுத்துறையில் உதைபந்தாட்டத்திலும் பூப்பந்தாட்டத்திலும் மாகாண மட்ட வெற்றிகளைப் பெற்றமைக்கும்**

மாணவர்களைப் பாராட்டுவதுடன் அதிபர், ஆசிரியர்களையும் ஆசிரியர் தின நாளில்·வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம், மானிப்பாய் இந்துக்கல்லூரி.**

## பணிநிலை வேண்டுகை

**பொதுச் செயலாளர்**
General secretary

தகைமைகள்:
- ★ பட்டதாரியாக இருத்தல் வேண்டும்
- ★ நிர்வாகத்துறையில் குறைந்தது 5 வருட அனுபவம்
- ★ 30 - 50 வயதுகுட்பட்டோர் விரும்பத்தக்கது
- ★ சரளமான ஆங்கில அறிவு.
- ★ சிங்களம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்

ஆற்றலும் திறமையுமுள்ள விண்ணப்பதாரிகள் தகுந்த ஆவணங்களுடன் நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

## நலிவுற்ற வறியமக்களின் மேம்பாட்டு நிதிக்காக Lions Club of Nallur - District-306 B1

வழங்கும்

நல்லூர் ராகம்ஸ் இசைக்குழுவின் இனிய இசையில்

**மாபெரும் இசைப் பெருவிழா**

**''SUPER SINGER 3'' ன் 6 கலைஞர்கள் பங்கேற்கும்**

VIJAY டிவி புகழ்

### ரிக்கற் கிடைக்கும் இடங்கள்

| | | |
|---|---|---|
| Win Tech<br>187, பரமேஸ்வராச்சந்தி,<br>யாழ்ப்பாணம்.<br>021 4921184 | உயாதரகல்விக்கு...<br>IIS City Campus,<br>சிவன் பண்ணைவீதி.<br>யாழ்ப்பாணம். | மனோஅம்பீஸ் பான்சி கவுஸ்,<br>அந்தோனியார் கோயில் முன்பாக,<br>யாழ் வீதி,<br>மானிப்பாய். |
| சீமாட்டி ஜவுளி சமுத்திரம்<br>மின்சாரநிலைய வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 2228564 | வாணி ரெக்ஸ்ரைல்ஸ்<br>பெரியகடை வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 2225578 | செலிங்கோ V.I.P இன்சூரன்ஸ்<br>K.K.S வீதி,<br>சுன்னாகம்.<br>021 2240259 |
| சாரங்கா நகை மாடம்<br>கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 2226972 | சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்<br>பெரிய கடை வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 2222063 | மொடேன் P.C System<br>18,K.K.S வீதி,<br>சுன்னாகம்<br>077 2500306 |
| எஸ்.பி.என்.மோட்டோர்ஸ்,<br>145, ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 2229484 | அசோகா நகைமாடம்<br>கஸ்தூரியார் வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>021 2226290 | ரெக்னல் கொம்யூட்டர் அன்ட் ரெக்னோளஜி<br>கொடிகாமம் வீதி, நெல்லியடி.<br>021 2262526 |
| தேனு களஞ்சியம்<br>திருநெல்வேலி சந்தை,<br>திருநெல்வேலி.<br>021 2226013 | பூபாலசிங்கம் புத்தகசாலை<br>ஆஸ்பத்திரி வீதி,<br>யாழ்ப்பாணம். | செலிங்கோ V.I.P இன்சூரன்ஸ்<br>ஸ்ரான்லி வீதி,<br>யாழ்ப்பாணம்.<br>077 3633145 |

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் 08.10.2011 - சனிக்கிழமை பி.ப 03.00

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீர்வுக்கான பேச்சுக்களைக் குழப்பும் உத்திகளில் ஒன்று அரங்கேறுகிறது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இனி எந்தவொரு பேச்சுக்களையும் அரசாங்கம் நடத்தக்கூடாது. அந்தக் கட்சியை உடனடியாகத் தடை செய்ய வேண்டும். அதன் அனைத்து உறுப்பினர்களையும் விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

இவ்வாறு ஆக்ரோசத்துடன் பொங்கி எழுந்துள்ளது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்.

புலிப்பயங்கரவாதிகளின் அரசியல் பிரிவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அவர்கள், தொடர்ந்தும் இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உண்டாக்கும் வகையிலேயே செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்-

தேசிய அரசியலில் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு, நாட்டுக்கு எதிராக அவர்கள் செயற்படுவதை இனியும் அனுமதிக்க முடியாது. நாட்டுக்கு எதிரான தகவல்களைக் கூட்டமைப்பினர் ஐக்கிய நாடுகள் சபைக்கு வழங்கி இருப்பின் அவர்களை விசாரணை செய்து தண்டனை வழங்க வேண்டும். நாட்டுக்கு எதிராகச் செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும், தராதரம் பார்க்காமல் அவர்களைத் தண்டிப்பதே உகந்தது, சிறந்தது- என்று ''தீர்ப்பு'' வழங்கியுள்ளார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகரா.

இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள், என்றென்றும் இரண்டாந்தரப் பிரசைகளாக, தாம் வழங்கும் அற்ப சொற்ப (உரிமைகளைத் தானும் இன்றி) சலுகைகளைப் பெற்றுக்கொண்டு தலையைக் கூட உயர்த்தாமல் அடங்கி ஒடுங்கி வாழ்ந்தாக வேண்டும் என்பதே சிங்கள-பௌத்த பேரினவாதிகளின் கோட்பாடுகளும் அழிவற்ற நிலைப்பாடுகளும் ஆகும்.

கடந்த ஆறு தசாப்தங்களுக்கும் கூடுதலாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சி, மீண்டும் தட்டித் தவழ்ந்து ஆரம்பமாகி உள்ளது. அரசாங்கத்துக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் தொட்டும் விட்டும் பதினொரு தடவைகள் நடைபெற்றுள்ளன.

அதனூடு எந்தப் பெறுபேறும் முகிழ்க்காத நிலையில், நியாயமான தீர்வு ஒன்று கண்டறியப்பட வேண்டும் என்ற சர்வதேச நாடுகளின் அழுத்தம் தலைகாட்டிய சூழமைவில், அதனைக் கருக்கிப் பொசுக்கிவிடும் பேரினவாத சக்திகளின் சதித்திட்டமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்ற வேகாரமான உத்தி.

ஐக்கிய நாடுகள் சபை என்பது உலகப்பொதுமன்றம். அதில் அங்கம் வகிக்கும் நாடுகளில் நடத்தப்படும் இன ஒடுக்கல் போன்ற காலத்தால் கழற்றி வீசப்பட்ட - மனித சமுதாயத்துக்கு விரோதமான - அநாகரிகச் செயல்களுக்கு எதிராக அச்சபையிடம் நியாயம் கோருவது தவறன்று.

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளைத் தானும் வழங்கவிடாது பதவிக்கு வரும் பெரும்பான்மை இன அரசுகளைத் தடுத்துவரும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்ற அமைப்புகள், சந்தர்ப்பம் பார்த்து, அரசு-கூட்டமைப்பின் அரசியல் பேச்சு வார்த்தையைக் குழப்பிக் கொட்டிவிடுவதற்கென வெட்டும் பொறிக்கிடங்கே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடனடியாகத் தடைசெய்ய வேண்டும் என்ற நச்சு மந்திரம்.

ஜனநாயக நாடென்பதால், தமக்குரிய உரிமைகளை வழங்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் கோரிக்கை. ஆனால் அதனை சீரணித்துக் கொள்ளும் மனப்பக்குவம், பேரினவாதிகளிடம் வற்றிவரண்டு போனமையே இன ஒடுக்கலுக்குப் பின்புலம்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முளையிலேயே மிதித்து நசுக்குவது பேரினவாதிகளுக்குக் கைவந்த கலை என்றாகி விட்டது. இதனை நாம் சொல்லவில்லை. கடந்த கால அரசியல் பதிவுகள் அதனை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

தெற்கின் வாக்கு வலிமையுடன் ஆட்சிக்கு வந்த அரசியல் கட்சிகள் எதுவும் தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்கக் கூடாது என்பதில் பேரினவாதிகள் சந்ததி சந்ததியாக வளர்ந்து வீரியத்துடன் உயர்ந்து நிற்கிறார்கள்.

பேரினவாதிகளைச் சாராமல் தாம் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பதனைச் சீரணித்துக் கொண்ட பிரபல சிங்கள அரசியல் தலைவர்கள், அவர்களிடம் கட்டுண்டு போவதும், தாமும் அதில் மூழ்கி வேகம் கொள்வதும் இந்த நாட்டின் அபச்சார அரசியல் என்பது எவருக்கும் தெரிந்த, புரிந்த ஒன்றே.

தாங்கள் பதவிக்கு வரவேண்டும், அதனைத் தக்கவைத்துச் சுகபோகத்தைத் தொடரவேண்டும் என்று நினைத்துத் தமது முந்திய (சுய) நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்ட இடதுசாரி மற்றும் நடுநிலைவாத போக்குள்ள சிங்கள அரசியல் தலைவர்களின் பட்டியல் மிக நீளமானது.

இத்தகைய ஒரு வரட்டுத்தனமான அரசியல் சூழ்நிலையில், பேரினவாத சக்திகள், அமைப்புகள் தங்கள் செல்வாக்கை நாளும் பொழுதும் வளர்த்து, ஆட்சிக்கு வருபவர்களைத் தங்கள் தயவில் தங்கியிருக்கச் செய்யும் வித்தையைத் தொடர்கிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்கள், பேரினவாத சக்திகளைத் தூண்டிவிட்டு திரைக்குப் பின்னால் தாம் நினைத்ததை ஒப்பேற்றும் வித்தையையும் புரிந்ததுண்டு.

இன்னொரு வகையில், தமது அதிகாரத்தை நீட்சியாக்கும் நோக்குடன் தாம் பேரினவாத சக்திகளின் எடுப்பார் கைப்பிள்ளை இல்லை என்று காட்டிக் கொண்டு, அவற்றைக் கட்டியணைத்து அவர்களின் தாளத்துக்கு ஏற்ப ஆடுவதும் ஒருவகை.

வெசாக் கொண்டாட்டங்களின் போது விசேட மேடையமைத்து, பொம்மைகளை முன்னிருத்திப் பின்னால் நின்று, அவற்றைத் தமது விருப்பத்துக்கு ஏற்ப ஆட்டுவிக்கும் ''றூகட நட்டும்'' எனப்படும் பொம்மை ஆட்டத்தில், யார் அவற்றை இயக்குகிறார்கள் என்பது இரகசியம்.

தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தடைசெய்ய வேண்டும் என்ற மந்திரத்தை உச்சாடனம் செய்வதன் பின்னணி என்ன, எது என்பது வெளிப்படாமலா போகும்?

# சட்டபூர்வமான உறுதி இருக்கையில் காணி மீள்பதிவு நடவடிக்கை எதற்கு?

## மீளாய்வு செய்யக் கோருகிறது தமிழரசுக் கட்சி

யாழ்ப்பாணம், ஒக். 5

சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்ட உரிமை உறுதி இருக்கையில் ஏன் இந்தக் காணி மீள் பதிவு? தற்போதைய நிலையில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட்டால் பல்லாயிரக் கணக்கான மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவர். எனவே இதனை மீளாய்வு செய்யவேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி காணி ஆணையாளர் நாயகம் ஆர்.பி.ஆர். ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சி.வி.கே. சிவஞானம் அனுப்பிவைத்துள்ள அந்தக் கடித்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:

''வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணி தொடர்பான முகாமைத்துவத்தை விதிமுறைப்படுத்தல் சம்பந்தமான 2011/04 ஆம் இலக்க சுற்றறிக்கை தொடர்பாக பின்வருவனவற்றைத் தயவுசெய்து தெளிவுபடுத்தக் கோருகிறோம்.

✱ சட்டபூர்வமாகப் பதிவுசெய்யப்பட்ட உரிமை உறுதி இருக்கையில் ஏன் மீள்பதிவு அவசியமாகிறது?

✱ அவ்வாறு செய்ய வேண்டுமாயினும் கூட ஒட்டுமொத்தமாக அவசர அவசரமாக ஏன் இதை நடைமுறைப்படுத்த வேண்டும்?

✱ இந்த திட்டத்தின் விளைவுகளை ஆய்ந்து அறிய நியாயமானகால அவகாசம் வழங்கும் பொருட்டு இறுதி நிபந்தனை திகதியை ஏன் நீடிக்கக் கூடாது?

✱ உரிமை மாற்றங்கள் இடம்பெறும் சந்தர்ப்பங்களில் ஏன் இந்த திட்டத்தை அமுல் செய்யக்கூடாது?

தமிழ் மக்களின் கலாசார பாரம்பரியங்களின் அடிப்படையில் தேச வழமைச்சட்டத்தினால் வழங்கப்பட்ட முன்பாதுகாப்பு ஏற்பாடுகளின் நிலை என்ன? இந்த நடவடிக்கைகள் அவ்வாறான உரிமைகளை இல்லாது ஒழிப்பதற்கான மறைமுகச் செயற்பாடு என்ற நியாயமான அச்சம் மக்கள் மத்தியில் உண்டு.

புலம்பெயர்ந்த ஒருவர் வலுவான உரிமை உறுதியைக் கொண்டிருக்கையில் புதிதாக ஓர் உறுதியை ஏன் பெறவேண்டும்.இந்தத் திட்ட அமுலாக்கத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் இந்தத்திட்ட அமுலாக்கம் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டிருக்கவில்லை என்பதை தங்கள் அவதானத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றோம். விவரங்களை விளக்குவதற்காக எந்தவொரு அரச உத்தியோகத்தரும் மக்களை நேரடியாகச் சந்திக்கவில்லை. தங்களிடம் வருபவர்களுக்கு மட்டும் கிராம அலுவலர்கள் படிவங்களை வழங்குகின்றனர். இது திருப்தியற்றது. இப்போதைய நிலையில் இந்தத் திட்டம் அமுல் செய்யப்படுமானால் பல்லாயிரம் மக்கள் பெரிய அசௌகரியங்களுக்கு உள்ளாவார்கள் என்பதை ஒவ்வொருவரும் நிச்சயமாக விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

இடப்பெயர்வுகள் மற்றும் மீள்குடியேற்றங்கள் காரணமாகப் பிரச்சனைகள் நிச்சயமாக எழும். அவைகள் ஏற்கனவே அமுலில் உள்ள சட்ட மற்றும் குடியியல் நிர்வாக கட்டமைப்புக்கள் ஊடாகத் தீர்த்துவைக்கப் படலாம். பிணக்குகளோ, பிரச்சனைகளோ இல்லாது சட்டபூர்வமான உரிமை உறுதி வைத்திருப்பவர்களை அசௌகரியப்படுத்துவது தேவையற்றது.

மேற்குறிப்பிட்ட விடயங்களின் அடிப்படையில் இந்த நடைமுறையை முழுமையாக மீளாய்வு செய்யுமாறு கோருகின்றோம் - என்றுள்ளது. (த)

# வடக்கு மாகாண அரச அதிகாரிகளுக்கு கொழும்பில் நவீன வசதிகளுடன் விடுதி

## ஆளுநர் சந்திரசிறி நாளை திறந்து வைப்பார்

யாழ்ப்பாணம், ஒக். 5

வடக்கு மாகாண அரச அதிகாரிகள் கொழும்பு செல்லும்போது தங்குவதற்கான நவீன விடுதி ஒன்று 45 மில்லியன் ரூபா செலவில் இரத்மலானையில் அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கு மாகாண அரச அதிகாரிகள் 8 பேர் மட்டுமே தங்கி இருக்கக் கூடிய வசதி தெஹிவளையில் உள்ள அரச கட்டடத்தில் இருந்தது.

இதனையடுத்து வடக்கு மாகாணக் ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி வடபகுதி அரச அதிகாரிகளின் நன்மை கருதி 25 மில்லியன் ரூபா செலவில் கொழும்பில் இரத்மலானையில் காணி ஒன்றைக் கொள் வனவு செய்து 20 மில்லியன் ரூபா செலவில் நவீன வசதிகள் கொண்டதாகப் புதிய விடுதி ஒன்றை அமைத்துள்ளார். மேற்படி கட்டடத் தொகுதி நாளை வியாழக்கிழமை திறந்து வைக்கப்படும் என வடக்கு மாகாண பொது நிர்வாக பிரதிப் பிரதம செயலாளர் தி. இராசநாயகம் அறிவித்துள்ளார்.

வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் ஆண், பெண் அரச அதிகாரிகள் 50 பேர் ஒரே தடவையில் இங்கு தங்கக்கூடிய நவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பிரதான வாயில் ஊடாக உள்ளே சென்று 20 வாகனங்கள் தரிப்பதற்கு போதிய இடவசதியும் செய்யப்பட்டுள்ளது.

கன்ரீன், ஓய்விட வசதி, பத்திரிகை வாசிப்புப் பகுதி என்பனவும் இதில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் அரச அதிகாரிகள் பிரதான பாதையில் இருந்து அலுவலக விடுதிக்குச் செல்லப் பிரத்தியேகமாக ஓட்டோ வாகன வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்திற்கான அரச அதிகாரிகளின் நன்மை கருதி அமைக்கப்பட்ட நவீன விடுதி நாளை முதல் இயங்கும் என்றும், இந்தக் கட்டடத் தொகுதி இரத்மலானை இந்துக் கல்லூரிக்கு முன்பாக அமைந்துள்ளது எனவும் வடக்கு மாகாணப் பிரதி பிரதம செயலாளர் தி.இராசநாயகம் மேலும் தெரிவித்தார். (த-302)

# வைத்தியசாலை ஆய்வு கூடங்களில் பயன்படுத்தப்படாத உபகரணங்கள்

## சுகாதார அமைச்சுப் பணிப்பாளர்

கொழும்பு,ஒக்.5

நாட்டில் உள்ள வைத்தியசாலைகளின் ஆய்வு கூடங்களுக்கு வழங்கப்பட்ட பெருமளவு உபகரணங்கள் பயன்படுத்தாமல் இருப்பது குறித்துச் சுகாதார அமைச்சின் ஆய்வு கூடப் பணிப்பாளர் கவலை தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகூடப் பரிசோதனைகளை வைத்தியர்கள் தனியார் ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்துவதால் வைத்தியசாலை ஆய்வுகூட உபரணங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

வருங்காலங்களில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியினால் ஆய்வு கூடம் தொடர்பாக வைத்திய நிபுணர், வைத்திய அதிகாரிகள், ஆய்வுகூட உத்தியோகத்தர் போன்றோருக்கு மாதாந்த கூட்டம் ஒன்றை நடத்தி அதன் அறிக்கையினை சுகாதார அமைச்சின் ஆய்வுகூடப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளார். (எ-207)

# ஜெய்காவின் உதவித் திட்டங்களை அமைச்சர் பஸில் திறந்து வைத்தார்



யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ 'ஜெய்கா' நிறுவனத்தின் நிதி உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

அச்சுவேலியில் 56 மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்ட தென்னம் நாற்றுப் பண்ணை மற்றும் தென்னை அபிவிருத்தி சபைக்கான கட்டடத் தொகுதி ஆகியன திறந்து வைக்கப்பட்டன. தென்னை நாற்று மேடைக்கு 24 மில்லியன் ரூபாவும் அதற்கான உபகரணங்களுக்கு 8 மில்லியன் ரூபாவும் அலுவலகக் கட்டடத் தொகுதிக்கு 24 மில்லியன் ரூபாவும் 'ஜெய்கா' நிறுவனத்தினால் ஒதுக்கப்பட்டிருந்தது.

நாவாந்துறையில் கடல் அட்டை வளர்க்கப்படும் இடத்தையும் படகில் சென்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பார்வையிட்டார். ஜெய்கா நிறுவனம் பிரதிநிதி டோக் கியோகிற்ற மோட்டா (Kitamado) வினால் கடல் அட்டை வளர்ப்புத் தொடர்பாக அங்கு விளக்கம் அளித்தார்.

ஜெய்கா நிறுவனத்தின் நிதியுதவியில் குருநகர், மண்டைதீவு ஆகிய இடங்களிலும் கடல் அட்டை வளர்க்கப்படுகிறது. இந்த மூன்று இடத்திலும் கடல் அட்டை வளர்ப்பு 2 மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

யாழ். நகர் 2ஆம் குறுக்குத் தெருவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கடற்றொழில் மற்றும் கடலோடு எந்திரவியல் கல்லூரியையும் அமைச்சர் திறந்து வைத்தார். இங்கு 34 மில்லியன் ரூபா செலவில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 8 மில்லியன் ரூபா செலவில் தளபாட உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 40 இலட்சம் ரூபா செலவில் 2 படகுகள் வழங்கப்பட்டுள்ளன. பரந்தனில் சுமார் 50 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விதை நாற்று மேடைத் திட்டமும் அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி, பெருந்தோட்ட கைத்தொழில்கள் பிரதி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார, யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், ஜெய்கா நிறுவனத்தின் பிரதிநிதிகள், யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆர். ரவீந்திரன் மற்றும் திட்டங்களுடன் தொடர்புடைய திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (உ-14)

வலி.தென் மேற்கில் இயங்கும்

# சனசமூக நிலையங்களுக்கு ஜனவரியில் புதிய நிர்வாகம்

நவாலி, ஒக்.5

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் சகல சனசமூக நிலையங்களும் 2012 ஆம் ஆண்டு ஜனவரியில் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய வேண்டும். இந்தத் தெரிவில் இளைஞர், யுவதிகள் கூடுதலாக உள்வாங்கப்பட வேண்டும்.

இவ்வாறு வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாச விசேட பொதுக் கூட்டத்தில் சனசமூகநிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பகீரதன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மானிப்பாய் பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் வலி .தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாச தலைவர் எப்.சர்வானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் பகீரதன் மேலும் கூறுகையில்,

பல சனசமூக நிலையங்கள் அங்கத்தவர்களின்றி இயங்கி வருகின்றன. மேலும் சில நிர்வாக சபைக் கூட்டமோ பொதுக் கூட்டமோ நடைபெறுவதில்லை. இன்னும் சில சனசமூக நிலையங்கள் இந்த வருடத்துக்குரிய நன் கொடைப் பணங்களைப் பெறுவதில்லை.

இந்தப் பிரதேச சபையின் கீழ் 80 சனசமூக நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் பல எவ்வித அபிவிருத்திப் பணிகளையோ செயற்பாடுகளையோ மேற்கொள்வதில்லை. ஆதலினால் அடுத்த ஆண்டளவில் "பிரதேச உப அலுவலகங்கள்" அமைக்கப்பட வேண்டும். அவை பண்டத்தரிப்பு கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், மானிப்பாய் பட்டினம், கிராமம் என நான்கு சமாசங்களாகச் செயற்படும். இவற்றுக்கு உறுதுணையாக பிரதேச சபைக்குத் தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இருப்பார்கள்.

இந்தச் சமாசங்கள் இயங்காதிருக்கும் சனசமூக நிலையங்களை இயங்க வைத்தல் , உள்ளூராட்சி வாரங்களை நடத்துதல், மக்களை அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடச் செய்தல் டெங்கு ஒழிப்பு , வீதி அகலிப்பு, புனரமைப்பு என்பவற்றில் பங்கு பற்றச் செய்தல் என்பவற்றை மேற்கொள்வதற்கு ஊக்கமளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (த-100)

முதியோர் நலனுக்காக ...



சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி இடம்பெற்றுவரும் கொடி விற்பனையில் அதன் முதலாவது கொடியை மானிப்பாய் இலங்கை வங்கிக்கிளை முகாமையாளர் க.இலட்சுமண சர்மாவுக்கு முதியோர் பேரவைத் தலைவர் க.சிவகுமாரன் அணிவிக்கிறார். (த-100 )

# மானிய உரம் விநியோகம்

தென்மராட்சி, ஒக்.5

தென்மராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கான மானிய உர வகைகள் அந்தந்தக் கமநல சேவைகள் நிலையத்தில் நெற்செய்கையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேச கமக்கார அமைப்புக்கள் தத்தமது பிரிவு நெற்செய்கையாளர்களுக்குத் தெரியப்படுத்தி கைதடி, மீசாலை ஆகிய கமநல சேவை நிலையங்களில் விநியோக திகதியைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுளள்ளது. (ம-207)

# முதியோர் நலன்பேணல் நிகழ்வு சனியன்று தெல்லிப்பழையில்

வலி.வடக்கு,ஒக்.5

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வலி. வடக்கு ஓய்வூதியர் நலன்புரி சங்கத்தினால் முதியோர் நலன் பேணல் செயற்பாடு ஒன்று எதிர்வரும் 08 ஆம் திகதி சனிக்கிழமை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி அன்ன சத்திர மண்டபத்தில் நா.தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. காலை 9.30 மணியில் இருந்து முற்பகல் 10.30 மணி வரை தெல்லிப்பழை சுகாதார வைத்தியதிகாரி பிரிவினரால் இலவச மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது. இதனைத் தொடர்ந்து நா. தவநாதன் தலைமையில் உளநலம் பேணுதல் தொடர்பான நிகழ்வில் வாழ்த்துரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு திருமுருகனும், அறிமுகவுரையை செயலாளர் சு. ஏழூர் நாயகமும் வழங்குவர்.

உளநலம் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கில் கருத்துரைகளை உளநல ஆலோசகர் கா. வைத்தீஸ்வரன், உளவளத் துணையாளர் திருமதி கிருஷாந்தி உதயசேகர், சமூக உள நல உத்தியோகத்தர் என். ஞானசூரியர் ஆகியோர் வழங்கவுள்ளனர். (த-86)

# சாவல் கட்டில் திண்மக் கழிவுகளை கிரமமாக அகற்ற ஏற்பாடு செய்க

பிரதேச சபைக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.5

சுகாதார வழிமுறைகளைக் கருத்தில்கொண்டு மக்கள் அதிகமாகவும் குடிமனைகள் நெருக்கமாகவும் உள்ள சாவல் கட்டு கிராமத்தில் அன்றாடம் சேரும் திண்மக் கழிவுகளைச் சேரவிடாது கிரமமாக அகற்றுவதற்குப் பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலி.தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினரான எஸ்.பரமகுரு மாதாந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளார்.

குறைந்த விஸ்தீரணத்தைக் கொண்ட சாவல்கட்டு மீனவர் கிராமத்தில் வீடுகள் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளன. அங்கு அதிகமான மக்களும் வாழ்ந்து வருகின்றார்கள். போதியளவு காணியில்லாததினால் அரைப் பரப்பிலிருந்து ஒரு பரப்பிற்குள் வீடுகள் அமைத்துள்ளதினால் அடிப்படை வசதிகளும் அதற்குள்ளேயே அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய கிராமங்களைவிட இங்கு சனத்தொகையும் அதிகம்.

ஒவ்வொரு வீடுகளிலும் நாளாந்தம் சேரும் திண்மக் கழிவுகளைச் சேர்த்து வைப்பதில் மக்கள் பெரும் சிரமங்களுக்குள்ளாகின்றார்கள். டெங்குநோய் உட்படக் கொடிய நோய்களின் ஆதிக்கம் அதிகரித்துவரும் இந்த நிலையில் சுகாதாரத்திற்குப் பங்கம் ஏற்படலாம் என்று மக்கள் அஞ்சுகின்றார்கள்.

எனவே இந்தக் கிராமத்தில் வாழும் மக்களின் நலன் கருதியும் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டும் இந்தக் கிராமத்தில் சேரும் திண்மக் கழிவுகளைச் சேரவிடாது ஒழுங்காக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உறுப்பினர் பரமகுரு கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார். (த-115)

# விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஒக்.5

நல்லூரடியில் ஹன்ரர்- மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற நண்பர்கள் இருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஹன்ரர் சாரதி வாகனத்தை அந்த இடத்தில் விட்டுத்தப்பியோடிவிட்டார்.

இந்தச் சம்பவம் நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்பாக நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது. சம்பவத்தில் துன்னாலை கிழக்கு, கரவெட்டியைச் சேர்ந்தவர்களான செ.சசிகுமார்(வயது20) செ.செல்வராசா (வயது20) ஆகிய நண்பர்கள் இருவருமே படுகாயமடைந்தனர். அவர்களில் சசிக்குமாரின் கால் முறிந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.சம்பவ இடத்தில் யாழ். பொலிசார் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். ஹன்ரர் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். (த-4)

# பழைய பூங்காவில் சட்டத்தை மீறும் எந்தச் செயற்பாடுகளும் இடம் பெறா

அரச அதிபரிடம் அமைச்சர் பஸில் உறுதி

யாழ்ப்பாணம், ஒக்.5

பழைய பூங்கா புனரமைப்பின் போது சட்டத்தை மீறும் வகையில் எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படமாட்டாது. அதனை அழகுபடுத்தும் வேலைகளே மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

கடந்த மாதம் 28 ஆம் திகதி வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் பணிப்புக்கமைய பழைய பூங்காவின் சுற்றுமதில் யாழ். மாநகர சபையால் இடித்து அழிக்கப்பட்டது. இதனைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவே மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ வருகை தந்திருந்தார். இதன் போது அரச அதிபர் பழைய பூங்கா விடயம் தொடர்பாக அமைச்சர் பஸிலுடன் கலந்துரையாடினார்.

பழைய பூங்காவின் சரித்திரத்தை பாதுகாத்து அதன் தொன்மையைப் பாதிக்காத வகையிலேயே பூங்காவின் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும். அத்துடன் தொல்பொருள் அடையாளம் அழிக்கப்படாமலே வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனை அழகுபடுத்திப் பாதுகாக்கும் நோக்கத்திலேயே இந்தப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளன என பஸில்ராஜபக்ஷ கூறியதாக அரச அதிபர் தெரிவித்தார். (த-15)

# ‘பார்’களில் மதுபானம் விற்பனை செய்த வயது குறைந்த 8 இளைஞர்கள் கைது

## நீதிமன்றில் அவர்களுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ். நகர் பகுதியில் உள்ள மதுபானச்சாலைகளில் மது விற்பனை செய்த 21 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள் 8 பேர் யாழ். மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

இந்த வழக்கை விசாரித்த யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா குற்றவாளிகளைத் தலா 4 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்துமாறும் தண்டப் பணம் செலுத்தத் தவறின் இரண்டு மாதகாலச் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் தீர்ப்பளித்தார். அத்துடன் இந்த வழக்கின் போது சமுகம் அளிக்கத்தவறிய ஒருவருக்குப் பிடியாணை பிறப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என். கிருபாகரன் தெரிவிக்கையில்,

21 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் புகைப்பொருள்கள் மற்றும் மதுபானங்கள் விற்பனை செய்வது சட்டரீதியாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே பெற்றோர் இது தொடர்பாகக் கூடிய கவனம் எடுக்க வேண்டும்.

இவ்வாறு மது விற்பனையில் ஈடுபட்ட 21 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் 8 பேரே நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு அபராதம் செலுத்தியுள்ளனர். எதிர்காலத்தில் பெற்றோர் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எமது திணைக்களம் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. - என்றார். (த-313)

# பெண் பொலிஸார் மீது பாலியல் துன்புறுத்தல் பொய்யான செய்தி

## மறுக்கிறார் சமன் சிகேரா

யாழ்ப்பாணம், ஒக்.5

பெண் பொலிஸார் ஒருவரைப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாகக் கூறப்படும் யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தியில் எந்த உண்மையும் இல்லை.

இவ்வாறு அடியோடு மறுக்கிறார் யாழ்.பொலிஸ் நிலையத் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேரா.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் பெண் பொலிஸ் ஒருவரை அந்த நிலையத்தை சேர்ந்த பொலிஸார் மூவர் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியமை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு யாழ். மாவட்டப் பிரதி பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்தை தெரிவித்துள்ளார் எனச் சில இணையத் தளங்களில் செய்தி வெளியாகி இருந்தது.

இந்த விடயம் தொடர்பாகக் கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். குறித்த செய்தி முழுப் பொய். அதில் எந்த உண்மையும் இல்லை. அந்த செய்தி குறித்து நாம் எமது கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம் எனவும் சமன் சிகேரா குறிப்பிட்டார். (த-14)

# மாணவருக்கு சிகரெட் விற்ற வர்த்தகர்கள் 7 பேர் மாட்டினர்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.நகரப் பகுதியில் 21 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்து வந்த வர்த்தகர்கள் ஏழு பேர் யாழ். நீதிமன்றில் 28 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

யாழ். நகரிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு இவை விற்பனை செய்யப்பட்டுள்ளன. பாடசாலை முடிந்த பின்னர் சிவில் உடையில் ஒன்று கூடும் மாணவர் கூட்டத்தினரே பாடசாலைகளை அண்மித்த பகுதிகளிலும், சிற்றுண்டிச்சாலைகளின் பின்புறமாகவும் ஒன்று கூடி வர்த்தக நிலையங்களில் சிகரெட் வாங்கிப் புகைத்து வந்துள்ளனர். வர்த்தகர்களும் சட்டத்தை மீறி மாணவர்களுக்குச் சிகரெட் விற்பனை செய்து வந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.மதுவரிப்பரிசோதகருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொண்ட நடவடிக்கையின்போது குறித்த வர்த்தகர்கள் ஏழு பேர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர்.


குறித்த ஏழு பேருக்கு எதிராகவும் யாழ்.நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. குறித்த ஏழுபேரும் தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டமையால் ஒவ்வொருவருக்கும் தலா 4 ஆயிரம் ரூபாவீதம் 28 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார் நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா. அனைவரும் அபராதம் செலுத்திச் சென்றனர்.

இதேவேளை - மது போதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரமின்றி, தலைக்கவசமின்றி வாகனம் செலுத்தியமை ஆகிய குற்றங்களைப் புரிந்த நபர் யாழ்.நீதிமன்றில் 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்தினார்.

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு வாகனம் செலுத்திச் சென்றவரே பொலிஸாரால் வழக்குப்பதிவு செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார்.

குற்றத்தை ஏற்றுக்கொண்ட அவருக்கு மது போதையில் வாகனம் செலுத் தியமைக்காக மூவாயிரத்து 500 ரூபாவும், சாரதி அனுமதிப்பத் திரமின்றி வாகனம் செலுத்தியதற்காக இரண்டாயிரத்து 500 ரூபாவும், தலைக்கவசம் இன்றி வாகனம் செலுத்திச்சென்றமைக் காக 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (த-4)

## நினைவுடன்...



பெருமை: யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் வாழ்நாள் பேராசிரியர் அமரர் செல்லத்துரை சிவஞானசுந்தரத்தின் (நந்தி) நினைவுப் பேருரை கடந்த திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. இதில் நினைவுப் பேருரை நிகழ்த்த வருகை தந்த சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் பேராசிரியர் வி.அரசு கைலாசபதி கலையரங்குக்கு அழைத்து வரப்படுகிறார். (த)

# நுண்கலைப் பீடத்தில் வகுப்பு ஒழுங்கில்லை

## மாணவர் குற்றச்சாட்டு; அறைகள் பற்றாக்குறை என்கிறார் பீடாதிபதி

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத்தின் விரிவுரைகள் கடந்த மாதப் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டபோதும் வகுப்புக்கள் ஒழுங்காக நடப்பதில்லை என்று மாணவர்கள் பலர் உயதனுக்குத் தெரியப்படுத்தினர்.

நுண்கலைப்பீடத்தில் வகுப்பறைகள் போதாமலுள்ளதன் காரணமாகச் சில இடர்பாடுகள் இருந்தபோதும் மதியம் வரைக்குமான வகுப்புகள் நடைபெற்று வருகின்றன என்று கலைப்பீடாதிபதி பேராசிரியர் க.ஞானகுமாரன் தெரிவித்தார்.

எனினும், இசைத் துறையில் இதுவரை விரிவுரையாளர்களிற்கோ மாணவர்களிற்கோ சரீயான நேர அட்டவணை வழங்கப்படாததால் கடந்த மூன்று வாரங்களாக விரிவுரைகள் எவையும் ஒழுங்காக நடத்தப்படவில்லை என்று சில விரிவுரையாளர்கள் தெரிவித்தனர். துறைத் தலைவரின் அசமந்தமே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இதனால் தென்மராட்சி, வடமராட்சி, தீவகம் போன்ற தூர இடங்களில் இருந்து மருதனார் மடத்துக்கு வரும் மாணவர்களும் விடுதிகளிலும் தனியார் வீடுகளிலும் தங்கியிருக்கும் வெளி மாவட்ட மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

நடனத்துறையிலும் சித்திரமும் வடிவமைப்பும் துறையிலும் விரிவுரைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றபோதும் இசைத் துறையில் மட்டும் வகுப்புக்கள் ஒழுங்காக நடைபெறுவதில்லை என்று மாணவர்கள் கூறுகின்றனர்.

"யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தில் விரிவுரைகளையும் பயிற்சிகளையும் வழங்குவதற்கான வகுப்பறைகள் போதமாலுள்ளன. அரசுக்கு இது பற்றிப் பல தடவைகள் தெரியப்படுத்திய போதும் இன்னும் அவை நிறைவேற்றப்படவில்லை. இந்த நிலையில் மதியத்துக்கு முன்னர் சகல வகுப்புக்களையும் நடத்த முடியாத நிலை இருக்கிறது. ஆனாலும் சில விரிவுரையாளர்கள் மதியத்துக்கு முன்னரே தமது வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டும் என்று கூறுகின்றனர். இதனாலேயே சிலசமயங்களில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. எனினும் கடந்த வாரம் இந்த விடயம் பற்றிக் கலந்துரையாடப்பட்டுத் தீர்வு காணப்பட்டது. தற்போது நுண்கலைப்பீடத்தில் சகல விரிவுரைகளும் நடைபெறுகின்றன. மாலைவரை சுழற்சிமுறையில் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன" என்றார் கலைப்பீடாதிபதி.

ஆனால், தமக்கு வகுப்புக்கள் நடத்தப்படுவதில் தொடர்ந்தும் குழப்பம் நிலவி வருவதாக மாணவர்கள் நேற்றும் தெரிவித்தனர். (உ-4)

# நாகதம்பிரான் உற்சவம் சாதாரண பூசைகளுடன்

யாழ்ப்பாணம், ஒக்.5

நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இந்த முறை சாதாரண பூசை வழிபாடுகளுடன் நிறைவு பெறும் என ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க நாகர் கோயில் பூர்வீக நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் பதினொரு நாள்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுவது வழமை.

2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை நாட்டு நிலைமை காரணமாக பூசை வழிபாடுகள் தடைப்பட்டிருந்தன. மீண்டும் 2009 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட போதும், ஆலயம் சேதமடைந்திருந்தமையாலும், பாதுகாப்புக் கட்டுப்பாடுகளாலும் வருடாந்த உற்சவம் சாதாரண பூசை வழிபாடுகளுடன் முடிவுற்றது.

மேலும் ஆலய கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றமையால், இந்த முறை எம்பொருமானின் வருடாந்த உற்சவம் (6.10.2011 தொடக்கம் 16.10.2011 வரை) சாதாரண பூசை வழிபாடுகளுடனே நிறைவு பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (த)

# 37 கிராம சேவையாளர் பிரிவுகளில் வாக்காளர் இடாப்பு மீளாய்வு இல்லை

## 2010 இடாப்பே பயன்படுத்தப்படும்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 37 கிராமசேவகர் பிரிவுகளில் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது. 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலே இந்த 37 கிராம சேவகர் பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும்.

இவ்வாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் உள்ளடங்கும் மாதகல் கிழக்கு (ஜே/150), மாதகல் மேற்கு (ஜே/152), மாரீசன் கூடல் (ஜே/154), பளை வீமன்காமம் வடக்கு (ஜே/236), பளை வீமன்காமம் தெற்கு (ஜே/237), கட்டுவன் (ஜே/238), வறுத்தலைவிளான் (ஜே/241), குரும்பசிட்டி கிழக்கு (ஜே/243), வசாவிளான் மேற்கு (ஜே/245), காங்கேசன்துறை மேற்கு (ஜே/233), காங்கேசன்துறை மத்தி (ஜே/234), காங்கேசன்துறை தெற்கு (ஜே/235),

தென்மாலை (ஜே/240), குரும்பசிட்டி (ஜே/242), மயிலிட்டி வடக்கு (ஜே/246), தையிட்டி வடக்கு (ஜே/247), மயிலிட்டித்துறை தெற்கு (ஜே/248), தையிட்டி வடக்கு (ஜே/249), தையிட்டி தெற்கு (ஜே/250), மயிலிட்டித்துறை வடக்கு (ஜே/251), பலாலிதெற்கு (ஜே/252), பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254), பலாலி வடக்கு மேற்கு (ஜே/255), பலாலி மேற்கு (ஜே/256).

கோப்பாய் தேர்தல் தொகுதியில் வசாவிளான் கிழக்கு (ஜே/244), வசாவிளான் மேற்கு (ஜே/245), இடைக்காடு (ஜே/283), வளளாய் (ஜே/284),

பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் நாகர் கோயில் கிழக்கு (ஜே/423), நாகர் கோயில் மேற்கு (ஜே/424), நாகர் கோயில் தெற்கு (ஜே/425), சுண்டிக்குளம் (ஜே/435),

கிளிநொச்சித் தேர்தல் தொகுதியில் இத்தாவில் (கே.என்/92), முகமாலை (கே.என்/93), வேம்பொடுகேணி (கே.என்/94), கிளாலி (கே.என்/95),

ஆகிய கிராமசேவகர் பிரிவுகளிலேயே 2010 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புகள் மீளாய்வு செய்யப்படாமல் பயன்படுத்தப்படவுள்ளன. இதே வேளை மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் இது வரை குடியமராத மக்கள் தாம் வசிக்கும் பிரதேசங்களில் பதிவு செய்ய வேண்டும் - என்றார். (த-15)

# யாழ்.பல்கலை பட்டமளிப்பை படம் பிடிப்பதற்குத் தடை

## ஊடகங்களுக்குப் பதிவாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பட்டமளிப்பு விழா நாளை வியாழக்கிழமை நடைபெறுகிறது. இதில் இடம்பெறும் நிகழ்வுகளைப் படம் பிடிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நிகழ்வுக்களைப் படம் பிடிப்பதற்கு ஊடகவியலாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்விக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக வரலாற்றில் முதன் முறையாக ஊடகவியலாளர்களுக்கு இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் துணைவேந்தராகப் பதவி யேற்ற பின்னர் நடைபெறும் இந்தப் பட்டமளிப்பு விழாவில் இவ்வாறு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக நிர்வாகத்தின் இந்த நடவடிக்கை மூலம் தம் வாழ்நாளில் மிக உயர்ந்த நிகழ்வாக அமையும் பட்டமளிப்பு விழா நிகழ்வுகளை ஊடகங்கள் வெளியிட முடியாத நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இந்த நிகழ்வில் பட்டம் பெறும் பட்டதாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (த)

# முறையான நடைமுறைகள் இன்றி ரயில் திணைக்களச் சொத்து விற்பனை

முறையான திட்டங்கள் இன்றி ரயில் திணைக்களத்தின் சொத்துக்கள் தனியாருக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் அதற்குக் கடும் எதிர்ப்பை தெரிவிப்பதாகவும் அகில இலங்கை ரயில் சேவையாளர்களின் பொதுச் சங்கம் தெரிவித்துள்ளது.

ரயில் திணைக்களத்தில் இருந்து வருடத்திற்கு 6000 தொன் இரும்புத் துண்டுகள் அகற்றப்படுவதாக அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் சுமதி பால மானவடு தெரிவித்தார்.

இவ்வாறு முறையற்ற விதத்தில் இம்புத்துண்டுகள் விற்பனை செய்யப்படுகின்றமை குற்றச் செயல் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இரும்புத் துண்டுகள் வெளியில் எடுத்துச் செல்லப்படும் போது நிறை கணித்த பின் எடுத்துச் செல்லப்பட வேண்டும் எனவும் வெளியில் எடுத்துச் சென்று நிறை கணிப்பிட்டால் ரயில் திணைக்களத்திற்கு நட்டம் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அக்கிரமம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவிற்கு முறைப்பாடு செய்துள்ளதாக சுமதிபால மானவடு குறிப்பிட்டார்.



## சுவீடனில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த இலங்கையர் நாடு கடத்தப்படவுள்ளனர்

சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளை கட்டம் கட்டமாக நாட்டுக்கு அனுப்பி வைக்கச் சுவீடன் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் இவ்வாறு சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கையர்கள் நாடு கடத்தப்படுவார்கள். போரைக் காரணம் காட்டிச் சட்டவிரோதமான முறையில் பல இலங்கையர்கள் சுவீடனில் அடைக்கலம் கோரியுள்ளனர்.

இலங்கையில் சமாதானமான சூழ்நிலை உருவாகியுள்ளதாகவும் இதனால் அகதிகளை நாடு கடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஒக்.5

வேலணை பிரதேசத்தில் சட்ட விரோதமாக வீட்டில் வைத்துக் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவர் யாழ். மதுவரித் திணைக்களத்தினரிடம் மாட்டிக் கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. வேலணைப் பிரதேசத்தில் சட்ட விரோதமாகக் கசிப்பு தயார் செய்வோர் கடந்த சில மாதங்களாக அதிகரித்து வரும் நிலையில் அந்தப் பகுதி மக்கள் கொடுத்த இரகசிய தகவலை அடுத்து யாழ். மதுவரித் திணைக்களத்தினர் திடீர் சோதனையை நிகழ்த்தினர்.

இதன்போது வீட்டில் வைத்து கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியபோது வழக்கினை விசாரித்த நீதவான் திருமதி ஜோய் மகிழ் மகா தேவா ஒருவருக்கு ரூபா பத்தாயிரமும், இன்னொருவருக்கு ரூபா 15 ஆயிரமும், ஏற்கனவே சட்ட விரோதமாக கசிப்பினை தயார் செய்து குற்றப் பணம் செலுத்திய இன்னொருவருக்கு ரூபா 20 ஆயிரமும் தண்டம் அறவிடுமாறு உத்தரவிட்டார். (எ-313)

## பொது இடங்களில் புகைப் பிடித்த அறுவருக்குத் தண்டம்

பொது இடங்களில் புகைத்தலில் ஈடுபட்டு குற்றங்களை ஒப்புக் கொண்ட 65 சந்தேக நபர்களுக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் 12,000 ரூபா தண்டப்பணம் அறவிட்டுள்ளது.

பேலியகொட பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது குறித்த 6 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

பேலியகொட பொலிஸ் பிரிவில் புகைத்தலுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அல்லாது சந்தேகநபர்கள் பொது இடங்களில் புகைப்பிடித்ததாகப் பொலிஸார் அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துத் தெரிவித்துள்ளனர். (வ)

# 2011 ஆம் ஆண்டு

வாக்காளர்களை பதிவுசெய்யும் வேலைத்திட்டம்

**மீண்டும் சொந்த இடங்களை நோக்கி திரும்ப விரும்புகின்றீர்களா? வாக்களிப்பதற்கு பதிவுசெய்துகொள்ளுங்கள்**

2011 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பை மறுசீரமைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தை நீங்கள் இழந்தீர்களா?

2011-06-01 ஆம் திகதி முதல் இதுவரை கிராம உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுக்கு கணிப்பிடும் விண்ணப்பங்கள் மூலம் தகவல்களை வழங்கும் சந்தர்ப்பத்தை நீங்கள் இழந்தீர்களா?

அவ்வாறானால் உங்களுக்கு இத்துடன் வழங்கப்படும் புதிய விண்ணப்பத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டுக்கு பதிவு செய்ய சந்தர்ப்பம் உண்டு. தேர்தல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள பத்திரிகை விளம்பரத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ள இவ்விண்ணப்பத்தை பூர்த்தி செய்து உங்கள் பகுதி கிராம உத்தியோகத்தரின் கையொப்பத்துடன் உங்களது விண்ணப்பத்தை மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளருக்கு 2011 அக்டோபர் மாதம் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

இல்லாவிட்டால் கபே அமைப்பின் இணைப்பு அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

உங்கள் கிராம உத்தியோகத்தரிடம் பீஸீ விண்ணப்பம் ஒன்று ஒப்படைக்கப்பட்டிருந்தால் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட வேண்டியதில்லை.

வாக்காளர் இடாப்பில் பெயர் உட்படுத்தப்படாவிடின் உங்களுக்கு வாக்களிக்க முடியாது.

தேர்தலில் வாக்களிப்பதற்கு இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள். உங்கள் வாக்குரிமையை பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

கபே அமைப்பின் செய்தி

USAID FROM THE AMERICAN PEOPLE

CaFFE Campaign for Free & Fair Elections

Nathurshan 0779064691

### திருமண சேவை

1)72 இல் பிறந்த, 1 இல் செவ்வாய், 30¼ பாவமுடைய நியூஸிலாந்தில் பிரஜா உரிமை பெற்ற எக்கவுண்டனாக பணிபுரிந்து வந்திருக்கும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை. சைவ போசனம் விரும்பத்தக்கது இல்லை என்றாலும் பரவாயில்லை.

2)80 இல் பிறந்த 12 இல் செவ்வாய், 34¼ பாவமுடைய MBBS(MD)RUSSIA டாக்டருக்கு டாக்டர், இஞ்சினியர் மணமகள் தேவை.

மேலும்:-டாக்டர்கள், இஞ்சினியர்கள், பட்டதாரிகள், சைவபோசனமுள்ள மணமக்களும் செவ்வாய்பாவம் கூடிய குறைந்த செவ்வாய் இல்லாமல் பாவம் குறைந்த மணமக்களும் வெளிநாட்டில் பிரஜாஉரிமை பெற்ற மணமக்களும் எம்மிடமுள்ளனர்.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
171/7 ,மனோன்மணி அம்மன் கோயிலடி,
நல்லூர் வடக்கு வீதி. 0776070862

### காணி விற்பனைக்கு

தும்பளை, வோல்டன் பிளேசில் சுமார் 02 பரப்பு, முடிக்கப்படாத நிலையில் உள்ள வீடும் காணியும் விற்பனைக்குண்டு. விலை ரூபா 18 லட்சம். தரகர்கள் தேவையில்லை. தொடர்பு - தும்பளை -0776648754, கொழும்பு - 0775094749

### தேவை

பழைய வாங்கு, மேசை விற்க வைத்திருப்போர் கந்தகோட்டம் கல்வி நிலையத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கந்த கோட்டம் கல்வி நிலையம், சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.
T.P:0779333451

### விற்பனைக்கு

135 MF உழவு இயந்திரம் விற்பனைக்கு உள்ளது. (49 - 7 XXX) விலை ரூபா 850,000/=
தொடர்பு : மன்னார் கோவில்குளம்
T.P: 0777309176 (8855)

### வேலையாள் தேவை

முன் அனுபவமுள்ள சேவிஸ் (மோட்டார் சைக்கிள்) செய்யும் வேலை, மெக்கானிக் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். வஜிதா மோட்டோஸ், 300/1, நாவலர் வீதி, ரயில்வே சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0778097741

### விஜய தசமியை முன்னிட்டு

விஜயதசமியை முன்னிட்டு ஏடும், சகலகலாவல்லி மாலையும் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.
அண்ணா தொழிலகம்,
இணுவில்

### அம்புலன்ஸ் சாரதி தேவை

St John Ambulance SRI LANKA

சென் ஜோன் அம்புலன்சால் நடத்தப்படும் அம்புலன்ஸ் சேவைக்குச் சாரதி தேவை. 'A'CLASS சாரதி அனுமதிப்பத்திரம் உடையவர்கள் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை 09-10-2011 பி.ப 4.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென் ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்தில் நடை பெறும் நேர்முகப் பரீட்சைக்கு சகல ஆவணங்களுடனும் நேரில் சமுகம் தரவும்.

அம்புலன்ஸ் தொடர்பு இலக்கம் :- 0213214444

யாழ். மாவட்ட ஆணையாளர்
சென் ஜோன் அம்புலன்ஸ்.

### யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய ஆசிரியர் தின விழா

இவ்வித்தியாலயத்தின் கல்வி மேன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அதிபரையும் அனைத்து ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி நிற்கின்றோம்.

2011 ஆம் ஆண்டின் புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் உயர் பெறுபேறுகளைப் பெற்றும் மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தைப் பெற்றும் சாதனை படைக்க உதவிய ஆசிரியர்களையும் இந்த நாளில் உளமார வாழ்த்தி நிற்கின்றோம்.

பெற்றோர்களும்
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்

## என்னத்தைச்...
## ...சொல்ல?!

### வந்தேறு குடிகள் என்ற கடலுக்குள் தள்ளப்படும் ஆபத்து!

ஓங்கி வளர்ந்த ஒரு மரத்தை படவைத்து விட்டு, அந்த இடத்தில் வேறு ஒருவகை மரத்தை நடவிரும்பும், சமூக விரோதி என்ன செய்வான் என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

பட்டப் பகலில் பலரும் காணக்கூடியதாக ''பெரிய புல்டோசரைப் போட்டு'' இடித்தா அந்த மரத்தைச் சாய்த்து விடுவான்? அவ்வாறு அவன் செய்தால் சமூகம் விழித்து எழுந்து விடுமே. வேறு வகையில் மரத்தில் ஏறிக்கொப்புக்களை கோடரியால் வெட்டியா வீழ்த்துவான் இல்லவே இல்லை. சில சமயம் அந்த மரத்திலே வகையான நீண்ட ஒரு கொப்பை வெட்டி அதைச் சீவி எடுத்து, கோடரிக்கு அதையே பிடியாகப் போட்டு, அந்த மரத்துக் ''கோடரிக் காம்பாலே அதே மரத்தை வெட்டிச் சாய்பாருமுண்டு. குலத்தைக் கெடுக்கும் கோடரிக்காம்பு'' என்பது இதைத் தான்.

இவற்றை விட வேறு ஒரு வழியும் உண்டு. இதைப் பலரும் இரகசியமாகச் செய்வதுண்டு. இரவோடு இரவாக, அண்டாவிலே நீரைக் கொதிக்க வைத்து, அந்தமரத்தைச் சுற்றி மண்ணை வெட்டி விட்டு இந்தக் கொதி தண்ணீரை அந்த வெட்டிய அதரில் மரத்தைச் சுற்றி ஊற்றிவிட்ட பின்னர், மண்ணை இழுத்து வெட்டிய பகுதியை மூடி விடுவார்கள்.

ஓரிரு முறை இப்படியாக கொதி நீரால் தீர்த்தமாட்டி விட்டு, அம்மரம் பட ஆரம்பித்ததும், அந்த மரத்தடியிலே நின்று மாயக் கண்ணீர் வடித்து, அந்த மரத்தின் மகிமையை, குருவி, குயில், காகம் கூடுகட்டி வாழ்ந்த வரலாற்றை பட்டுக் கிடக்கும் அந்த மரத்தண்டை பலரும் கண்டு கண்கலங்கும் வேளையில், கொதி தண்ணீர் ஊற்றிக் கொன்றவனே புலம்புவது புதிதான செய்தியல்ல. எல்லைக் கதியாலுக்கும், அடுத்த வீட்டான் மாமரத்துக்கும் கொதி தண்ணீர் ஊற்றிக் கொல்லும் கொடுமை நம் மண்ணில் முற்றாக மறைந்து விடவில்லை!.

ஏன், இந்த உவமையும், உதாரணமும் ஒன்றுமே புரியவில்லை என்று எண்ணுகிறீர்கள். உண்மைதான். ஓங்கி வளர்ந்த நம் தமிழர் பண்பாடும், பழக்க வழக்கங்களும், பல்கிப் பெருகி நின்று நிலைக்கும்,பெட்டகமே தான் யாழ்ப்பாணம் என்னும் இந்த தீவகற்பம், என்று உலகு போற்றிய காலம் ஒன்று உண்டு.

இன்று, நாமே நமது கலை, கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம், நடை, உடை,உண்டி எல்லாமே கைவிட்டு புதியதோர் நாகரிக அலையில் அடிபட்டுப் போகிறோம். இது ஒருவகை பண்பாட்டுச் சிதைவு. மறுபுறத்திலே, மாபெரிய மரத்துக்கு கொதி தண்ணீர் ஊற்றிக் கொல்லும் கொடுமை போன்று எமது புராதன சின்னங்கள் வெட்டி வீழ்த்தப்படுகின்றன. பண்டைய பழமை வாய்ந்த மனைகள், மதில்கள், புராதன அடையாளங்கள், கற்சிலைகள், மண்டபங்கள், மண் சிலைகள், சிற்ப ஓவியங்கள் இல்லாமற் செய்யப்படுகின்றன.

ஏன் பண்டைய பெரிய கற்தூண்களை நாமே நாகரிக மற்றது என்று இடித்து விட்டு '' நவயுக'' மாபிள்களைப் பதிக் கின்றோம்.

உதாரணத்துக்கு: ★ யாழ்ப்பாணத்தின் பண்டைய பெருமையை பறைசாற்றிய எட்டு மாபெரும் தூண்களுடன் அமைந்திருந்தது நல்லை கைலாசபிள்ளையார் கோயில். ஆனால் இப்போது கறுப்பு மாபிள் மண்டபத்தோடு அவர் காட்சி தருகின்றார்.

★ வாளேந்திய சங்கிலியன் வடிவிழந்து நிற்கின்றான். ஒல்லிக் குதிரையும் வலுவிழந்து ஓடமுடியாது நிற்கின்றது.

இப்படியாக, நவயுக நாகரிக சிந்தனையால், நாம் கொதிநீரை ஊற்றி கொப்பினை வெட்டி முதிய மரத்தை சாகடிப்பது போல, நவீன மயமாக்கல் என்ற மாயையின் பிடியில் சிக்கி யாழ்ப்பாணக் குடாநாடு பொட்டிழந்த பூவையைப் போல அனைத்துமே இழந்து அனாதைகளாகப் போகின்றது.

இரவோடு இரவாக கொதி தண்ணீர் ஊற்றுவது போல், யாழ். தீவகற்பகத்தின், நாலாபுறமும் கொடிய கொதி நீரை ஊற்றி, எமது மண்ணின் உயிர் துடிப்பையே அழித்து விடும் அவலம் எம் கண்முன் இரவோடு இரவாக நடைபெறுகின்றது.

நித்திரைக்குப் போகும் போது இருந்த கச்சேரிப்பூங்கா, விடியற்காலை உருமாறி நிற்கின்றது. டச்சுக்காரன் கட்டிய கோட்டை நவயுகக் கோட்டையாக மாறுகின்றது.

சிந்தனையாளர்களும் புத்தி ஜீவிகளும் இது பற்றிச் சிந்திக்காவிடில், நாங்கள் வரலாறு இல்லாத வந்தேறு குடிகள் என்ற கடலுக்குள் தள்ளப்பட்டு விடுவோம்.



பிரசண்டன்

# மக்களுக்கு அழிவைத் தந்த ஆட்சிப் பீடத்தை ஐ.தே.கட்சியே தோற்கடிக்கும் என்பது முடிவு

### விளக்குகிறார் முஸம்மில்

கொழும்பு, ஒக்.5

தமிழ் மக்களுக்குச் சொல்லொணாத் துன்ப, துயரங்களையும் பேரழிவுகளையும் தந்தது இந்த ஆட்சிப் பீடமே. அத்தகைய அதிகாரப் பீடத்துக்கு தமிழர்கள் அதிகம் வாழும் தலைநகரிலும் நல்லதோர் பாடம் புகட்டப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரே நிலைப்பாடு. அந்த அதிகார பீடத்தைக் கொழும்பில் தோற்கடிக்கக் கூடிய பிரதான சக்தி - கட்சி - நமது ஐ.தே.க.தான் என்பதும் கூட்டமைப்பிற்கு நன்கு தெரியும். அதனால்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் மனோவின் கட்சிக்கோ, ஆளும் தரப்புக்கோ வாக்களிக்கும்படி தமிழ் மக்களைக் கோரவில்லை.

- இப்படி விளக்கமளித்திருக்கின்றார் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐ.தே.கட்சியின் மேயர் வேட்பாளராகப் போட்டியிடும் எம்.ஜே.எம்.முஸம்மில்.

இந்தத் தேர்தல் தொடர்பாகத் தமிழ்க் கூட்டமைப்பு எடுத்திருக்கும் நிலைப்பாடு குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.


இந்தவிடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு மாநகரசபைத் தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்திருக்கும் நிலைப்பாடு தெளிவானது. அதனை நாம் வரவேற்கின்றோம். அதைத் தவறாக அர்த்தம் கற்பித்து சிலர் தங்களுக்குச் சார்பானதாக அதைக் காட்ட முயல்கின்றார்கள்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் எனத் தமிழ்க் கூட்டமைப்பு கருதியிருக்குமானால் அதனை அப்பட்டமாகவே கூட்டமைப்பு வெளிப்படுத்தியிருக்கும். அதனைத் தமிழ்க் கூட்டமைப்பு விரும்பவில்லை என்பது உறுதி. தமிழ் மக்களுக்குப் பேரழிவுகளை ஏற்படுத்திய இந்த அராஜக ஆட்சி ஒழிய வேண்டும் என்பதே தமிழ்க் கூட்டமைப்பினதும் தமிழ் மக்களினதும் ஏகோபித்த கருத்து.

இந்தஆளும்தரப்பைக் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் தோற்கடிக்கக் கூடிய ஒரே கட்சி - சக்தி - பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிதான் என்பது தமிழ்க் கூட்டமைப்புக்கு நன்கு தெரியும். ஐ.தே.கட்சி அல்லாத பிற கட்சி எதற்கும் விழும் ஒவ்வொரு வாக்கும் ஆளும் தரப்பின் வெற்றியை உறுதிப்படுத்துவதாகவே இருக்கும் என்பதை உணர்ந்துள்ளதால்தான் கூட்டமைப்பு இத்தகைய நிலைப்பாட்டை எடுத்துள்ளது. (ச-சி)

# டக்ளஸைச் சந்தித்தார் ஜனாதிபதி



கொழும்பு,ஒக்.5

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரின் இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தக் கலந்துரையாடலின்போது நாடாளு மன்றத் தெரிவுக்குழு மற்றும் அரசியல் தீர்வு போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாகக் கலந்துரை யாடப்பட்டது.

விரைவான அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் இங்கு வலியுறுத்தப்பட்டதுடன் இன்னமும் மீள்குடியேற்றம் செய்யப்படாதிருக்கும் மக்களை விரைவில் மீள்குடியேற்றம் செய்வது தொடர்பிலும் புனர்வாழ்வு நிலையங்களில் இருக்கும் இளைஞர்,யுவதிகளை விரைவில் விடுவிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டன.(ச)

# வர்த்தகர்களின் பிரச்சினைகள் விரைவில் முற்றாகத் தீர்க்கப்படும்

### கோத்தபாய உறுதி

கொழும்பு, ஒக்.5

தமிழ் நகைக்கடை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் கப்பம் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான பிரச்சினைகள் எதிர்காலத்தில் முற்றாக நீக்கப்படும் என்று பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று முன்தினம் உறுதியளித்துள்ளார்.

இலங்கை நகைக்கடை உரிமையாளர் சங்கத்தினரைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கேட்டறிந்தார்.

பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபாவின் ஏற்பாட்டில் கிராண்ட் ஓரியன்டல் ஹோட்டலில் நேற்று முன்தினம் மாலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கப்பம், பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் திருட்டு நகைகளால் ஏற்படும் பிரச்சினை உட்படப் பல விடயங்கள் இதன்போது விரிவாகப் பேசப்பட்டன.

செட்டியார்தெரு நகைக் கடை உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வுபெற்றுத்தரப்படும் என்று உறுதியளித்துள்ளார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நகைக்கடை உரிமையாளர்களின் பங்களிப்பும் அளப்பரியது. கடந்த 3 தசாப்தகாலமாக இடம்பெற்ற யுத்தம் காரணமாக நீங்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க நேரிட்டது என்பது எனக்குத் தெரியும்.

இந்த அரசு வர்த்தகத் துறையை முறைகேடான பாதையில் இட்டுச் செல்வதாக சிலர் குற்றஞ்சுமத்துகின்றனர். இது பொய்யான கூற்று என்பதை உங்களால் உணரமுடியும் என்றே நான் கருதுகின்றேன்.

கப்பம் கோரல், பாதுகாப்பு அச்சுறுத்தல் போன்ற பிரச்சினைகள் உங்களுக்கு இருப்பதாக அறிகின்றோம். இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு விரைவில் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுத்தரப்படும் என்ற உறுதிமொழியை என்னால் உங்களுக்கு வழங்கமுடியும் என்றார். (ச-சி)

# விற்பனைக்குச் செல்கின்றன தெய்வங்களின் வாகனங்களும்

முள்ளியவளை,ஒக்.5

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பில் மக்கள் மீள் குடியமராத பகுதிகளில் உள்ள கோயில்களில் காணப்படும் தெய்வங்களின் வாகனங்களை எடுத்துச் சென்று விற்றுக் காசாக்கும் இழிவான செயல் நடைபெற்று வருகின்றது. இரும்புகளையெல்லாம் பொறுக்கியெடுத்து விற்று முடித்த நிலையில் தற்போது தெய்வங்கள் அமரும் வாகனங்களின் மீது கவனம் திரும்பியுள்ளது. மக்களின் மீள் குடியமர்வு நடைபெற்ற பகுதிகளில் ஏனையவர்களின் தேங்காய்களைப் பொறுக்கி முதலில் விற்றனர். வீட்டை உடைத்துக் கதவுநிலை,யன்னல்ஆகியவற்றை எடுத்தனர். இரும்பு பொறுக்கிறோம் என்ற பெயரில் நல்ல நிலையிலுள்ள வாகனங்களையும் எடுத்துச் சென்றனர்.

தற்போது இந்துத் தெய்வங்களின் வாகனங்கள் இவர்களின் இலக்காக மாறியுள்ளன. இதனைக் கண்ணுற்ற இந்தப் பகுதி மக்கள் பெரும் கவலையில் மூழ்கியுள்ளனர். தெய்வ பயம் என்பதே இல்லாது இந்தச் செயலைச் செய்வோர் எதனையும் செய்யத் துணிவர் என்பதே அனைவரதும் கருத்தாகவுள்ளது.

இது இப்படியே தொடர்ந்து சென்றால் புதுக்குடியிருப்பை எவராலும் காப்பாற்ற முடியாது என்பதே இங்குள்ள மக்களின் கவலைக்குரிய விடயமாக உள்ளது. (க-433)

## கணினிப் பயிற்சி வகுப்பு

கிளிநொச்சி,ஒக்.5

கிளிநொச்சி முருகானந்த மகாவித்தியாலயத்தில் பாடசாலை மாணவர்களுக்கும், பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களுக்குமான கணினிப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

சுவிற்சர்லாந்து சூரிச் சைவத் தமிழ் சிவன் கோயிலின் 'அன்பே சிவம்' அமைப்பின் ஏற்பாட்டில் வழங்கப்பட்ட 5 கணினிகளையும் மனிதநேய அமைப்பினரால் வழங்கப்பட்ட 5 கணினிகளையும் பயன்படுத்தி இந்தப் பயிற்சி வகுப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பாடசாலை மாணவர்களுக்கு வாரநாள்களில் மாலை வேளையில் இரு அணியினருக்கும், பாடசாலையிலிருந்து வெளியேறிய மாணவர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் ஓர் அணியினருக்கும் இந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

முரசுமோட்டைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாத போதிலும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் ஏற்பாட்டில் அன்பளிப்பாக வழங்கப்பட்ட மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தியே இந்தக் கணினிப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பயிற்சி வகுப்புக்கள் மூலம் முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, பெரியகுளம் பிரதேச மாணவர்கள் மிகுந்த பயன் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-405)

## சிறுவர் தொடர்பான கருத்தமர்வு

வவுனியா செட்டிக்குளம் நலன்புரி முகாமில் சிறுவர் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தமர்வு இடம்பெற்றுள்ளது. இதில் சிறுவர்பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள், சிறுவர் துஷ்பிரயோகம் ஆகிய விடயங்கள் இடம்பெற்றன. இந்த விழிப்புணர்வுக் கருத்தமர்வுக்கான நிதிஉதவியை ஆர்.சி நிறுவனம் வழங்கியது. இதில் சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள்,சிறுவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். மேலும் போரின்போது காணாமல் போன சிறுவர்களின்விவரங்களை தந்துதவுமாறு பெற்றோர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இதில் கதிர்காமர் நிவாரண முகாம், ஆனந்த குமாரசாமி நிவாரண முகாம் ஆகியவற்றைச்சேர்ந்த சுமார் 800பேர் கலந்து கொண்டனர். (க-431)

### தேவையறிந்து சேவை...



குறைகள் நீங்கட்டும்: மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள பெரிய பரந்தன் அ.த.க பாடசாலை மாணவர்களுக்கு கனடா குவல்ப் வட்டாரத் தமிழ்ப் பாடசாலைகளால் வழங்கப்பட்ட பாதணி, கழுத்துப் பட்டி என்பவற்றை கரைச்சிப் பிரதேச சபையின் உப தலைவர் வ.நகுலேஸ்வரன் மாணவி ஒருவருக்கு வழங்குகிறார்.

## உதவி வழங்கக் கோரிக்கை

உருத்திரபுரத்தில் உள்ள காந்தி சேவா சங்க சிறுவர் இல்லம், குருகுலம் ஆகியவற்றுக்கு உதவிகள் வழங்குமாறு பரோபகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

உதவிகள் வழங்க விரும்புவோர் காந்தி நிலையம், உருத்திரபுரம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் தலைவர் தி.இராசநாயகம் அறிவித்துள்ளார். (க-207)

# 240 மில்லியன் ரூபா செலவில் முல்லை. வவுனிக்குளம் புனரமைப்பு

முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் உள்ளகப் புனரமைப்புப் பணிகள் சுமார் 240 மில்லியன் ரூபா செலவில் செயார் திட்டத்தின் கீழ்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதான நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் அதன் வான் பகுதி, அணைக்கட்டு போன்ற பகுதிகள் சேதமடைந்து போதியளவு நீரினைத் தேக்கிவைக்க முடியாத நிலைகாணப்பட்டது.

இந்த நிலையில் குளத்தின் புனரமைப்புப் பணிகள் கடந்த யூன்மாதம் மூன்றாம் திகதி வவுனிக்குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் எஸ்.சுபாகரன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இதன் மொத்தப் புனரமைப்புப் பணிகளுக்கு சுமார் 585 மில்லியன் ரூபா நிதி தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி குளத்தின் கீழ் 6 ஆயிரத்து 890 ஏக்கர் விவசாய நிலப்பகுதி உள்ள போதும் 4 ஆயிரத்து 100 ஏக்கர் பரப்புக்கள் மட்டுமே செய்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் குளத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாகும் போது செய்கை பண்ணப்படாமல் பற்றைக் காடுகளாகவும், தரிசு நிலங்களாகவும் காணப்படும் சுமார் இரண்டாயிரத்து 797 ஏக்கர் நிலப்பகுதிகளையும் செய்கைகளுக்கு உட்படுத்த முடியுமென்றும் இதனால் மேலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளும் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-6)

## விடத்தல்தீவு பாடசாலைக்கு நான்கு கட்டடங்கள் கையளிப்பு

மன்னார், ஒக்.5

மன்னார் விடத்தல்தீவு ஜோசப்வாஸ் மகாவித்தியாலயத்துக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 3 மாடி வகுப்பறைக் கட்டடங்கள், ஒன்றுகூடல் மண்டபம் ஆசிரியர் விடுதி என நான்கு கட்டடங்களைக் கையளிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் தலைமையில் கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது கதல் ரியன் ட்ரஸ்ட் என்ற நிதிக்கொடை அமைப்பின் அனுசரணையுடன் யுனிசெவ் அமைப்பால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட இந்தக் கட்டடங்களை யுனிசெவ் அமைப்பின் கல்விக்குப் பொறுப்பான டாக்டர் பிரிந்தா ஹெர்பிக் மற்றும் கதல் ரியல் ட்ரஸ்ட் நிறுவனத்தைச் சேர்ந்த பற்றிக் ரியன் ஹில் ஆகியோர் வைபவ ரீதியாகத் திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் மடு வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லஸ், விடத்தல் தீவு பங்குத் தந்தை மற்றும் யுனிசெவ் அமைப்பின் வவுனியாப் பிரதிநிதி முஸ்ஸா ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்தக் கட்டடங்கள் முன்னாள் மடு வலயக் கல்விப் பணிப்பாளரும், தற்போதைய மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான திருமதி சுகந்தியின் முயற்சியால் கிடைக்கப் பெற்றவையாகும் என விடத்தல்தீவு கல்விச் சமூகத்தினர் தெரிவித்தனர். (க-601)

## வீதிக்கு சிமெந்துக் கலவை

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி வீதி சிமெந்துக் கலவை இடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதியில் இருந்து பிரிந்து சென்று புனித திரேசா பெண்கள் கல்லூரிக்குச் சென்று உருத்திரபுரம் வீதியுடன் இணையும் 300 மீற்றர் நீளமான மேற்படி வீதியானது சிமெந்துக் கலவை இடப்பட்டுத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் மூலமாக கிராமிய வீதிகளைத் திருத்தும் திட்டத்தின் மூலம் மேற்படி வீதியும் புனரமைக்கப்பட்டுள்ளது. (க-426)

# விரைவு கணிதப் போட்டி முடிவுகள்

கிளிநொச்சி கல்வி வலயத்தின் கரைச்சிக் கோட்ட மட்டத்தில் கடந்த 27 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான விரைவு கணிதப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதல் ஐந்து இடங்களையும் பெற்றவர்கள் பரிசுக்குரியவர்களாகவும்,வலய மட்டப்போட்டியில் பங்கு பற்றும் தகைமையுடையவர்களாகவும் உள்ளதுடன் அடுத்த ஐந்து இடங்களையும் பெற்றவர்கள் பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த போட்டியில் அதிக இடங்களை கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலய மாணவர்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தரம் 2**

**பரிசில் பெறுவோர்**

இரவீந்திரராசா - கிளி நொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், வந்தகுமார் வசீகரன் - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், கணேசமூர்த்தி ஆரெக்ஷனா - கிளி/பண்ணங்கண்டி இ.த.க. பாடசாலை, இரவீந்திரகுமார் காயத்திரி - கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை, நகுலேஸ்வரன் கௌதசாரோன் - கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

**பாராட்டுப் பெறுவோர்**

ஜெயக்குமார் சஞ்சியா - கிளி/சிவ நகர் அ.த.க பாடசாலை, விமலேந்திரன் கிருந்தன் - கிளி/சிவ நகர் அ.த.க பாடசாலை, நகுலேஸ்வரன் கிருபாலினி - கிளி/ஐயனார்புரம் அ.த.க பாடசாலை, பேரின்பலிங்கம் சோபிதன் - கிளி/திருவையாறு ம.வி, கோணேஸ்வரன் கோசலன் - கிளி/உருத்திரபுரம் ம.வி.

**தரம் 3**

**பரிசில் பெறுவோர்**

விஜயரட்ணம் யோகடிலக்சிகா- கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், அமலதாஸ் அகல்யா- கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், விஜயகுமார் சங்கீதா - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், சிறி பத்மராசா தமிழருவி- கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், சிவநாதசெல்வம் சஞ்சிகா - கிளி/கிளிநொச்சி ம.வி.

**பாராட்டுப்பெறுவோர்**

மனோகரன் பவித்திரன் - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், சிவஞானம் தேனிலவன் - கிளி/விவேகானந்த வித்தியாலயம், விஜயகுமார் வினோஜன் -கிளி/ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க பாடசாலை, விக்னேஸ்வரன் நக்சிகா - கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி , பற்குணம் சுபஸ்திகா - கிளி/அக்கராயன் அ.த.க பாடசாலை.

**தரம்4**

**பரிசில் பெறுவோர்**

லோகேஸ்வரன் சாருஜா - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், சிவராசா ஹேசாயினி - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், செல்வக்கண்ணன் டிலக்சன் - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், சசிக்குமார் பிளக்சிகா - கிளி/விவேகானந்த வித்தியாலயம், சந்திரகுமார் லக்சிகா - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

**பாராட்டுப்பெறுவோர்**

பிரேமதாஸ் அமுதினி - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், அஜித்குமார் அனுசந்தன் -கிளி/கிளிநொச்சி ம.வி, இராசரத்தினம் திவ்வியா -கிளி/விவேகானந்தவித்தியாலயம் தியாகரன் அருளினி - கிளி/கிளிநொச்சி ம.வி, தர்மராசா பிரதீசனா- கிளி/பாரதி வித்தியாலயம்.

**தரம்5**

**பரிசில் பெறுவோர்**

மைத்திரிபால மதுபாலன் - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், அமலதாஸ் அனுசியா- கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், அமரசிங்கம் அபிராஜ் - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்பவித்தியாலயம், பிரேம்ராஜ் பிரதிக்ஷன் - கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம் , புஸ்பராஜா டனோஜன்- கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

**பாராட்டுப்பெறுவோர்**

குகானந்தன் தர்மிகா- கிளி/உருத்திரபுரம் ம.வி., திருஞானசம்பந்தன் துவாரகா- கிளி/கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி, யசோதரன் டனுயன்- கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி ,ச.சுயந்தன்- கிளி/ஸ்கந்தபுரம் இல.1 அ.த.க பாடசாலை,கணேசன் கீதசஞ்சான்- கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.

(க-405)

# மன்னார் தம்பனைக் கிராம மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வில்லை



நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருப்பதாக அரசு கூறிக்கொள்கிற போதும் ஒரு பிரிவு மக்கள் ஏதோ ஒரு வகையில் பாதிப்புக்களுக்கும் இன்னல்களுக்கும் முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த வகையிலே மன்னார் தம்பனைக்குளம் கிராம மக்கள் குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் தங்களின் வாழ்நாளில் அரை வாசியைச் செலவிடுகின்றனர்.

மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கிராமமே தம்பனைக்குளம் கிராமமாகும் இக் கிராமம் மடு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் உள்ளது.

1999ம் ஆண்டு தம்பனைக் குளம் கிராம மக்கள் மீள்குடியமர்வு செய்யப்பட்டனர்.327 குடும்பங்களைச் சேர்ந்த 1066 பேர் தற்போது இக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

குறித்த கிராமத்தில் நல்ல தண்ணீர் உள்ள பொதுக் கிணறு ஒன்று உள்ளது.அக்கிணற்று நீரையே அக்கிராம மக்கள் தமது தேவைக்காக பயன்படுத்தி வந்துள்ளனர்.பின் டி.ஆர்.சி. என அழைக்கப்படும் டெனிஸ் அகதிகள் பேரவை எனும் அமைப்பு கடந்த 2009 ஆண்டு குறித்த கிராமத்தில் குடி தண்ணீர் திட்டமொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2010 ஆம் ஆண்டு குறித்த கிணற்று நீரினைக் குழாய்கள் மூலம் மக்களுக்கு வழங்குவதற்கான பரிசோதனை மேற்கொண்ட போது அந்தப் பரிசோதனை வெற்றி அளித்திருந்தது.

பின் குறித்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஆரம்பித்தபோது கிணற்றின் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்த நிலையிலே காணப்பட்டது.இதனால் இந்த வேலைத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் அக்கிராம மக்கள் மீள்குடியமர்ந்த நாள் முதல் இன்று வரை குடி தண்ணீரைப் பெறுவதில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் ஆனால் அரச அதிகாரிகள் எவரும் தமக்கு உதவி செய்ய முன் வரவில்லை யென இந்த மக்கள் தெரிவிக்கின்றனர்

அதேவேளை கடந்த பெப்ரவரி மாதம் இந்தத் தம் பனைக் குளம் கிராமத்தில் மோசமான வெள்ள அனர்த்தம் ஏற்பட்டது. இதனால் குடிதண்ணீர் தொடர்பாக மேற்கொள்ளப் பட்டு வந்த அனைத்து விதமான வேலைத் திட்டங்களும் கைவிடப்பட்டன.

இந்த நிலையில் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சினால் குறித்த கிராமத்துக்குத் தலா 1000 லீற்றர் கொண்ட நான்கு நீர்த்தாங்கிகள் வழங்கப் பட்டுள்ளன.

மேலும் அரச அதிகாரிகளினாலும் மாவட்டத் தலைவர்களினாலும் கைவிடப்பட்ட குறித்த கிராம மக்களுக்கு அந்தப் பகுதியில் உள்ள கடற்படையினர் குடிதண்ணீருக்கான உதவிகளை வழங்கிவருகின்றனர்

வாரத்தில் இரண்டு அல்லது மூன்று தடவைகள் குறித்த நான்கு நீர்த் தாங்கிகளையும் கடற்படையினர் நிறைத்து விடுகின்றனர். இதனால் அவசர தேவைகளுக்குக் குறித்த நீரை அக்கிராம மக்கள் பங்கிட்டு பெற்றுக் கொள்கின்றனர் ஒரு குடும்பத்துக்கு 2 அல்லது 3 குடம் மட்டுமே கிடைக்கின்றது

இதனால் இந்தக் கிராம மக்கள் பெரிய சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபையிடம் தொடர்பை ஏற்படுத்திக் கேட்டபோது; குறித்த கிராம மக்கள் இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் தங்களின் கவனத்துக்கு இதுவரை கொண்டு வரவில்லை எனவும் இப் பிரச்சினை தொர்பாக தாம் கேள்விப் பட்டுள்ளவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் நானாட்டான் பிரதேச சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எஸ்.ஆர்.லம்பேர்ட்

# நீதி மறுக்கப்படுபவர்களுக்கு சரியான உதவிகள் வழங்கப்படும்

## கிளிநொச்சி மாவட்ட நீதிவான் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.5

யாருக்கு நீதி மறுக்கப்படுகின்றதோ அவர்கள் நீதிமன்றை நாடிச் சரியான நீதயைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நீதிமன்றக் கட்டடம் கடந்த 29 ஆம் திகதி புதிதாகத் திறந்து வைக்கப் பட்டபோது உரையாற்றிய நீதிபதி பெ.சிவகுமார் தமதுரையில்:

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றமானது ஆரம்பிக்கப்பட்டுப் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் இயங்கி வந்தது. இதனால் இங்கு தேவைகளை நாடி வந்தவர்கள் பல சிரமங்களை அனுபவித்து வந்துள்ளனர்.

இன்று இந்தக் கட்டடத்தைத் திறந்து வைப்பதன் மூலம் மக்கள் தமது சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

யுத்தம் காரணமாகப் பாதிக்கப்பட்டுப் பல இன்னல்களை அனுபவித்த இந்த மக்களுக்கு இலகுவான சேவைகளை வழங்க வேண்டும்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நீதிமறுக்கப்பட்ட நிலையில் சொல்லொணாத் துன்பங்களை இந்த மக்கள் அனுபவித்தவர்கள். இவர்களுக்கு நீதி கிடைக்கவில்லை என்ற நிலைமைகளையே இங்கு காணக் கூடியதாக உள்ளது.

யாருக்கு நீதி மறுக்கப்படுகின்றதோ அவர்கள் தாமாக முன்வந்து தேடிப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போதுதான் நீதி மன்றத்தின் மூலம் அந்த உதவி அவர்களைச் சென்றடையும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

## பணிக்குப் பாராட்டு...



கண்ணியமான சேவை: கிளிநொச்சி, கண்டாவளைப் பிரதேசத் தில் கண்ணிவெடிகளை அகற்றும் டாஷ் நிறுவனத்தின் பணியாளர்களுடன் இலங்கைக்கான ஆஸ்திரேலிய தூதரகத்தின் முதலாவது செயலாளர் சலி மக்காய் கைலாகு கொடுத்து உரையாடுகின்றார். (6)

# வலய, கோட்ட மட்டப் போட்டிகள்

கிளிநொச்சி, ஒக்.5

கிளிநொச்சி வலய மட்ட ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான விரைவு கணிதம், வாய்ப்பாடு மனனம் ஆகிய போட்டிகள் கிளிநொச்சி ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றன.

இதேவேளை கரைச்சிக் கோட்ட மட்டத்திலான சிறுவர் அரங்கப் போட்டி எதிர்வரும் 11 ஆம் திகதி கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

வலய மட்டத் திருக்குறள் மனனப் போட்டியும் சிறுவர் ஆக்கப் போட்டியும் விரைவில் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-405)

# கிளிநொச்சி ஆசிரிய மத்திய நிலையத்தில் வணிகத்துறை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

கிளிநொச்சி, ஒக்.5

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம்-10, 11 வகுப்புக்களில் வணிகமும், கணக்கீட்டுக்கல்வியும், முயற்சியாண்மைக்கல்வி, மின் ஆவணப் படுத்தலும் சுருக்கெழுத்தும் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மதிப்பீட்டு நுட்பங்கள் தொடர்பான செயலமர்வு கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் வளவாளர்களாகக் கிளிநொச்சி கல்வி வலயத் தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி பி. மதுரநாயகம், வர்த்தகபாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் தி.சிவரூபன், விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் கு.பிரதீபன் ஆகியோர் செயற்பட்டனர்.

இந்தச் செயலமர்வில் 40 இற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.(405)

# கிளிநொச்சியில் சிறுவர் தின நிகழ்வுகள்

கிளிநொச்சி, ஒக்.5

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை வன்னிப் பிராந்திய நிலையத்தின் சிறுவர் தின நிகழ்வுகள் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெற்றுள்ளன.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் சுமார் எண்ணூறு சிறார்களை ஒன்று திரட்டி உலக சிறுவர் தின நிகழ்வு கடந்த முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி புனித பெண்கள் திரேசா கல்லூரியில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு முன்னர் விருந்தினர்கள், ஆசிரியர்கள், சிறார்கள், ஏ-9 வீதியில் இருந்து அழைத்து வரப்பட்டனர். பின்னர் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை வன்னிப்பிராந்திய திட்ட இணைப்பாளர் திரு.த.பூதாசா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

நிகழ்வில் புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி ஜெயந்தினி தனபால சிங்கம், அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் தலைவர் எச்.ஜெயக் குமார், வன்னிப் பிராந்திய குரு முதல்வர் டி.எஸ். குகனேஸ்வரன், திருமதி செலினா பிறேம்குமார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் என்.டி.நில் தலுவத்த ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின்கீழ் இயங்கும் பதினெட்டு முன்பள்ளிகளையும் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப் படும் கிளிநொச்சியில் சிறுவர் தின நிகழ்வுகள் நடை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# பஸ் தரிப்பிடக் குறியீடுகள் இல்லை; பிரயாணிகள் அவதி

முல்லைத்தீவு, ஒக்.5


முல்லைத்தீவு மாங்குளம் பிரதான வீதியில் முள்ளியவளையிலிருந்து தண்ணீரூற்று, சிலாவத்தை ஊடாக முல்லைத்தீவு செல்லும் பாதையில் பஸ் தரிப்பிடங்களுக்கான குறியீடுகள் இல்லாததால் பிரயாணிகள் வீண் தாமதங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

பஸ் சாரதிகள் பஸ்தரிப்பிடக் குறியீடுகள் இல்லாமையால் பிரயாணிகள் நிற்கும் இடங்களிலெல்லாம் தரித்து நின்று ஆள்களை ஏற்றிச் செல்கின்றன.

இதனால் சாதாரண பிரயாணிகள் மட்டுமல்ல காலை வேளையில் தமது கடமையின் பொருட்டு முல்லைத்தீவு செல்லும் ஊழி யர்களும் தமது அலுவலகங்களுக்குத் தாமதமாகவே செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் பஸ் தரிப்பிடங்களைக் குறிப்பிடும் குறியீடுகளை உரிய இடங்களில் நாட்ட வேண்டு மெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (க-433)

# குதிக்கால் உயர்ந்த காலணிகளால் ஆபத்து



நவநாகரிகப் பெண்கள் எல்லோரும் உச்சம் தலை முதல் உள்ளங்கால் வரை முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்ற கூற்று சரியானதே.
இத்தகைய பெண்கள் விரும்பி அணிபவைகளில் ஒன்றுதான் குதிகால் உயர்ந்த காலணிகள். ஆனால் இந்த நெட்டைக் கொக்கு காலணிகளால் உடல்நலத்துக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்று எச்சரிக்கிறார்கள் நிபுணர்கள்.
காலணியின் அதிக உயரமானது மூட்டு இணைப்புக்கும் அதனுடன் இணைந்த இழைகளுக்கும் அதிக கஷ்டத்தை ஏற்படுத்துகிறது. தொடையின் முன்பகுதியில் உள்ள தசைகள் கடினமாக உழைக்க வேண்டியிருக்கிறது.
குதிகால் உயர்ந்த காலணிகளால் முன்னங்கால்களுக்கு அதிகரிக்கும் அழுத்தமானது நூலிழை எலும்பு முறிவு, கட்டை விரல் வீக்கம், கால் விரல்கள் முன்புறம் வீங்குவது போன்ற அபாயங்களை ஏற்படுத்துகின்றன.
குதிக்கால் உயர்ந்த காலணிகளை அணியும் பெண்களுக்குப் பொதுவாக மூட்டு வலியும் காணப்படுகிறது என்று கூறுகிறார் மூட்டு சிகிச்சை நிபுணரான அஷிஷ் ஜெயின். குதிகால் உயர்ந்த காலணிகளை அணிவதால் ஏற்படும் வலியைத் தவிர்ப்பதற்கான ஒரே வழி அவற்றை அணியாமல் இருப்பதுதான்.

# மிகச்சிறிய கெமரா




உலகில் சிறிய டிஜிட்டல் கமெரா ஒன்றை அமெரிக்காவின் ஹமாச்சர் ஷ்லெம்மர் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.
முற்றுமுழுதாக இயங்கும் உலகின் மிகச் சிறிய டிஜிட்டல் கமெரா இதுவாகும்.
இந்தக் குட்டிக் கமெரா ஓர் அங்குலத்தைவிட சற்றே நீளமான அளவுடையது.
கைவிரலால் கமெராவை கிளிக் செய்தால் சாதாரண அளவிலான படத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# ஆச்சரியமூட்டும் குரங்குகள்

சிலரைப் பார்த்து நம் உறவினர் போல இருக்கிறது; ஆனால் அவர் இல்லை, உருவம் ஒரே மாதிரி இருகின்றதே என்று குழம்பி இருப்போம்.
இந்தக் குழப்பம் மனிதருக்கு மட்டும் அல்ல விலங்குகளுக்கும் எற்படுகின்றது. அதிலும் குறிப்பாக மனிதர்களின் மூதாதையர் என்று சொல்லப்படுகின்ற குரங்குகளிடம் ஆச்சரியமூட்டும் அபூர்வமான உருவ ஒற்றுமை காணப்படுகின்றது. உலக அளவில் சுமார் 264 வகையான குரங்குகள் காணப்படுகின்றன. அவற்றில் இப்பொழுது பாதி அழியும் தருவாயில் இருகின்றன. அந்த வகையில் சில விசித்திரமான குரங்குகளை இங்கு பார்க்கலாம்.




# காலைப் பொழுதே மகிழ்ச்சியான நேரம்



உலக மக்களின் மகிழ்ச்சியான நேரம் எது? என்பது குறித்து அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழக நிபுணர்கள் ஓர் ஆய்வு மேற்கொண்டனர்.
அதற்காக டுவிட்டர் இணையத்தளம் பயன்படுத்துபவர்களிடம் கருத்து கேட்கப்பட்டது.
அதில் 84 நாடுகளைச் சேர்ந்த 24 லட்சம் பேர் கருத்துத் தெரிவித்து இருந்தனர்.
அவர்கள் 2 வருடங்களாக 50 கோடியே 90 லட்சம் கருத்துக்களைக் கூறி இருந்தனர்.
அவர்களில் பெரும்பாலானவர்கள் காலைப் பொழுதுதான் மகிழ்ச்சியான நேரம் என்று கூறியுள்ளனர்.
ஏனெனில் அப்போதுதான் மக்களின் அன்றாடப் பணி தொடங்குகிறது.

# விசித்திரமான பறவைகள்



வித்தியாசமான சில விலங்குகளைப் பற்றியும் அதன் விசித்திரமான சில செய்திகளையும் நாம் கேட்டிருப்போம்.
அவர்கள் மட்டுமா? நாங்களும் ரொம்பவே விசித்திரமாகத் தான் இருக்கிறோம் என்று சொல்லாமல் சொல்கின்றன இந்தப் பறவைகள்.





# அரசுக்கும் அடிவருடிகளுக்கும் மக்கள் தக்கபாடம் புகட்டுவர்

**ரிஷாத் பதியுதீனின் கருத்துக்கு அரியநேத்திரன் எம்.பி. பதிலடி**

மட்டக்களப்பு,ஒக்.5

எந்த அபிவிருத்தியாலும், போலி வாக்குறுதியாலும் எமது மக்களின் தமிழ் உணர்வை மாற்றமுடியாது. அரசுக்கும் அடிவருடிகளுக்கும் கல்முனை மாநகரத் தமிழ்மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.


ஆட்சியில் இருக்கும் அரசுடன் மக்கள் இணைந்து சென்றால்தான் பிரதேசத்தில் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவரும், அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் கல்முனை கடற்கரைப்பள்ளி மைதானத்தில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் இந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனவே, எந்த அபிவிருத்தியாலும், போலி வாக்குறுதியாலும் மக்களின் தமிழ் உணர்வை மாற்றமுடியாது. அற்பசொற்ப சலுகைகளுக்கும், போலியான வாக்குறுதிகளுக்கும், அர்த்தமற்ற அபிவிருத்திக்கும், மிரட்டல்களுக்கும் அடிபணியாது அஞ்சா நெஞ்சம் கொண்டவர்களாக, தமிழ் உணர்வை வெளிக் காட்டுபவர்களாக எமது மக்கள் உள்ளனர் என்று தெரிவித்துள்ளார்

எனவே, இந்த அரசுக்கும், அதன் அடிவருடிகளுக்கும் கல்முனை மாநகரத் தமிழ் மக்கள் எதிர்வரும் 8ஆம் திகதி தக்க பாடம் புகட்டுவார்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-சி)

# காட்டு யானைகளின் தாக்குதலால் மட்டக்களப்பில் இருவர் பரிதாபச் சாவு



மட்டக்களப்பு,ஒக்5

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்ணகிபுரம் கிராமத்தில் யானை தாக்கி இரண்டு ஆண்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பலியாகியுள்ளனர்.

இவர்கள் இருவரும் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோதே யானை தாக்கியுள்ளது. இதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானதுடன், மற்றையவர் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

அம்பாறை மாவட்ட சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வளத்தாப்பிட்டி கிராமத்திலும் காட்டு யானைகளின் அட்டகாசம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. வீடுகள் மற்றும் பொருள்கள் சேதப்படுத்தப்பட்டு வருகின்றன என்று கிராம வாசிகள் தெரிவிக்கின்றனர்.

தற்போது நிலவிவரும் வரட்சியால் தினமும் தண்ணீரைத் தேடிவரும் காட்டு யானைகள், கூட்டம் கூட்டமாகக் கிராமத்துக்குள் படை யெடுத்து வருகின்றன. இதனால், இந்தக் கிராம மக்கள் இரவு நேரங்களில் பயப்பீதியில் உள்ளனர். பாதுகாப்புக் கருதி ஓர் இடத்தில் ஒன்றுகூடி இரவு முழுவதும் கண்விழிக்க வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவிக்கின் றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வந்த 4 யானைகள் வளத்தாப்பிட்டி கிராமத்தில் புகுந்து காளி கோவில் களஞ்சிய அறையை உடைத்து, அங்கிருந்த நெல் மூடைகளை சேதப்படுத்தி, சாப்பிட்டுள்ளன. அத்துடன், மூன்று வீடுகளையும் சேதமாக்கிவிட்டுச் சென்றுள்ளன.

காட்டு யானைகளின் அட்டகாசம் தொடர்பாக வளத்தாப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி.விக்னேஸ்வரன் சம்மாந்துறை பிரதேச செயலாளரிடம் முறையிட்டுள்ளார்.

எனவே, வளத்தாப்பிட்டி கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த அவலநிலையைப் போக்க சம்மாந்துறை பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர் ஆகியோர் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து மிக விரைவில் இந்தக்காட்டு யானைகளின் அட்டகாசத்துக்கு ஒரு முடிவைக்காண முயற்சிக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (ச)

## ஆபாச இறுவட்டுக்களை விற்றவர் கைது

பொலநறுவை,ஒக்.5

பாடசாலை மாணவர்களுக்கு ஆபாச இறுவட்டுக்களை விற்பனை செய்த சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததாக பொலநறுவை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்து சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலனறுவை, பெந்திவெள பகுதியில் வைத்தே இறுவட்டுக்களுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் இவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலநறுவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)


## சந்தன மரம் வெட்டியோர் கைது

அப்புத்தளை,ஒக்.5

அப்புத்தளை, வல்ஹப்பு தென்ன மகா வித்தியாலயத்தின் வளவில் நின்ற வெண் சந்தன மரமொன்றை இரவில் தறித்துக் கொண்டிருந்த தந்தை, மகன் உட்பட மூவரை கைது செய்துள்ளனர் என்று அப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களால் தறிக்கப்பட்ட 22 மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

பண்டாரவளை பொலிஸ் அத்தியட்சகர் ஏ.ஜீ.ஐ.சந்திரகுமாரவின் மேற்பார்வையில் அப்புத்தளை பொலிஸ் பொறுப்பதிகாரி பிரியங்ககுமாரவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ச-5)



கண்டிக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தலதாமாளிகைக்குச் சென்று புனிததந்த வழிபாட்டில் ஈடுபட்டார். ஜனாதிபதியுடன் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, எஸ்.பி.திசநாயக்க ,மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏகநாயக்க ஆகியோரும் வழிபாட்டில் ஈடுபட்டனர். (ச)

## கல்முனை மாநகர சபைத்தேர்தலில் கூட்டமைப்புக்கு சுயேச்சை ஆதரவு

அம்பாறை, ஒக். 5

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சைக்குழு ஒன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரிப்பதற்கும் இந்தத் தேர்தலில் கூட்டமைப்பின் வெற்றிக்காக உழைப்பதற்கும் முன்வந்துள்ளது.

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் 7 ஆம் இலக்கச் சுயேச்சைக்குழுவாக அன்னாசிச் சின்னத்தில் போட்டியிடும் சுயேச்சைக் குழுவே இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஆதரிக்க முடிவு செய்துள்ளது.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட முக்கியஸ்தரும் காரைதீவுப் பிரதேச சபைத் தவிசாளருமான செல்லையா இராசையாவின் ஆலோசனையையும் அழைப்பையும் ஏற்றுத் தாம் இந்த முடிவுக்கு வந்ததாக இந்தச் சுயேச்சைக்குழுவின் முதன்மை வேட்பாளர் நித்தியானந்தம் நித்தியதர்சன் தெரிவித்துள்ளார்.

தமது இந்த முடிவு தொடர்பாக அறிவிப்பதற்கென இந்தச் சுயேச்சைக் குழுவினர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது முதன்மை வேட்பாளர் நித்தியதர்சன் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் இதுதொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை மாநகரசபைத் தேர்தல் இன்றைய நிலையில் முக்கியத்துவமிக்கதாகும். அதிலும் தமிழ் மக்கள் ஒரே கொடியின் கீழ் திரண்டு தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும்.

எனவே தான் எமது சுயேச்சைக் குழு இந்தத் தேர்தலில் முழுமையாகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்குவதுடன், அதன் குழுவெற்றிக்காக உழைப்பதெனவும் முடிவு செய்துள்ளோம். - என்றார். (ச-30)

# சலுகைகளைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்

**நுவரெலியா மக்களுக்கு இராதாகிருஷ்ணன் அழைப்பு**

கொழும்பு, ஒக். 5

நுவரெலியா மாவட்ட மக்கள் சலுகைகளைக் கண்டு ஏமாற்றமடைந்து விடக்கூடாது. தங்களது பிரதேச அபிவிருத்தி கருதி ஆளும்கட்சிக்கு வாக்களிக்க வேண்டும். இதனை ஒரு சமூகக் கடமையாகக் கருதுவது காலத்தின் கட்டாயமாகும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.எஸ்.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பீட்ரூ ஸ்வர்ஸ்லீப் தோட்டத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியா மாநகரசபையானது மக்கள் தேவைகளை இனங்கண்டு செயலாற்றக்கூடிய ஓர் அரச இயந்திரமாகும். இந்தச் சபையைத் தொடர்ந்து எதிர்க்கட்சி கைப்பற்றுவதால் பல்வேறு வகையான தடைகள் ஏற்படும்.

கிராம, தோட்ட, நகரங்களின் அபிவிருத்தியைப் பூர்த்தி செய்து கொள்வதில் பல தடைகள் ஏற்பட்டுள்ளதை மறுக்கமுடியாது.

அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக மக்களுக்கு சலுகைகளை வழங்குவது அரசியல் கலா சாரமாக உள்ளது. இது மக்களின் வாக்குரிமைகளை விலைகொடுத்து வாங்கும் ஜனநாயக விரோத செயலாகும். இவ்வாறான போக்கை இந்தத் தேர்தலில் ஒழிப்பதற்கு முன்வர வேண்டும். - என்றார். (ச)

## அதாவுல்லாவின் பிரசாரக் கூட்டத்தில் கல்வீச்சு

கல்முனை,ஒக்.5

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் அமைச்சர் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் சார்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து கல்முனைப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தின் மீது கல்வீச்சு இடம்பெற்றுள்ளது.

அமைச்சர் அதாவுல்லாவின் உரையையடுத்து, இந்தப் பிரசாரம் இடம்பெற்ற மேடையை நோக்கி கல் வீசப்பட்டுள்ளது.

இதனையடுத்து இந்தப் பிரதேசத்திற்கு பொலிஸார் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இந்தப் பிரசாரக் கூட்டத்தில் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா, மாகாண அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச)

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
புதிய அனுபவங்களைப் பெறலாம். நண்பர்கள் மூலம் முக்கிய செய்திகளைக் கேட்கலாம். சில வேலைகளை உங்களின் சௌகர்யத்திற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைப்பீர்கள். வயிறு தொடர்பான உபாதைகளைத் தவிர்க்க கடும் அலைச்சல்களைத் தவிர்க்க வேண்டும். வெளியில் சொல்ல முடியாத பிரச்னைகளால் மன உளைச்சல்களுக்கு ஆள்படலாம்.

**இடபம்:**
எங்காவது வெளியில் செல்லும் நேரத்தில், உறவினர்கள் யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். வீட்டைச் சீரமைக்கும் வேலைகளில் அக்கறை காட்டுவீர்கள். நேற்றுச் செய்த காரியம் ஒன்றை நினைத்து இன்று வருத்தம் அடைவீர்கள். பெற்றோரின் அன்புத் தொல்லைகள் உண்டு. உங்களின் செயல்பாடுகளை அயலார் விமர்சிக்கலாம்.

**மிதுனம்:**
உறவினர்கள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். அரசியல் தொடர்புடையவர்கள் கடும் பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். பொழுது போக்கு, உல்லாச விடயங்களில் நாட்டம் செல்லும். எந்த வேலையையும் நாளை என்று தள்ளி வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். பிள்ளைகளுக்காக சில பொருள்களை வாங்குவீர்கள்.

**கடகம்:**
அயலாருடன் ஏற்பட்ட பகை விலகிப் பாசம் அதிகரிக்கும். மற்றவர்களுக்காக சில வேலைகளைச் செய்யலாம். தொழில் நிமித்தம் பிரிந்திருந்த குடும்ப உறுப்பினர்கள் மீண்டும் ஒன்று கூடுவர். குடும்ப உறுப்பினர்களின் செயற்பாடுகளைப் பற்றி மற்றவர்களிடம் பெருமையாகப் பேசுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் கூடும்.

**சிங்கம்:**
வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்குவீர்கள். மாமன், மைத்துனர்கள் சிலர் உங்களை நம்பி முக் கிய வேலைகளை ஒப்படைக்கலாம். பெண்கள் வழியில் உருவான தொல்லைகள் குறைந்து நிம்மதி பெறுவீர்கள். குடும்பப் பெரியவர்களின் கோபத்தைத் தவிர்க்க, எதிலும் யோசனை கேட்டு செயற்படுவது நல்லது.

**கன்னி:**
கொடுத்த வாக்கைக் காப்பாற்றிப் பெருமைப்படுவீர்கள். நடக்காத சில விடயங்களைப் பற்றி பெரிய அளவில்கற்பனை செய்வீர்கள். சில பொருள்களை ஆசைப் பட்டு வாங்கியும் அதில் திருப்தி இல்லாமல் போகலாம். உறவினர் ஒருவரைப் பற்றி மற்றொரு உறவினரிடம் விமர்சிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் செல்ல முன்னேற்பாடு செய்யலாம்.

**துலாம்:**
நல்ல காரியம் ஒன்றை செய்வீர்கள். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். பணவரவுகளில் ஏற்பட்ட தடை, தாமதங்கள் விலகும். நீண்ட நாள் கடன் மிகுதி ஒன்றைத் தீர்ப்பீர்கள். உங்களின் யோசனைகளுக்கு மற்றவர்கள் ஆதரவு தெரிவிப்பர். பொலிஸ் பணியில் இருப்போர் கூடுதல் வருமானம் பெறலாம்.

**விருச்சிகம்:**
மன அமைதியைப் பாதிக்கும் சம்பவங்கள் நடக்கலாம். விருந்தினர்கள் வருகையால் உங்களின் சில வேலைகளில் மாற்றங்களைச் செய்யலாம். தொலைபேசி வழித் தகவல்கள் தொல்லை தருவதாக அமையும். அயலாரிடம் சுக துக்கங்களைப் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். உணவுப் பண்டங்களுக்காகவும், நினைத்தவற்றை சாப்பிடவும் கணிசமாகச் செலவிடலாம்.

**தனுசு:**
உற்சாகமான அனுபவங்களைப் பெறலாம். தெரிந்த ஒருவரை நம்பி ஒப்படைத்த காரியம் நல்ல விதமாக முடிவுக்கு வரும். உங்களின் அனுபவம் ஒன்றை மற்றவர்களிடம் சொல்லி மகிழ்வீர்கள். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். நீண்ட நாள் விருப்பங்கள் நிறைவேறலாம்.

**மகரம்:**
எதிர்பாராத மாற்றங்களை சந்திக்கலாம். அரசியல் தொடர்புடையவர்களுக்கு நினைத்த காரியங்கள் நடப்பதில் தடை ஏற்படலாம். சிறிய வேலை ஒன்றுக்காக பல முறை அலைய நேரிடலாம். பண விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சிலருடன் கடும் வாக்குவாதம் செய்யலாம். கூட்டுத் தொழில் விவகாரங்களில் விட்டுக் கொடுத்துச் செல்லவும்.

**கும்பம்:**
செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்கும் நாள். இடைநடுவில் நிறுத்தி வைத்த சில வேலைகளை இன்று செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். தொழில் ரீதியாக கணிசமான பணவரவுகளைப் பெறலாம். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**மீனம்:**
பொறுப்பில்லாமல் செயற்படும் குடும்ப உறுப்பினர்களுக்கு நல்ல அறிவுரை சொல்வீர்கள். உடன் பிறப்புக்கள் உதவிகரமாக இருப்பர். கஷ்டப்பட்டுச் செய்த வேலை ஒன்றுக்கு கணிசமான பலன் கிடைக்கலாம். வீட்டுச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய மிகுதிகள் வரலாம். மதிப்பு, கௌரவம் மேம்படும்.

# பழைய பூ

## புதைந்து கிடக்கும் ம

## வெளிவரும் உண்

ரேணுபிரேம் உசிலமணி

"விடிஞ்சும், விடியாத நேரத்தில அந்த அம்மாவோட கொஞ்சப் பேர் வந்திச்சினம். சில ஐயாமாரும் வந்தவை. எல்லாரையும் பாத்தாப் பெரியாக்கள் மாதிரித்தான் கிடந்திச்சு. அவையள் வந்த வரத்தையும் வாகனங்களையும் பாத்தாலே அது தெரியும்தானே! அவையள் குரூப்பா அந்த இடத்துக்கு வர்றத்துக்கு முன்னமே அங்க பெரிய 'பெக்கோ' வந்திட்டிது'' என்று விவரிக்கிறார் கிறிஸ்தோபர். சுண்டிக்குழியைச் சேர்ந்த அவர், 'பிளேன் ரீ' குடிப்பதற்காக வை.எம்.சி.ஏ. பக்கமாக உள்ள 'ரீ' கடைக்கு வந்தபோது தான் கண்டவற்றை இப்படி விவரித்தார்.

''புருஷனோடதான் அந்த அம்மா அங்கயும் வந்தவா. கொஞ்ச நேரத்திலேதான் அவையள் அங்க எதோ செய்யப்போகினம் எண்டது விளங்கிச்சுது. ஆனா என்னெண்டு தெரியேல்ல. அதில இருந்த குளக்கட்டில 'திலகம்' (யாழ். மாநகர சபை) ஓங்கி அடிச்சுத் தேங்காய் உடைச்சா. நல்ல காரியம் செய்யிறதெண்டா, அதுக்குத் தடங்கல் வரக் கூடாதெண்டா நாங்கள் பிள்ளையாரைக் கும்பிட்டு தேங்காய் உடைச்சுத் தொடங்கிறதுதானே வழக்கம். அவையளும் ஏதோ நல்லது செய்யப்போகினம் எண்டுதான் நினைச்சன். அம்மா தேங்காய் உடைச்ச கையோட 'பெக்கோ' தன்ர வேலையை தொடங்கிட்டு. அந்தக் குளத்தைத் தோண்டிக் கீண்டி ஏதாவது செய்வாங்கள் எண்டு நான் நினைக்க, திடீரெண்டு சுத்தியிருந்த மதிலை இடிக்கத் தொடங்கிட்டாங்கள். எனக்குத் 'திக்' எண்டுபோச்சு.''

அந்த மனிதர் விடுவதாக இல்லை. இப்போது இவரிடம் ஏன் கதைகொடுத்தோம் என்ற பரிதாபத்துக்கு நான் வந்துவிட்டேன். இருந்தாலும் நடந்தது என்ன என்பதை அறியும் ஆவலில் ''உம்..'' கொட்டிக் கொண்டிருந்தேன்.

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள 130 ஆண்டுகளுக்கு முந்தைய பழைய பூங்காவினை மக்கள் பாவனைக்கு மீளத் திறந்துவிடுவதுடன் அதை அழகுபடுத்தப் போகிறோம் என்ற கோஷத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அழிப்பு நடவடிக்கைகளின் காட்சிகளையே 52 வயதான கிறிஸ்தோபர் விளக்கிக் கொண்டிருந்தார்.

பழைய பூங்காவை பாதுகாத்துப் புனரமைப்புச் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயம். இருப்பினும் இதை விடப்பழமை வாய்ந்த இடங்கள் பல யாழ்ப்பாணத்தில் இருக்கின்றபோதும் இந்த பழைய பூங்காவில் அமைச்சர்களும் ஆளுநரும் அவசரமாகக் கைவைத்தது ஏன்? அதுவும் அவசர அவசரமாக கலந்துரையாடல் நடத்திவிட்டு வேலைகள் தொடங்கக் காரணம் என்ன?

கிறிஸ்தோபரின் கதையைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே கேள்விகள் மண்டையைக் குடைய ஆரம்பித்துவிட்டன. தேடத் தேடத்தான் பலதும் வந்தது. பூங்காவுக்குள் மறைந்து கிடந்த மர்மங்களும் உண்மைகளும் வெளிக்கிளம்பத் தொடங்கின.

### வரலாறு

பிரிட்டிஷாரின் ஆட்சி இலங்கையில் நிலவிய போது பழைய பூங்காவானது யாழ். நகரில் அமைக்கப்பட்டது. முதலாவது பிரிட்டிஷ் அரச அதிபராக இருந்த டுவை என்பவர் 1829ஆம் ஆண்டு, இந்தப் பூங்கா வடமாகாண அரச அதிபருக்குச் சொந்தமானது என எழுதி வைத்தார். அத்துடன் பூங்காவிலிருந்து பெறப்படும் வருமானங்களை வைப்பிலிட்டு அதனூடாகப் பூங்காவைப் பராமரிக்கவேண்டும் என்றும் அவர் கூறியிருக்கிறார். அரச அதிபரின் இல்லமும் அந்த வருமானத்திலிருந்தே பராமரிக்கப் படவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷாரின் ஆட்சியின் பின்னர் வடமாகாண அரச அதிபர் என்ற பதவி மறைந்துபோனதால் யாழ்ப்பாணத்தின் அரச அதிபரே பழைய பூங்காவின் எழுதப்படாத உரிமையாளராக - வழமை வழி - கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறார்.

இதற்கிடையே, யாழ்ப்பாணத்தில் உள்ள 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனைத்து இடங்களையும் சொத்துக்களையும் தேசிய மரபுரிமைச் சொத்தாகப் பிரகடனப்படுத்தி அவற்றைப் பாதுகாக்கத் தொல்பொருள் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் கீழ் முதற்கட்டமாக விடுக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் பழைய பூங்காவையொட்டி உள்ள அரச அதிபரின் பழைய கட்டடம் மரபுரிமைச் சின்னம் என்று அறிவிக்கப்பட்டது.

### பின்னணி

இந்த நிலையிலேயே பழைய பூங்காவின் சுற்று மதிலை அழித்து அதனைப் மக்கள் பயன்பாட்டுக்கான பூங்காவாக மாற்ற பொருளாதார அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் ஆளுநர் ஆகியோர் திட்டம் தீட்டி னர். இதற்கு தன்னை வடக்கின் ஒரே அமைச்சர் என்று கூறிக்கொள்ளும் டக்ளஸ் தேவானந்தாவும் முழு உடந்தையாக இருந்தார்.

அரச அதிபருக்குச் சொந்தமான - தொன்மையான - இடத்தினுள் அவரது அனுமதி பெறாமலேயே நுழைந்து அதனை இடித்து அழிக்கத் தொடங்கியதும் பிரச்சினை பூதாகாரமானது. ''அரச அதிபரைவிட வடக்கில் நானே பெரியவன்'' என்ற ஆளுநரின் மமதையே இதற்கான காரணம் என்று அரச அதிகாரிகள் அடித்துக் கூறுகிறார்கள்.

பணிகளைத் தொடங்க முன்னர் அரச அதிபரிடம் கலந்தாலோசியுங்கள், அவரிடம் அனுமதி பெறுங்கள் என்று ஆளுநரைச் சுற்றியுள்ள மூத்த - நல்லது கெட்டதுதெரிந்த - அதிகாரிகள் எடுத்துக் கூறிய அறிவுரைகளை ஆளுநர் அடியோடு புறந்தள்ளினார் என்று நம்பகமாகத் தெரியவருகிறது.

''வடக்கில் நான்தானே பெரியவன்; நான் எதற்கு அரச அதிபரிடம் அனுமதி பெறவேண்டும்'' என்ற சாரப்பட ஆளுநர் வார்த்தைகளை உதிர்த்தார் என்பதையும் அதிகாரிகள் ஒத்துக்கொள்கிறார்கள்.

இதிலிருந்தே வேலைகளைத் தொடங்கியதற்குப் பின்னணியில் புனரமைப்பைத் தாண்டிய 'ஈகோ' ஒன்று இழையோடிப் போய் இருப்பதும் இனமேலாதிக்க சிந்தனைப் போக்கு காணப்படுவதும் தெளிவாகத் தெரிகிறது.

### ஆளுநரின் அடாவடி

வடக்கின் ஆளுநராக இப்போது இருப்பவர் முன்னாள் மேஜர் ஜெனரல். யாழ். மாவட்டத்தின் இராணுவத் தளபதியாக இருந்தவர். இவரது காலத்தில் குடாநாட்டில் நீதிக்குப் புறம்பான கொலைகள் பல நிகழ்ந்துள்ளன. இரவுவேளை இராணுவ உடைகளில் வந்தவர்கள் பெற்றோரும் உற்றோரும் கதறக் கதற பல இளைஞர்களை இழுத்துச் சென்றுள்ளனர். அவர்களில் சிலர் பின்னர் சடலங்களாக மீட்கப்பட்டனர். பலருக்கு என்ன நடந்தது என்று இன்னமும் தெரியாது. காணாமல்போய்விட்டார்கள் என்று வகைப்படுத்தியதுடன் அவர்கள் கதை முடிந்து விட்டது. முள்ளிவாய்க்காலில் முடிந்த இறுதிப்போரின் போது நிகழ்ந்த இத்தகைய குற்றச்செயல்கள் அனைத்தையும் ஐ.நா. நிபுணர் குழு போர்க் குற்றங்கள், சர்வதேச மனித உரிமை ஒப்பந்தங்களை மீறும் செயல் என்று வகைப்படுத்தி



பழைய பூங்காவில் அமைந்துள்ள புராதன குளத்துக்
கொளுத்தி அழிவுப்பணியை ஆரம்பித்து வைக்கும் யாழ்.

உள்ளது.
தொடக்க
யாழ்ப்பா
குற்றங்கள்
குப் பொ
ஜி.ஏ.சந்தி
இப்போது
''மனி
மனிதருக்
துப் பழை
கிறார்கள்
அதிகாரி
மதித்தே
தொதிப்பு
என்பவர்க
தில்லை.
கிறார்கள்'
வர். ஆளு
அது. என
டித்தனம்
என்பது ப
ஆளுந
யத்திலும்
நிதானமா
அறிவுரை
பரிடம் கே
மாறு சொ
முதலி
களை மே
பது மற்று
களைத்
வுரைக
இல்லை.
பெறப்ப
உதாசீனப்
இவை
ஆளுநர்
அதிகாரப்

# பூங்கா

## தும் மர்மங்களும்

## உண்மைகளும்



ன குளத்துக் கட்டில் தேங்காய் உடைத்து கற்பூரம் வைக்கும் யாழ்.மாநகர சபை முதல்வரும் அதிகாரிகளும்

உள்ளது. அப்படிப் பார்க்கப்போனால் 2006 தொடக்கம் 2009 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சம்பவங்களும் போர்க் குற்றங்கள் என்று வகைப்படுத்தத்தக்கன. இவற்றுக்குப் பொறுப்புக்கூறவேண்டியவர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி. ஆனால் விதி வசத்தால் அவரே இப்போது வடக்கின் ஆளுநராக இருக்கிறார்.

''மனித உயிர்களின் மதிப்பே தெரியாத அந்த மனிதருக்கு எங்கே மரங்களின் மதிப்பும் யாழ்ப்பாணத்துப் பழமையின் மதிப்பும் தெரியப்போகிறது?'' என்கிறார்கள் அதிகாரிகளில் பலர். முன்னாள் இராணுவ அதிகாரியான சந்திரசிறி, தங்களை மனிதர்களாக மதித்தே நடப்பதில்லை என்பது அவர்களில் பலரின் கொதிப்புக்குக் காரணம். ''இங்கே அரச அதிகாரிகள் என்பவர்கள் மக்களின் சேவகர்களாக நோக்கப்படுவதில்லை. அரசின் அடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள்'' என்று உதயனிடம் கூறினார் அதிகாரி ஒருவர். ஆளுநரின் நடத்தை பற்றி அவரது 'கொமன்ட்' அது. எனவே அவரிடம் இருந்து இத்தகைய அடாவடித்தனம் வெளிப்படுவது வியப்புக்குரியது அல்ல என்பது பலரின் கருத்து.

ஆளுநரின் இந்தப் போக்கு பழைய பூங்கா விடயத்திலும் தெளிவாக வெளிப்பட்டுள்ளது. விடயத்தை நிதானமாகக் கையாளுமாறு அவருக்கு வழங்கப்பட்ட அறிவுரைகளை அவர் புறந்தள்ளியுள்ளார். அரச அதிபரிடம் கேட்டு, அனுமதி பெற்று வேலைகளைத் தொடங்குமாறு சொல்லப்பட்டதையும் அவர் தூக்கி எறிந்துவிட்டார்.

முதலில் பழைய பூங்காவை அழகுபடுத்தும் பணிகளை மேற்கொண்டுவிட்டு பின்னர் மதிலை உடைப்பது மற்றும் வேறு கட்டடங்களை உடைக்கும் பணிகளைத் தொடங்கலாம் என்று வழங்கப்பட்ட அறிவுரைகளை அவர் காதில் வாங்கிக்கொள்ளவே இல்லை. தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதி பெறப்படவேண்டும் என்ற விடயத்தையும் அவர் உதாசீனப்படுத்தினார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக அமைச்சர்கள் - ஆளுநர் - அரச அதிபர் இடையே இழையோடும் அதிகாரப் போட்டியும் பழைய பூங்கா இடிப்புக்குப் பின்னுள்ள முக்கியமான காரணம். ''இவ்வளவு காலமும் பனிப்போராக இருந்தது இப்போது நேரடியாக வெடித்திருக்கிறது'' என்று இந்த விவகாரத்தை விவரித்தார் அதிகாரி ஒருவர்.

இந்தப் பனிப்போர் இது ஒரு இடியாப்பச் சிக்கல் போன்றது. அரச அதிபருக்கும் மாநகர முதல்வருக்கும் இடையிலான பனிப்போர், அமைச்சர் டக்ளஸுக்கும் அரச அதிபருக்கும் இடையிலான பனிப்போர், ஆளுநருக்கும் அரச அதிபருக்கும் இடையிலான பனிப்போர், யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் அமைச்சர், ஆளுநருக்கும் இடையிலான பனிப்போர், அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும் அவரது இரு சகோதரர்களான மஹிந்த மற்றும் கோத்தபாயவுக்கும் இடையிலான அதிகாரப் பனிப்போர் என்ற பல போர்களுக்கு மத்தியில் சிக்கிக் கொண்டதில்தான் பழைய பூங்கா சின்னாபின்னப்பட்டுப்போனது.

இந்தப் பனிப்போர்கள் கனன்று கனன்று பழைய பூங்காவில் வெடித்துவிட்டது. பழைய பூங்காவை இடிக்க உத்தரவிட்டவர் ஆளுநராக இருந்தாலும் அதற்குத் தூபமிட்டவர் யாழ். மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாதான் என்கிறார்கள் அதிகாரிகள். அதற்கு அரச அதிபர் - முதல்வர் இடையிலான பனிப்போர் காரணம். அரச அதிபரைத் தாண்டி தான் நினைத்ததை நடத்திக்காட்ட முடியும் என்று நிரூபிக்க அவர் விரும்புகிறார்.

மற்றொரு பக்கத்தில் யாழ். அரச அதிபரை ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலருக்கு நெருக்கமானவராக அவருக்கு எதிர் கோஷ்டி அடையாளப்படுத்துகிறது. அமைச்சர் டக்ளஸ் மற்றும் மாநகர முதல்வர் ஆகியோர் அமைச்சர் பஸில் சார்பானவர்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். ஆளுநரும் இவர்கள் பக்கம்தான் இருக்கிறார்.

இந்த அணி, யாழ்ப்பாணத்தில் தங்கள் பெயரைப் பொறிக்க எதையாவது செய்துவிட வேண்டும் என்று நினைக்கிறது. அதற்கு அரச அதிபர் தடையாக இருக்கிறார் எனவும் நினைக்கிறது. எனவேதான் அரச அதிபரின் அதிகாரங்களுடன் மோதுவதில் இந்த அணியில் உள்ளவர்கள் குறியாக இருக்கின்றனர்.

பழைய பூங்கா இடிக்கப்பட ஆரம்பித்ததும் யாழ். அரச அதிபர் உடனடியாக பாதுகாப்புச் செயலருக்கும் தொல்லியல் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கும் முறையிட்டார். பதிலுக்கு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தினால் அமைச்சர் பஸிலிடம் நிலைமை விளக்கப்பட்டது. நிலைமை மோசமாக இருப்பதால் என்ன செய்வது என்று இங்கிருந்து ஆலோசனை கேட்கப்பட்டது. ''எல்லாவற்றையும் (அரச அதிபர் உட்பட) நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் வேலையைத் தொடருங்கள்'' என்று அவர் கூறிவிட்டதால் இரண்டாவது நாளாகவும் பழைய பூங்கா அழிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தேர்தல் காலத்தில் யாழ்ப்பாணத்தில் முகாமிட்டுத் தங்கியிருந்த வேளையில் குறித்த பழைய பூங்காவினை நேரடியாகச் சென்று பார்த்திருக்கின்றார். அவருடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரும் கூடச் சென்று சுற்றிக் காட்டியுள்ளனர். அப்போதே அதனை ஆக்கிரமித்து அழகுபடுத்தும் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. பின்னர் பூங்காவின் புனரமைப்புக்காக பொருளாதார அபவிருத்தி அமைச்சினால் 220 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

பழைய பூங்காவில் அமைந்துள்ள பழைய கச்சேரியினை புனரமைத்து சுற்றுலா மையமாக்கிவிடுவதே அவர்களின் பிரதான திட்டம். பழைய கச்சேரி தொல்பொருள் திணைக்களத்தினால் கலாசார மையமாக மாற்றியமைக்கப்படவுள்ளது. அதனை மக்கள் பார்ப்பதற்கு வசதியாக பாதுகாப்புக்கு கட்டப்பட்டிருக்கும் மதிலினை இடித்து விடவும் திட்டமிட்டனர். அத்துடன் அங்கு காணப்படுகின்ற குளங்களினையும் புனரமைக்கவும் யோசனை வைத்திருந்தார். (பழைய பூங்காவில் அமைந்துள்ள ஆளுநர் மாளிகைக்கு அருகில் பௌத்த கோயில் அமைப்பதுவும் அவர்களது நோக்கம் என்று கூறப்படுகிறது. ஆனால் உண்மை பொய் தெரியவில்லை) இதன் மூலம் குறித்த பகுதிக்குள் பெருமளவான சிங்கள மக்கள் வந்து செல்வார்கள் என்பது அவர்களுடைய கணிப்பு.

பழைய பூங்காவின் உள்ளே ஆளுநர் மாளிகைக்கு, முன்னாள் அரச அதிபர் கணேசினால் காணி வழங்கப்பட்டது. (மிரட்டி வாங்கப்பட்டது என்கிறது செயலக வட்டாரம்) ஒதுக்கப்பட்ட 80 பேர்ச் காணியில் அரச விருந்தினர் விடுதி அமைக்கப்படும் என்று பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால், அது இப்போது ஆளுநர் மாளிகை என்றே அழைக்கப்படுகிறது. அந்த விடுதிக் கட்டடத்துக்குப் பக்கத்தில் அனுமதிக்கப்படாத நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டு ஆளுநர் தனக்கான உப அலுவலகத் தொகுதி ஒன்றையும் கட்டுகிறார் என்கிறார்கள் அதிகாரிகள். ஆளுநரின் இந்த மாதிரியான அடாவடித்தனங்கள்தான் புத்தர் கோயிலும் வரப்போகிறது என்பதான கதைகளுக்கும் வித்திடுகிறது.

கலந்துரையாடலும் பிறழ்வுகளும்

(26 ஆம் பக்கம் பார்க்க)

# வாழ்க்கையில் பொறுமை வேண்டும்



யாராவது எதையாவது சொல்லிவிட்டுப் போகட்டும். அவற்றை நாம் அக்கறைப் படுத்தாமல் இருப்போம் என்று நினைக்கும் மனம் இருக்கிறதே அந்த மனமே மிகப் பெரிய மனம் என் பெரியோர்களால் போற்றப்படுகிறது.

அரிசோனாப் பல்கலைக் கழகத்தில் ஒரு விஞ்ஞானி இருந்தார். அவர் என்ன கூறுகிறார் தெரியுமா? வாழ்க்கையை அதன் போக்கிலேயே ஏற்றுக் கொண்டு வாழ்வது தான் நல்லதாம்.

அதிகமாக ஆசைப்படுபவர்கள், அவசரப்படுபவர்கள், பொறுமை இல்லாதவர்கள். இவர்களுக்கெல்லாம் இதய நோய் அதிகமாக வருகிறதாம். இப்படிப்பட்டவர்களுக்கு இதய நோய் காரணமாக மரணம் ஏற்படும் அபாயம் இரண்டு மடங்கு அதிகம் என்று அந்த விஞ்ஞானி சொல்லியிருக்கிறார்.

இன்னொரு விடயத்தைச் சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். பல பேருக்கு அகாலமரணம் ஏற்படுவதற்குக் காரணமே தூற்றும் மனப்பாமை, கோபம் இவை இரண்டும் தானாம். அதுமட்டுமல்ல அடிக்கடி கோபப்படுபவர்களைப் பாருங்கள், அவர்கள் சுறுசுறுப்பாக இருக்கமாட்டார்கள்; அடிக்கடி சோர்ந்து போய்விடுவார்கள். இளம் வயதிலேயே வயதான தோற்றம் அடைந்துவிடுவார்கள். எனவே மூளையை எவ்வளவுக்கு எவ்வளவு சுறுசுறுப்பாக வைத்திருக்கிறார்களோ; அவ்வளவுக்கு அவ்வளவு இளமையாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

மனிதன் வயதானதோற்றத்தை அடைகிற இரகசியம் மூளையில்தான் இருக்கிறதாம். மேற்கு ஜேர்மன் விஞ்ஞானிகள் சொல்லும் உண்மை இது.

மனிதனுக்கு 60 வயது தொடங்கும் போது மூளையை சுறுசுறுப்பாக வைத்திருந்தால் எப்பவும் இளமையாக இருக்கலாம் என்று அவர்கள் சொல்கிறார்கள். இதற்குக் கோபப்படக்கூடாது. மற்றவர்களுக்கு விரோதமாக, இடையூறாக நடக்கக் கூடாது. வாழ்க்கையில் நிதானம் வேண்டும், சுறுசுறுப்பு வேண்டும், உற்சாகம் வேண்டும். இவை என்றும் இளமையுடனும் சந்தோசத்துடனும் வாழ்க்கையை வாழ்வதற்குரிய சிறந்த அம்சங்கள்.

கவலை இல்லாமல் இருக்கக் கற்றுக் கொண்டால் உடம்பும் நன்றாக இருக்கும், மனதும் நன்றாக இருக்கும்.

மிகப் பெரிய பணக்காரர் ஒருத்தர் இருந்தார். நான்கு கார்கள் வைத்திருக்கிறார். அவருக்குக் கோபமே வாறதில்லை. ''எப்படி ஐயா! எதற்கும் கோபிக்காமல் சாதாரணமாக இருக்க உங்களால் முடிகிறது'' என்று கேட்டார்கள்.

''இந்த விசயத்தில் எனக்கு ஒரு பிச்சைக்காரன்தான் குரு'' என்றார். எப்படியென்று கேட்டதற்கு, அவர் கூறினார்.

ஒருநாள் எங்கள் வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரன் வந்து சோறு கேட்டான். அப்போது நான் ஏதோ கோபத்தில் இருந்தேன். ''காலை நேரத்தில் வந்து தொந்தரவு செய்யாதே; போய்விடு'' என்று சத்தம் போட்டேன்.

அதற்கு அந்தப் பிச்சைக்காரன் சொன்னான் ''ஐயா! இல்லையென்றால் இல்லையென்று கூறுங்கள்; அதற்காக இப்படியெல்லாம் கோபப்படாதீர்கள், அது உங்களுக்கு நல்லதில்லை'' என்றான்.

எனக்கு கோபம் மேலும் அதிகமாகிவிட்டது. 'பிச்சைக்காரன் எனக்கு ஆலோசனை சொல்வதா' ''எனக்கு நீ புத்தி சொல்லத் தேவையில்லை'' என்று கத்தினேன்.

''கத்தாதீர்கள் ஐயா! அந்தக் காலத்தில் நானும் உங்களை விட வசதியாக இருந்தவன்தான். 8 கார்கள் வைத்திருந்தவன். ஆனால் உங்களை விட அதிகமாகக் கோபப்பட்டேன். அதனால் தான் இன்றைக்கு இப்படி ஆகிவிட்டேன்'' என்றான் பிச்சைக்காரன்.

அன்றிலிருந்து இவர் கோபப்படுவதில்லையாம். அதனால் நான்கு கார்களோடும் நல்லபடியாக இருக்கிறார். என்றும் இளமையுடன் இனிமையானகக் காலத்தைக் கழிக்க இருக்க வேண்டும் என்றால் பொறுமையும் சகிப்புத் தன்மையும் மிகவும் அவசியம்.

கோ.சுவாமிநாதன்



கொமர்ஷல் வங்கியின் உதவியுடன் புனரமைக்கப்பட்ட அச்சுவேலி மத்திய கல்லூரியின் கணினி ஆய்வுகூடத் திறப்பு விழா, புதிய கணினிகள் கையளிக்கும் விழாவில் விருந்தினர்கள், பாடசாலைச் சமூகத்தினர் மாணவர்களின் செயற்பாடுகளை அவதானிக்கின்றனர். (11)

# யாழ்ப்பாணக் கலைஞர்களை ஊக்குவிக்க களம் அமைத்துக் கொடுப்பது அவசியம்

## நல்லூர் உதவிப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்ப்பாண கலைஞர்களை ஊக்கிவிப்பதற்கு கலைகளை நிகழ்த்துவதற்கான களங்களை அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இது கலைஞர்களின் பிரச்சினை மட்டுமல்லாது யாழ்ப்பாண கலைகளின் பாரம்பரியத்தை பாதுகாக்க வேண்டிய பிரச்சினையாகவும் தேவையாகவும் உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர் அ.சோதிநாதன்.

நல்லூர்ப் பிரதேச செயலகத்தின் கலாசார பேரவையின் கலாசார விழா அண்மையில் நல்லூர் இளம் கலைஞர் மன்றத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

யாழ்ப்பாணத்தின் கலாசாரமானது சமூக ரீதியாக்வும் சட்ட ரீதியாகவும் மிகவும் தொன்மை வாய்ந்ததாக உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க கலாசாரத்தை வளர்ப்பதில் கலைஞர்களின் பங்களிப்பு அதிகமாகவுள்ளது. இந்தக் கலைஞர்கள் தமது கலைத்திறன்களை மேம்படுத்த சமூகம் அதற்கு களம் அமைத்துக் கொடுக்க முன்வர வேண்டும்.

கலாசாரங்களைப் பாதிக்கும் வகையில் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்பட்டாலும் அதிலிருந்து நாம் மனம் தளரக்கூடாது. மாறாகக் கலாசாரம் மறைந்து போகுமானால் அதற்கு நாம் அனைவருமே பொறுப்பானவர்கள் ஆவோம்.

எதிர்கால தலைமுறையினருக்கு இத்தகைய கலாசாரத்தை உரிய முறையிலும் பண்புடையதாகவும் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு எமக்கு உள்ளது.

இதற்குப் பிரதேசங்கள் ரீதியாக ஒன்றிணைந்து அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள கலைஞர் களை ஆர்வப்படுத்தி கலைகளை எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என ஆலோசனைகளுடன், களம் அமைத்துக் கொடுக்க முன்வரவேண்டும் - என்றார். (வ-313-7)

# சுகாதாரமான சமுதாயத்தை இங்கு உருவாக்க திணைக்களங்களின் ஒத்துழைப்பும் தேவை

## யாழ்.மாவட்ட சுகாதாரக் கல்வி அலுவலர்

யாழ்ப்பாணம், ஒக்.5

வைத்தியத்துறை சார்ந்த திணைக்களங்கள் மட்டுமல்லாது ஏனைய திணைக்களங்களும் இணைந்து செயற்பட்டால் சுகாதாரமான சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று தெரிவித்தார் யாழ். மாவட்ட சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் எஸ்.பிரணவன்.

யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், உலக விலங்கு விசர் நோய் தினத்தை முன்னிட்டு கடந்த 28ஆம் திகதி தியாகிகள் அறக் கொடை நிலையத்தில் இடம் பெற்ற விழிப்புணர்வுக் கருத்தரங்கு நிகழ்வில் உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்:

யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களைவிட தொற்று நோயால் பொது மக்கள் பாதிப்படையும் சந்தர்ப்பங்கள் குறைவடைந்துள்ளன. இதற்குப் பொது மக்களின் பங்களிப்பும் சுகாதார சேவைகள் திணைக்களங்களின் விழிப்புணர்வு சார்ந்த நடவடிக் கைகளுமே காரணமாகும்.

இது தொடரவேண்டுமானால் ஏனைய திணைக்களங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் விலங்கு விசர் நோய் தொடர்பான மூட நம்பிக்கைகளையும் கருத்துக் களையும் உள்வாங்கி உள்ளனர். இதனை நீக்குவதற்கு மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அத்துடன் பொது மக்கள் ஒன்றரை மாத கால வளர்ப்பு நாய் களுக்கும் தடுப்பு மருந்து ஏற்று வதற்கு முன்வர வேண்டும். ஊடகங்களும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு தரக் கூடிய கருத்துக்களை வெளியிட முன்வர வேண்டும்.

இவ்வாறானதொரு விழிப்புணர்வைப் பொதுமக்கள் மத்தியில் கொண்டு வந்தால் யாழ். மாவட்டத்தில் சிறந்த ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்க முடியும். அத்துடன் தொற்று நோய்களில் இருந்தும் பாதுகாக்க முடியும் - என்றார்.

(வ-313)

# போரால் பாதிக்கப்பட்ட மாணவரின் கல்விக்கு உதவ பொது நிறுவனங்கள் முன்வர வேண்டும்

## ஒட்டுசுட்டான் இடதுகரை அ.த.க.பாடசாலை ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஒக்.5

முல்லைத்தீவு மாவட்டம் கடந்த காலப் போரினால் பாதிக்கப்பட்ட போதிலும் கல்வியிலும் விளையாட்டிலும் மாணவர்கள் முன்னிலையில் உள்ளனர்.

இவ்வாறான சூழலில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உதவி புரிவதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

முல்லை மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் ஆசிரியர்களும் கல்விப்பணிமனை அதிகாரிகளும் சிரத்தையுடன் பணியாற்றுவது வரவேற்கத் தக்கது - இவ்வாறு தெரிவித்தார் ஒட்டு சுட்டான் இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் சிரேஷ்ட நிலை ஆசிரியர் துரை ராசா சசிகரன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

வளர்ச்சி அடைந்த ஒரு பிரதேசத்தில் கல்வி கற்கும் மாணவனின் வளர்ச்சியைவிட அபிவிருத்தியற்ற பின்தங்கிய போர்ச் சூழல் நிலவிய பாடசாலையில் இருந்து மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையிலும் ஏனைய நிகழ்வுகளிலும் முன் வருவது வரவேற்கத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இவ்வருடம் 24 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தது சாதனையான விடயம். இவ்வாறான மாணவர்களை அனைத்துக் கழகங்களும் முன் வந்து பாராட்ட வேண்டும். கல்வி ஊக்குவிப்பினை வழங்க வேண்டும்.

இதன்மூலம் இந்த மாணவர்கள் எதிர்கால சமூகத்தில் உகந்த, சிறந்த பிரஜைகளாக மிளிருவர் - என்றார். (வ-302)

# உடுவில் பிரதேச முதியோர் தின போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஒக்.5

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு வலி. தெற்கு உடுவில் பிரதேச செயலகச் சமூக சேவைகள் திணைக் களமும், உடுவில் கல்விக் கோட்டமும் இணைந்து உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய கட்டுரை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் வருமாறு:

கட்டுரை

கீழ் பிரிவு: பி.சஜீபா- ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி, ப.நர்த்தனி- இணுவில் மத்திய கல்லூரி, அ.றவீனா- ஏழாலை ம.வி.

மத்திய பிரிவு: அ.பிரியங்கா - ஏழாலை ம.வி, அ.கோபிதா - சுன்னாகம் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்சி, ச.சஜீத்தா - சுன்னாகம் மயிலணி சைவ ம.வி.

மேற்பிரிவு: லோ.அனற் கேசிகா - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, பி.கேமசிகா - இணுவில் இந்துக்கல்லூரி, யோ.நிவேதா - மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி.

கவிதை

கீழ்ப்பிரிவு:

ஜீ.நிருத்திகா - மருனார் மடம் இராமநாதன் கல்லூரி, ஜெ.சஞ்சிகா - தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை, சு.சுலக்ஷணா - குப்பிளான் விக் னேஸ்வரா ம.வி.

மத்திய பிரிவு: அ.நிறோஜா - சுன்னாகம் மயிலணி சைவ ம.வி, வி.திவாகரன் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, பா.விதுஷிகா - இணுவில் மத்திய கல்லூரி.

மேற்பிரிவு: செ. சங்கீர்த் தனா - சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஜெ.ஜெயப்பிரசாந்தி - மருதனார்மடம் இராமநாதன்கல்லூரி, ம.மஞ்சுகா - இணுவில் இந்துக் கல்லூரி. (வ-86)

# மணி விழா

கைதடி, ஒக்.5

கைதடி கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் சென்றதையிட்டுக் கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், பாடசாலைப் பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஆகியவை இணைந்து மணி விழாவை நடத்தியுள்ளன. கைதடி கலைவாணி பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கலைவாணி வித்தியாலய பழைய மாணவர் சங்கத் தலைவரும் கொடிகாமம் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளருமாகிய க.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மணிவிழா நாயகன் ப.செல்லத்துரை அவரது வீட்டிலிருந்து தம்பதி சமேதராய் மங்கள வாத்தியங்கள் முழங்க பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டார்.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகச் சட்டத்துறைத் தலைவர் கலாநிதி த.கலாமணி, சிறப்பு விருந்தினராகச் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க.சண்முலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-288)

# கைக்கு எட்டியது: வாய்க்கு எட்டாதா?

மாரி நெருங்கிக்கொண்டிருக்கிறது. அதற்கிடையில் தமக்கென நிரந்தரமான வசிப்பிடம் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில் இருந்த- இறுதிப் போரில் - இடம்பெயர்ந்த மக்களின் கனவு மெல்ல மெல்லக் கலைந்து கொண்டிருக்கிறது.சில வாரங்களுக்கு முன்னர்வரை அவர்களின் கனவு வீடுகள் இந்திய அரசின் நிதியுதவியுடன் வெகுவேகமாகக் கண்முன்னால் கட்டப்படுவதைக் கண்டு, தமக்கு இனிமேல் வீடில்லை என்ற கவலை இல்லாமல் போகப்போவதாக எண்ணி ஆனந்தக்கூத்தாடாத குறையாக மகிழ்ந்திருந்தனர். அதை மெய்ப்பிப்பது போல ஒவ்வொரு குடும்பத்துக்கும் தனித்தனியான மலசலகூடம், காஸ் அடுப்பு, மின்னிணைப்பு வசதி எல்லாவற்றுடனும் கூடிய வீடுகள் வன்னி மற்றும் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளிலும் அமைக்கப்பட்டு பூர்த்தியாகும் நிலையை எய்தியிருந்தன. பெரும்பாலான மக்கள் தமக்கென ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பில் எழுகின்ற வீட்டைத் தினமும் சென்று பார்வையிட்டு, பூரிப்படைந்தும் வந்தனர்.

இந்த மகிழ்வின் மீது யார் கண்பட்டதோ தெரியவில்லை.வீடமைப்புப் பணிகள் பூர்த்தியான பின்னரும் அவற்றை உரிய மக்களிடம் ஒப்படைக்க முடியாத நிலை தோன்றியிருக்கிறது. இதற்குக் காரணம் கேட்டால் பொறுப்பான ஒவ்வொருவரும் வேறுதிசைகளை நோக்கித் தம் சுட்டுவிரலைக் காட்டிவிட்டு நழுவுகின்ற நிலையே தொடர்கின்றது. எனினும் வீடமைப்புப் பணியைப் பொறுப்பெடுத்த ஒப்பந்தகாரர்கள் வீடமைப்பு வேலைகள் நிறைவுற்ற பின்னும் அந்த வீடுகளுக்கான திறப்பினை ஒப்படைக்க மறுக்கின்றனர் என்ற கதையாடலே அதிகமாக உலா வருகின்றது. ஆனால் இந்தப் பின்னணியை ஆராய இறங்கிய போது, வீடமைப்புத் திட்டத்தின் பின்னால் உள்ள மிகப்பெரிய தில்லு முல்லுகள் பலவும் வெளிப்பட்டன.

இந்திய அரசின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்ட வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் வீடுகள் புதிதாக நிர்மாணிக்கப்பட நிச்சயிக்கப்பட்டது. இந்தப் பணிக்கான ஒப்பந்தத்தை இந்திய அரசிடம் இருந்து, எச்.பி.எல் என்ற நிறுவனம் பெற்றுக் கொண்டது. அதன் பின்னர் கணிசமான லாபத்துடன் ,ஆர்.பி.பி என்ற இன்னொரு நிறுவனத்திடம் எச்.பி.எல் நிறுவனம் அந்தப் பணியைக் கைமாற்றியது. இந்த ஆர்.பி.பி நிறுவனமும் நேரடியாகக் கட்டுமானப்பணிகளில் ஈடுபடாமல் உள்ளூர் ஒப்பந்தகாரர்களிடம் பகுதி, பகுதியாக வீடமைப்புத்திட்டத்தைப் பகிர்ந்தளித்தது. இதற்காக வீடமைப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மாவட்டங்களில் அந்தந்த மாவட்டச் செயலகங்களில் திட்டப் பணிப்பாளர்கள், ஆர்.பி.பி நிறுவனப் பிரதிநிதிகள், உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் என்போருக்கிடையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. இதன்போது நிர்மாணிக்கப்படவுள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆர்.பி.பி நிறுவனத்தினர் தெரிவித்தனர். ஆனால் உண்மையில் ஒவ்வொரு வீட்டுக்கும் 12 லட்சம் ரூபாவை இந்திய அரசு ஒதுக்கியிருந்தது. அதில் ஒவ்வொரு வீட்டுக்கும் தலா 2 லட்சம் ரூபாவை இருந்த இடத்திலேயே ஏப்பம் விட்டபின்னர், 10 லட்சம் ரூபாவுக்கு வீடுகளை நிர்மாணிக்குமாறு உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் வேண்டப்பட்டனர். இதற்கான ஒப்பந்தப்பத்திரம் தயாரிக்கப்பட்டு, அதில் இரு தரப்பினரும் கையெழுத்திட வேண்டும் என உள்ளூர் ஒப்பந்தகாரர்கள் தெரிவித்தனர்.

## கோணல் கோலங்கள்

எனினும் அத்தகைய ஒப்பந்தப்பத்திரத்தைத் தயாரிக்க காலம் போதாமல் இருப்பதால், உடனடியாக வீடமைப்புப் பணியை ஆரம்பிக்குமாறும், காலக்கிரமத்தில் ஒப்பந்தப்பத்திரம் பெற்றுத்தரப்படும் எனவும் செயலக அதிகாரிகள் உறுதிமொழி வழங்கினர்.

அதன்பின்னர் கையில் உள்ள காசைப் போட்டு மளமளவென்று கட்டுமானப்பணிகளில் ஒப்பந்தகாரர்கள் இறங்கினர்.அத்திபாரம் கட்டப்பட்ட நிலையில் ஒப்பந்தகாரர்களின் தலையில் ஒரு இடியை இறக்கியது ஆர்.பி.பி நிறுவனம். முன்னர் வாக்குறுதியளித்தபடி வீடொன்றுக்கு 10 லட்சம் தரமுடியாதென்றும், 8.5 லட்சம் மாத்திரமே தரலாமென்றும் அவர்கள் சொன்னதால், ஒப்பந்தகாரர்கள் மேற்கொண்டு கட்டுமானப்பணிகள் செய்யாமல் முரண்டு பிடிக்க, ஆர்.பி.பி நிறுவனம் பணிந்து வந்தது. நீங்கள் கட்டி முடியுங்கள். முதலில் சொன்ன தொகையினையே தருகிறோம் எனச் சமாதானம் பேச, மீண்டும் வீடுகள் உயிர்பெறத் தொடங்கின.ஆனால் கட்டம் கட்டமாகக் கொடுக்கப்பட வேண்டிய தொகையை , கொஞ்சம் கொஞ்சமாகவே ஆர்.பி.பி நிறுவனம் கிள்ளித் தெளித்துக் கொண்டிருந்தது.

எனினும் தற்துணிவில்- எப்படியும் பணம் வந்துவிடும் என்ற நம்பிக்கையில்- வீடுகளைக் கட்டி முடித்தனர் ஒப்பந்தகாரர்கள். கிட்டத்தட்ட கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களில் ஏறக்குறைய 50 ஒப்பந்தகாரர்கள் இவ்வாறு தமக்கென ஒதுக்கப்பட்ட வீடுகளைக் கட்டிமுடித்த பின்னரும் வழங்க வேண்டிய பணத்தைக் கொடுக்காமல் ஆர்.பி.பி நிறுவனம் இந்தா, அந்தா என்று இழுத்தடித்துக் கொண்டிருந்தது.செயலக அதிகாரிகளும் ஒழுங்கான பதில் சொல்லாமல் ஒப்பந்தகாரர்களுக்குச் சினமூட்டினர். விளைவு? தமக்குரிய பணத்தை முழுமையாகத் தரவிட்டால் வீடுகளின் திறப்புகளை ஒப்படைக்க மாட்டோம் என ஒப்பந்தகாரர்கள் நிபந்தனை விதித்தனர். அதன் பின்னர் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக நாங்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் 8.5 லட்சம் மட்டுமே தருவோம் என ஆர்.பி.பி நிறுவனம் கறாராகச் சொல்லி, ஒப்பந்தகாரர்களின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டது.

**ஓடுகாலி**

ஏற்கனவே கோடிக்கணக்கில் கடனை வாங்கியே இந்த வேலையில் இறங்கினோம்.அதற்கே ஒவ்வொரு மாதமும் லட்சக்கணக்கில் வட்டி கட்ட வேண்டிய நிலை. மேலும் 10 லட்ச ரூபா எஸ்ரிமேட்டில் கட்டிய வீடுகளுக்கு எட்டரை லட்சம் மட்டுமே தருவதாக இருந்தால் வட்டியால் வருகின்ற இழப்புடன், மிகப்பெரியளவிலான நஷ்டத்தையும் நாங்கள் சந்திக்க வேண்டிவரும் . கிட்டத்தட்ட லட்சக்கணக்கான பணத்தைச் செலுத்த வேண்டிய கடனாளிகளாக மாறவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அத்துடன்இப்போதும்தரவேண்டிய பணத்தை பிச்சை போடுவது போல , பிய்த்துப் பிய்த்தே தருகிறார்கள் என்று அங்கலாய்க்கிறார்கள் ஒப்பந்தகாரர்கள்.

ஆர்.பி.பி நிறுவனம், ஒப்பந்தகாரர் , அரச அதிகாரிகள் என்போரின் இத்தகைய முரண்பாடுகளால் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத பரிதாபத்துடன், மாரி மழைக்கு என்ன செய்யப்போகிறோம்? என்ற ஏக்கத்துடன் கலங்கி நிற்பது அப்பாவி மக்கள்தான். ★

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
25 . 08 . 1966

அம்மாள் அடியில்
16 . 10 . 2010



அமரர் பரமசாமி ஜெயேந்திரன்

கங்கையானது கண்களின்று
பொங்கி விம்முதே நெஞ்சம் சேர்ந்து
உமதன்பு உறவுகள் எமைவிட்டு
எங்கு தான் சென்றீரோ?
மறக்குமோ உங்களை நெஞ்சம்
உங்கள் காலடியே எங்கள் தஞ்சம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

### சுகநலம் குறித்த விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.5

பாடசாலைகள் மற்றும் பிரதேச செயலகங்களில் சுகநலம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வுகள் இன்று புதன்கிழமை இடம் பெறவுள்ளன.

பாடசாலை மாணவர்களின் போசாக்கு மதிப்பீடும் அந் தந்தப் பகுதிகளுக்குரிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும்குடும்ப நல உத்தியோகத் தர்கள், மேற்பார்வை உத்தியோகத்தர்களின் நெறிப்படுத்தலில் சுகா தார வைத்திய அதிகாரிகளின் மேற்பார்வையில் நடைபெறுவதுடன்பாடசாலைகளில் சுகநலம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

அத்துடன் இன்றைய தினம் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான சுகநல விழிப்புணர்வு நிகழ்வுகள் அந்தந்தப் பிரதேச செயலர்கள் தலைமையில் நடைபெறுவதுடன் இதில் அந்தந்த பொதுச் சுகாதார பரிசோதகர்களும் குடும்பநல உத்தியோகத்தர்களும் இணைந்து செயற்படவுள்ளனர். (வ-313)

விற்பனையாளர் தேவை

கொழும்பில் உள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு
க.பொ.த.(சா/தரம்) சித்தியடைந்த, மேலதிக
தராதரங்களையுமுடைய விற்பனையாளர் தேவை. இவர்
25-40 வயதுக்கு இடைப்பட்டவராகவும் ஆங்கிலம் தெரிந்த
வராகவும், சிங்கள மொழி கதைக்கக் கூடியவராகவும் இருத்
தல் நன்று. வேலை அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

விண்ணப்பிக்கவும்:
மே/ பா உதயன்,
விளம்பர இல:- 4180
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அணி திரள்வோம்
உரிமையைப் பாதுகாப்போம்

★ அழிந்த எம் தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப!
★ எமது அரசியல் உரிமையை நிலைநாட்ட!
★ பாராளுமன்றத்தில் எமது இனத்தின் உரிமைக் குரல் கொடுக்க
★ இனத்தின் ஐக்கியத்தை வலியுறுத்தி அரசியல் தீர்வை வென்றெடுக்க
★ எதிர்கால இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்த அணிதிரள்வீர் வாக்காளர் பதிவை இன்றே செய்வீர்

18 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் பதிவை மேற் கொண்டு வாக்குரிமையை உறுதிப்படுத்துவோம்.





'உரிமைக்குக் குரல் கொடுப்போம்
யாழ். மாநகரசபை உறுப்பினர்

# வண்ணை வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

# மகிஷாசூர சம்ஹார சிறப்புமலர்

## 05.10.2011 மாலை 4.30 மணிக்கு





விசேட அபிஷேகம்
பிற்பகல்: 3 மணி
விசேட பூசை மாலை:
4 மணி
வசந்த மண்டப பூசை
மலை: 4.30 மணி
தொடர்ந்து மகிஷாசுர
சம்ஹார உற்சவம்
நடைபெறும்.

## ஆலய பிரதம குருவின் அருளாசிகள்



சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்.நல்லை நகரிலே சிங்காசனத்தை சிம்மாசனமெனக் கொண்டு அரசாட்சி செய்து எம்மையெல்லாம் உய்விக்கும் வீரமாகாளி அம்மன் ஆலயத்திலே இன்று ''மகிஷாசுரவர்த்தனி'' மகிஷாசுரனை வதம் செய்கின்ற காட்சியினை அம்பாளின் அடியார்கள் அனைவரும் கண்டுகளித்துப் பராசக்தியின் அருட்பார்வை கிடைக்கப் பெறுவோமாக. இவ்வாலயத்திலே வருடாந்த மஹோற்சவம் நடைபெறுவதற்கு முன்னரே நவராத்திரி 9 ஆம் நாளாகிய நவமி நாளிலே பெருவிழாவாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. ''மகிஷாசுர வதம்'' பெரும் விழாவாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இலங்கையின் ஆலய வரலாற்றிலேயே முதன் முறையாக '' மகிஷாசுர வதம்'' நடைபெற்ற பெருமை வீரமாகாளி அம்மன் ஆலயத்துக்குரியதே. ஆலய மூலவிக்கிரகமாகிய ''மகிஷாசுரவர்த்தனி'' வடிவில் 1981 ஆம் ஆண்டு எழுந்தருளி விக்கிரகமாகவும் பிரதிஷ்டை செய்யப்பெற்று ''மகிஷாசுரவர்த்தனி'' எழுந்தருளியே பின்வந்த காலங்களில் மகிஷாசுர வத நிகழ்வில் எழுந்தருளுவது வழமை. அம்பிகையின் தலையலங்காரம், திருக்கரங்களின் அமைப்பு, எட்டுக்கரங்களிலும் அவள் கொண்டுவரும் அபிநயகங்கள், முத்திரைகள், ஆயுதங்கள் எனக் கண்கொள்ளாக் காட்சியாக இன்று அருள்பாலிப்பாள் அடியார்கள் அனைவரும் மகிஷாசுரனை ''மகிஷாசுரவர்த்தனி'' வதம் செய்யும் காட்சியைக் கண்ணாரக் கண்டு அம்பிகையின் அருள் கிடைக்க வீரமாகாளி அம்மனை வேண்டுகின்றேன்.

**ஆலய பிரதம குரு செல்வராசாக் குருக்கள்.**

## நல்லை ஆதீன முதல்வரின் ஆசியுரை



அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லியாக நல்லை நகரில் வீற்றிருந்து அருளாட்சி புரிகின்ற வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இன்று மகிஷாசுரனை அன்னை வதம் செய்யும் காட்சியை நாமெல்லாம் கண்டுகளிக்கக் கண்கோடி வேண்டுமென்றாலும் மிகையாகாது. யாழ்ப்பாண அரசு தோன்றிய காலத்திலேயே ஆரியச் சக்கரவர்த்திகளால் போர்த்தெய்வமாக வழிபடுவதற்காக இவ்வாலயம் நிர்மாணிக்கப்பெற்றது. தமிழ் மன்னன் ''சங்கிலியன்'' தன் வீரவாளை விரமாகாளி அம்மன் பாதத்தில் வைத்துப் பூசை செய்த பின்னரே போருக்கு எடுத்துச் செல்வதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

இலங்கையிலேயே உள்ள ஆலயங்களில் முதன்முதலாக ''மகிஷாசுர வதம்'' நிகழ்வு நடைபெற்ற முதல் ஆலயமும் இவ்வாலயம் தான். மூலவிக்கிரகமாக இவ்வாலயத்தில் மகிஷாசுர வர்த்தனியே அமர்ந்திருந்து அருள்புரிகின்றாள். இவ்வாறான சித்திகள் பலபெற்ற இவ்வாலயத்தில் கடந்த எட்டு நாள்களாக நவராத்திரி பூஜையில் வீற்றிருந்து எமக்குத் தரிசனமளித்து எழுந்தருளி ''மகிஷாசுர வர்த்தனி'' இன்றைய தினம் மகிஷாசுரனை வதம் செய்ய எட்டுக் கைகளிலும் ஆயுதம் தாங்கி சிங்காசனத்தில் வீற்றிருந்தவாறு படைசூழ மகிஷா சுரனோடு போர் புரியும் அருட்காட்சியை அடியார்கள் யாவரும் கண்டுகளித்து அன்னையின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

*''என்றும் வேண்டும் இன்ப அன்பு''*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானதேசிக பரமாச்சார்ய சுவாமிகள்,**
**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர்.**

## நூற்றாண்டாகத் தொடரும் வதம்

*சக்தி வழிபாட்டின் தொன்மையையும் தமிழுக்கும் அவ்வழிபாட்டுக்கும் இடையே உள்ள தொடர்பையும் தெள்ளத் தெளிவாக விளக்கி விடுகின்றது வீரமாகாளி அம்மன் ஆலய வரலாறு. யாழ்ப்பாண அரசு நிறுவப்பட்ட காலத்திலேயே தமிழ் மன்னர்களான ஆரியச் சக்கரவர்த்திகளில் யாழ்ப்பாண அரசின் முதல் மன்னனாகக் கருதப்படும் கூழங்கைச் சக்கரவர்த்தி என்பவனால் தலைநகரமான நல்லூரின் மேற்குத் திசையில் இந்தக் கோயில் அமைக்கப்பட்டதாக ''யாழ்ப்பாண வைபவ மாலை'' கூறுகின்றது. போர்த்துக்கீசரால் யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டபோது நடைபெற்ற போரும் இந்த ஆலயம் அருகே நடைபெற்றதாக ''குவைறோஸ்'' எனும் போர்த்துக்கீசப் பாதிரியாரால் எழுதப்பட்ட நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்நிய நாட்டவரின் ஆட்சியில் யாழ்ப்பாணம் இருந்த போது பல இந்துக் கோயில்கள் இடித்தழிக்கப்பட்ட போதும், இந்த ஆலயம் அவர்களால் ''மாதா கோயில்'' என நினைக்கப்பெற்று வீரமாகாளி அம்மனின் அருளால் இடித்தழிக்கப்படாமல் காப்பாற்றப் பெற்றது.*

*இத்தகைய வரலாற்றுச் சிறப்பும், அற்புதமும் நிறைந்த இந்த ஆலயத்தில் ஆலய வருடாந்த மஹோற்சவம் நடைபெற முன்னரான காலம் முதலே ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நவராத்திரி விழாவும், நவராத்திரி இறுதி நாளன்று நவமித் திதியில் மகிஷாசுரவத நிகழ்வும் ஆண்டுதோறும் சிறப்புற நடைபெற்று வந்தன. நவராத்திரி விழாவே ஆலய மகோற்சவம் போல கருதப்பட்டு வந்தது.*

*அத்தியடி வாழ் மக்களால் நூற்றாண்டுக்கும் மேலாக பரம்பரை பரம்பரையாக இந்த உற்சவம் ஆண்டுதோறும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. அத்தியடியிலிருந்து அம்பாள்படை ஆடையலங்காரம், பூச்சலங்காரத்தும் ''காளி'' சகிதம் மேளதாள ஊர்வலத்தோடு அத்தியடி புதுவீதியூடாக அத்தியடிவீரகத்தி விநாயகர் ஆலய முன்றில் ஊடாக அம்பலவாணர் வீதி, நாவலர் வீதி, ஆனைப் பந்திச் சந்தியூடாகப் பயணித்துப் பின் பருத்தித்துறை வீதியூடாக வீரமாகாளி அம்மன் ஆலயத்தை சூரன் படைகள் வந்து சேரும் வீதிகளில், குதிரைப்படைவீரர், காலாட்படை வீரர், நாரதர், அனுமான் ஆடியாடிப் பயணிக்கும் கட்சி சிறுவர்களை மிகவும் கவர்ந்திழுத்து வீதியெங்கும் விழாக்கோலம் பூணும்.*

*இலங்கை ஆலய வரலாறுகளிலேயே முதன்முதல் ''மகிஷாசுரவத நிகழ்வு'' நடைபெற்றது இந்த ஆலயத்திலேயே என்பது மட்டுமல்லாமல் வருடாவருடம் தவறாது இன்றுவரை தொடர்ந்து நூற்றாண்டுக்கும் மேலாக நடைபெற்று வருகின்றது. இந்த ஆலய மூலவிக்கிரகமும் மகிஷாசுரவர்த்தனியே. இதன் காரணமாக, 1981 ஆம் ஆண்டு மகிஷாசரவர்த்தனி எழுந்தருளி விக்கிரகம் அந்த ஆண்டு சித்திரை உத்தர நன்னாளில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின்னர் அன்று முதல் இன்று வரை மகிஷாசு ரனை வதம் செய்ய மகிஷாசுர வர்த்தனியே எழுந்தருளுவது வழமை. அழகிய சிங்க வாகனத்திலே ஒரு காலை மடக்கியவாறு அணியும் அணிக்கு அழகு தருபவளாக, மொழிக்கும் நினைவுக்கும் எட்டாத திருவுடையவளாக எட்டுக்கரங்களிலும் ஆயுதம் தாங்கி மகிஷா சுரனை வதம் செய்ய எழுந்தருளும் காட்சி மிகவும் அற்புதக் காட்சி.*

**வி.யாழினி .**

திருசெந்தூரன்
நெற்கபே
138/3, கோயில் வீதி, நல்லூர்.
0213218686.

நம்பிக்கை, நாணயம்மிக்க தங்க நகைத்
தேவைகளுக்கு
கிருஷ்ணா நகை மாளிகை
இல.09,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை நிறுவனம்:
கிருஷ்ணா அடகு கடை
இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

நியூ ராம் கொன்ஸ்ரக்சன்
த்யன் & கட்டடப்பொருள்
விநியோகத்தர்கள்
263,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அம்பாள்
பேக்கரி
பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

சரவணா
ரெக்ஸ்ரெயில்
பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212221723.

# அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயத்தின் அத்தியாவசியத் தேவைகள் நிறைவேறுமா?



அல்லைப்பிட்டி சைவமக்கள் நிறைந்த பூமியாக இருந்த அன்றைய காலகட்டத்தில் சைவசமயப் பிள்ளைகளுக்கு அதனைப் போதிக்க ஒரு பாடசாலை தேவை என உணர்ந்த பெரியார் பொன்னம்பலம் சிதம்பரநாதனால் கல்வியும் தெய்வீக வாழ்க்கையும் இணைந்ததாக உருவாக்கப்பட்ட பாடசாலைதான் அல்லைப் பிட்டி பராசக்தி வித்தியாலயம்.

அன்னை பராசக்தியை நினைவில் கொண்டு அந்தப் பெயரிலேயே பொன்னம்பலம் இந்தப் பாடசாலையை அமைத்தார் என அங் குள்ள சிலர் கூறுகின்றனர். 1934ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இதுவாகும்.

இந்தப் பாடசாலையின் அதிபர்களாக திருமதி அ.சண்முகநாதன், க.அருமைநாயகம் ஆகியோர் கடமையாற்றியுள்ளனர். ரி.சபாரத்தினம், கை.பேரின்பநாயகம் ஆகிய இருவரும் முறையே ஒரு மாதமும் ஒரு கிழமையும் அதிபர்களாகப் பாடசாலையை நிர்வகித்துள்ளனர்.

இதனால் பாடசாலையின் விவரங்களைப் பெற முடியாத நிலை இருப்பதாகவும் அதிபர்களாகப் பணியாற்றியவர்களின் விவரங்களைப் பெறுவது மிகவும் சிரமமாக உள்ளதாகவும் தற்போதைய அதிபர் கு.திருச்செல்வம் கூறுகிறார்.

1990 காலப்பகுதியில் ஏற்பட்ட யுத்த நிலை காரணமாகப் பாடசாலைக் கட்டடம் மற்றும் ஆவணங்கள் முற்றாக அழிந்ததால் வழங்களை இழந்த நிலையில் இந்தப் பாடசாலையின் அயலில் உள்ள இந்திரஜித்து என்பவரின் வீட்டில் தொடர்ந்தும் பாடசாலை இயங்கியது. 1991 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி தீவுப்பகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்ததைத் தொடர்ந்து மாலை நேரப் பாடசாலையாக யாழ்.புனித மரியாள் மகாவித்தியாலயத்திலும் பின்னர் கட்டடக் கூட்டுத்தாபன ஒழுங்கையில் அமைந்துள்ள 'நியூ மாஸ்டர் இன்சிரியூட்', என்னும் தனியார் கல்வி நிலையத்திலும் இயங்கியது. அதன்போது இந்தப் பாடசாலையின் பொறுப்புக்களை திருமதி சாருமதி நாகநாதன் ஏற்றுக் கொண்டிருந்தார். அல்லைப்பிட்டி றோ.க. பாடசாலையும் இதனுடன் இணைந்து செயற்பட்டது. மாணவர் தொகை குறைவு என்பதால் கல்வித்திணைக்களம் பராசக்தி வித்தியாலய்த்துடன் றோ.க. பாடசாலையையும் இணைத்துக் கொண்டதாகக் கூறப்பட்டது. 1995 இல் தென்மராட்சிக்கான இடப்பெயர்வு வரை இந்தப் பாடசாலை மேற்கூறப்பட்ட தனியார் நிறுவனத்திலேயே இயங்கியது.

இடம்பெயர்ந்த மக்களில் குறிப்பிட்ட தொகையினர் 1996இல் அல்லைப்பிட்டிக்கு மீளவர ஆரம்பித்ததும் பராசக்தி வித்தியாலயத்தை மீண்டும் இயக்குவதற்கு முதற்படியாக இந்திரஜித்து என்பவரது வீடடில் மீண்டும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் கணிசமான அளவு மீண்டும் குடியேறாத நிலையில் மக்கள் நடமாட்டமற்ற பிரதேசமாகக் காணப்பட்ட அல்லைப்பிட்டிக்கு வந்து பாடசாலையில் இணைந்துள்ள பிள்ளைகளுக்கான கல்வியைத் தொடர முன் வந்த அனைத்து ஆசிரியர்களினதும் சேவை உணர்வினைப் பாராட்டவும் அல்லைப்பிட்டி மக்கள் தவறவில்லை.

மக்கள் படிப்படியாகத் தமது சொந்தப் பகுதிகளுக்கு வர ஆரம்பித்ததும் பராசக்தி வித்தியாலயம் வழமைக்குத் திரும்பிக் கொண்டிருந்தது.

1934 இல் இந்துபோர்ட்டின் (சைவ வித்தியாவிருத்திச் சங்கம்) உதவி பெற்று இயங்கிய இந்தப் பாடசாலையை 1960 இல் அரசு பொறுப்பேற்றுக் கொண்டது. அதைத் தொடர்ந்து புதிய கட்டடங்கள், வகுப்பறைகள் அமைக்கப்பட்டன. இதன் பின்னர் பொ.தியாகராசா அதிபராகப் பதவி வகித்த காலத்தில் விஞ்ஞானம், மனையியல், போன்ற வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதிபர் சி.சிறிஸ்கந்தராஜாவின் பதவிக் காலத்தில் கல்வியுடன் விளையாட்டு, இசை, நாடக வளர்ச்சியும் இடம்பெற்றிருந்தது.

வசதிகளற்ற நிலையிலும் தற்போது பாடசாலை வளர்ச்சியடைந்து செல்வதாகத் திருப்திப்படுகிறார்கள் அல்லைப்பிட்டி மக்கள். 1997 இல் க.பொ. த.(சா/த) நூறுவீத சித்தியைக் கண்டுள்ளது. மிகக்குறைந்த வளங்களுடன், கூடிய பெறுபேறுகளைப் பெற்றமைக்காக வடக்கு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு வானொலிப் பெட்டி ஒன்றைப் பரிசாக வழங்கியிருந்தது.

**லக்ஸ்மன்**

கல்விச் செயற்பாடுகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்துகின்றனர். புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகமான மாணவர்கள் நூறுக்கும் அதிகமான புள்ளிகளை ஒவ்வொரு தடவையும் பெற்றுக் கொள்கிறார்கள்.

இணைப்பாடவிதான செயற்பாடுகள் விளையாட்டுக்களிலும் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் போட்டிகளிலும் கோட்ட, வலய மட்டத்தில் திறமையான பெறுபேறுகள் கிடைத்துள்ளன.

(தொடரும்)




*அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி*

*அவர்களால் வடிவமைக்கப்பட்ட*

**முழுமை நல வாழ்வுக்கு**

**மனவளக்கலை யோகா**

எளியமுறை காயகல் பயிற்சி, எளியமுறை உடற்பயிற்சி, எளியமுறை தியானப் பயிற்சி மேலும் பல பயிற்சிகள் இந்தப் பயிற்சிகளின் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள் பலவாகும்.

வழங்குபவர்: மனவளக்கலை பேராசிரியர் கே.கணேசன் அவர்கள் (தமிழ்நாடு, இந்தியா)

இடம் : யாழ்.தவமையம் 14/4, ஆஸ்பத்திரி விதி, சஞ்புவானியார் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.
காலம் : 08.10.2011 தொடக்கம் 13.10.2011 வரை காலை 9.30 மணி முதல் 12 மணிவரை

இடம் : இணுவில் பரராச சேகரப்பிள்ளையார் மணிமண்டபம்
காலம் : 08.10.2011 தொடக்கம் 13.10.2011 வரை பிற்பகல் 4 மணி முதல் - 6 மணி வரை

*14 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் பங்குபற்றலாம். 08.10.2011 சனிக்கிழமை இலவச அறிமுக உரை நடைபெறும். தொடர்ந்து 5 நாள்களும் பயிற்சிகள் நடைபெறும்: பயிற்சிக்கு கட்டணம் உண்டு. முற்பதிவுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.*

தொடர்புகளுக்கு:
மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
8/3, கேசாவில் முன் ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
தவமையம்:
14/4, ஆஸ்பத்திரி வீதி, சஞ்யுவானியார் கோயில் அருகில், யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777368745, 0712208808, 0778010491, 021 222 0734

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



திரு. திருமதி சிவசுதன் - செல்வகௌரி தம்பதியரின் ஏக புதல்வி

**செல்வி நாகபூசணி**

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி 2011 ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார். அவருக்கு ''செல்வப்பிள்ளையார் துணைபுரிவார்''

வாழ்த்துவோர்:
அத்தை - சுலோ, மாமா - றமேஸ், தம்பி -விஸ்னு, தங்கை - அபிஸ்ணவி.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/ இராமநாதன் கல்லூரியிலிருந்து உயர் கல்விக்குத் தெரிவானோர்

1. செல்வி ஆ.ரூபனா
2. செல்வி ந.சுஜானி
3. செல்வி து.துஷ்யந்தினி
4. செல்வி இ.சுஜா
5. செல்வி மோ.ஷர்மிளாராணி
6. செல்வி ச.சிறித்தா
7. செல்வி செ.செந்தூரிக்கா
8. செல்வி இ.ஷியாணி
9. செல்வி அ.கேமா

க.பொ.த.சாதரண தரம் 2010

1. செல்வி சி. சங்கீதா 9 - ஏ
2. செல்வி ச.ஜசிந்தா 9 - ஏ

மெய்வல்லுநர் போட்டிக்கு மாகாண மட்டத்தில் வெற்றியீட்டி தேசிய மட்டத்திற்கு தெரிவானவர்கள்

1. செல்வி ச.லக்ஷா
2. செல்வி க.நிகேதினி
3. செல்வி த.நித்தியா
4. செல்வி ப. சினோபா

*இந்த மாணவர்களைப் பாராட்டுவதுடன் இவர்களை ஊக்குவித்த அதிபர், ஆசிரியர்களையும் ஏனைய சகல ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம். எமது கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும் என இவ் ஆசிரியர் தினத்தில் வாழ்த்துகின்றோம்.*

யா/ இராமநாதன் கல்லூரி,
மருதனார்மடம், சுன்னாகம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்

# நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கஞ்சாப் பொதிக்குள் வைக்கோல்

## திருகுதாளம் விட்ட பொலிஸார் விளக்கமறியலில்

கொழும்பு, ஒக். 5

வழக்கொன்றுக்கான தடயப் பொருள்களாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 19 கஞ்சாப் பொதிகளில் ஐந்திற்குள் கஞ்சாவுக்குப்பதிலாக வைக்கோல் சுற்றி வைக்கப்பட்டிருந்ததையடுத்து அவற்றை சமர்ப்பித்த ஹம்பேகமுக பொலிஸ் பொறுப்பதிகாரியையும் சார்ஜெண் டையும் விளக்கமறியலில் வைக்குமாறு வெல்லவாயா பதில் நீதிவான் அநுரதேசப் பிரிய உத்தரவிட்டார்.

பொலிஸ் விசேட செயலணிப் பிரிவினர் உடவளவை பிரதேசத்தில் மேற்கொண்ட அதிரடிச் சோதனையின்போது இருபது கிலோ கஞ்சாவுடன் கைது செய்தனர்.

சந்தேகநபருடன் கஞ்சாவும் ஹம்பெகமுக பொலிஸில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த கஞ்சாப் பொதிகள் வெல்லவாயா நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டபோது அவற்றுள் ஐந்து பொதிகளில் இருந்த கஞ்சா அகற்றப்பட்டு அதற்குப் பதிலாக வைக்கோல் அடைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மொனராகலை பொலிஸ் அத்தியட்சகர் எல்.பீ.குணசேகரவின் தலைமையில் மொனராகலை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (ச-5)



தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுகின்றனர். (ச-38)

## அயல்வீட்டு நாயைக் கொன்றவர் கைது

கொழும்பு,ஒக்.5

அயல் வீட்டுக்காரியின் செல்ல நாயைப் பொல்லால் தாக்கிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் நபரொருவரை தெடிகம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நாயின் உரிமையாளரான பெண் தெடிகம பொலிஸில் தெரிவித்த முறைப்பாட்டையடுத்து அதன் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு வரக்காப் பொல கால்நடை வைத்திய அதிகாரியின் சடலப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. தெலுந்தெனிய, மாம் பிட்ட கிராம சேவையாளரான இந்தப் பெண்ணின் வீட்டில் வளர்த்து வந்த அல்சேஷன் இன நாய் பாதையில் நின்றிருந்த சமயம் அதனை சந்தேக நபர் பொல்லால் தாக்கியுள்ளார். நாய் மயங்கி வீழ்ந்தும் அதனைத் தூக்கி நிலத்தில் அறைந்து கொன்றுள்ளார் என்று விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. தனது வீட்டிலுள்ள கோழிக்கூட்டில் இந்த நாய் புகுந்து கோழிகளைக் கடித்துக் குறிதறியதால் ஏற்பட்ட கோபத்தாலேயே அதனைக் கொன்று புதைத்ததாகச் சந்தேக நபர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். (ச-5)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

அம்பாறை,ஒக்.5

சம்மாந்துறைப் பிரதேசத்தில் மல்கம்பட்டி - அல்லிமுல்லை வீதியில் கஞ்சா வைத்திருந்த ஒருவரை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை கைது செய்துள்ளதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இந்த இடத்திற்குச் சென்ற பொலிஸ் குழுவினர், கல்முனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த நபரிடமிருந்து 400 கிராம் நிறையுள்ள கஞ்சாப் பொதியினை மீட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## அளவ்வ ரயில்விபத்துக் குறித்து அறிக்கை விரைவில் அமைச்சரிடம்

கொழும்பு, ஒக்.5

அளவ்வ என்ற இடத்தில் இரு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளவென அமைக்கப்பட்ட குழு தனது விசாரணையை நிறைவுசெய்து அறிக்கை தயாரித்துள்ளது.

ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி, ஆர்த்தர் சீ கிளார்க் மத்திய நிலையத்தின் பிரதிநிதி மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஆகியோர் விசாரணைகளை நடத்தவென நியமிக்கப்பட்ட குழுவில் அடங்கி இருந்தனர்.

இந்தக் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கை எதிர்வரும் நாள்களில் போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவிடம் கையளிக்கப்படும் என்று ரயில்வே திட்டமிடல் பணிப்பாளர் விஜயசமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 17 ஆம் திகதி அளவ்வ ரயில் நிலையப் பகுதியில் இரு ரயில்கள் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்தச் சம்பவத்தில் ரயில் சாரதி, உதவிச் சாரதி மற்றும் வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் உட்பட ஐந்துபேர் உயிரிழந்தனர் 33 பேர் படுகாயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
05.03.1941

மறைவு:
16.10.2010



அமரர்
சின்னத்தம்பி
துரைசிங்கம்

இன்று (05.10.2011) புதன்கிழமை அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சாமுவேல் மான், 1 ஆம் ஒழுங்கை,
டச்சுவீதி, உடுவில், சுன்னாகம்.

குடும்பத்தினர்.

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 13.12.1967
இறப்பு: 08.10.2008

அமரர்
தியாகராஜா
சுரேந்திரன்
(ஆசிரியர்,
ஹைலண்ட்ஸ் கல்லூரி,
ஹற்றன்)

எமது அன்புச் செல்வமே சுரேன்!
நீங்காத துயரில் எம்மை
ஆழ்த்திவிட்டுச் சென்று
ஆண்டுகள் மூன்று
ஆகிவிட்டது ஐயா!
பாசமுள்ள கடைக்குட்டியே
உமது நிழலின் குளிர்மையில்
வாழலாம் என
எண்ணியிருந்தோம் நாம்
எங்கள் எண்ணங்களைக் காலன்
மாற்றியமைத்து
விட்டான் போல் தெரிகின்றது
எங்கள் பேச்சிலும்
மூச்சிலும் உமது நினைவுகள் தான்
கண்முன்னே தோன்றுகின்றன
உறவுகள் உம்மைத்
தேடுகின்றார்கள்
உமது ஆத்மா ஆண்டவன் அடியில்
சாந்தி பெறுவதாக
ஓம் சாந்தி

குடும்பத்தினர்
இல.28,2 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

திதி:
நவமி [05.10.2011]

## யாழ்.மாவட்ட செயலக வாணி விழா இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.5

யாழ்மாவட்டசெயலகவாணிவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட நலன்புரிகழகத் தலைவர் ய.பரந்தாமன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் வரவேற்புரையை நலன்புரிக்கழக உப தலைவரும் மாவட்ட சமுர்த்தி ஒருங்கிணைப்பாளருமான ஏ.ரகுநாதன் நிகழ்த்துவார்.

ஆசிரியுரையை யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் நிகழ்த்துவார். இந்த நிகழ்வில் ''வாழ்வியல் விழுமியங்களை பெரிதும் பேணுபவர்கள் ஆண்களா? பெண்களா?'' என்ற தலைப்பில் பட்டி மன்றமும், சமயச் சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (ச)

புலமை கல்வி நிறுவனம்
மானிப்பாய்

தரம் 5, தரம் 4 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வகுப்புக்கள் ஆரம்பம்.
ஆசிரியர் திரு.க.கலாமோகன்
(BA.Dip..in.Tech)
காலம்: 06-10-2011 (விஜயதசமி அன்று)
தரம் 5 (தற்போது தரம் 4) - பிரிவு II பி.ப 4.30
தரம் 4 (தற்போது தரம் 3) - பிரிவு I பி.ப.3.00

புலமை கல்விநிறுவனம்,
இணுவில் வீதி,மானிப்பாய்

விற்பனைக்கு

NISSAN VANNET (MAZDA MODEL)
R2 ENGINE PARTS
HOOD CARIER (அலுமினியம்)
SIDE MIRROR (LEFT)
என்பன பார்வையிடுவதற்கும் ஏனைய தொடர்புகளுக்கும். 0772306653

சேவை


Singapore,u.k போன்ற நாடுகளுக்கான கற்கையுடன் கூடிய வேலை வாய்ப்பு.தொடர்பு :- 0779692434

Galaxy Cabs
Call us 021 - 3201201
35/= Per Km.

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 15.09.1967
மறைவு: 26.09.2009

அமரர் சிவசுப்பிரமணியம்
கிருஸ்ணதாஸ் (கனடா)



ஏற்றமுடன் நாம் வாழ
ஏணியாய் நின்ற நீங்கள் - எமை
ஏகாந்தமாய் தவிக்கவிட்டு
ஈராண்டுகள் ஆனதுவோ?
எமதுயிர் தந்தையின்
ஏங்கித் தவிக்கும்
ஏகாந்த நினைவுகளுடன்

எஸ்.சந்திரதாசன்
50/18, செட்டித்தெரு நல்லூர்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 04.12.1973
மறைவு: 05.09.2011



அமரர் திருநாவுக்கரசு
கணேசலிங்கம் (கணேஸ்)

கடந்த 05.09.2011 அன்று இறைபதம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வம் திருநாவுக்கரசு கணேசலிங்கம் (கணேஸ்) அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (05.10.2011) புதன்கிழமை ஏழாலை தெற்கு, மயிலங்காட்டில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

குடும்பத்தினர்
ஏழாலை தெற்கு, மயிலங்காடு.

# மரண அறிவித்தல்



## சாமுவேல் பெஞ்சமின்

### (பிரபல கர்நாடக ஒப்பனைக் கலைஞர்)

யாழ்ப்பாணம், பழைய பூங்கா வீதி, கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சாமுவேல் பெஞ்சமின் 30.09.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் - ஞானம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி திரேசாவின் (கிறேஸ்) பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசரெட்ணம், முத்துராசா, நீற்றம்மா, காலஞ்சென்ற பீற்றர் மற்றும் சிசிலியா, மரியநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் இம்மானுவேல் (அமைப்பாளர், திருமறைக்கலா மன்றம், பிரான்ஸ் கிளை), அன்ரனி (கொழும்பு), அலோசியஸ் (பிரான்ஸ்), மேரி மக்டலின் (ஹொலன்ட்), சாள்ஸ் (NHDA, கரித்தாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்), டண்ஸ்ரன் (கனடா), சாம்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரிராணி (இந்தியா), ஸ்ரெலா (கொழும்பு), காந்தரூபி (பிரான்ஸ்), தங்கராஜா (ஹொலன்ட்), எழில் வானம்பாடி (ஆசிரியை, யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), செல்வராணி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் தீபன் - ஏஞ்சல் (கனடா), தீபா - சுரேன் (லண்டன்), சோபா - ஜெயந்தன் (கனடா), யூட் (லண்டன்), கிறேசியன் (கொழும்பு), அகல்யா (பிரான்ஸ்), அகேந்திரா (பிரான்ஸ்), ஜோ - கிம் (ஹொலன்ட்), சாரா (ஹொலன்ட்), நொய்மி (கனடா), ஜஸ்மி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ரானியா (லண்டன்), ஆரோன் (லண்டன்), பேபியன் (கனடா), ஜெறசோ (கனடா), ஜோர்தான் (ஹொலன்ட்), கொலின் (ஹொலன்ட்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.10.2011) புதன்கிழமை பி.ப. 3.30 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*96, பழைய பூங்கா வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

நல்லாசானாகத் தகைமை பெற்று 2011.10.06 இல் ஜனாதிபதி விருதினை பெற்றுக்கொள்ளும் எமது மகாவித்தியாலய ஆசிரியர் திரு.செல்வரட்ணம் றொகேஷியன் அவர்களை மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்.



நயப்புடனே சேவையாற்றி
நல்லாசான் விருது பெறும்
நேசமுள்ள ஆசான் றொகேஷியனை
பாசமுடன் வாழ்த்துகின்றோம் வளர்கவென

யா/ பண்ணாகம் மெய்கண்டான்
மகா வித்தியாலய கல்விச் சமூகம்
பண்ணாகம், சுழிபுரம்.


# சாவகச்சேரி வைத்தியசாலை மருந்தகத்துக்கு 'பிரின்ரர்' வழங்கினார் சிறிதரன் எம்.பி

தென்மராட்சி, ஒக்.5

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலை மத்திய மருந்தகப் பாவனைக்கென 'பிரின்ரர்' ஒன்றை அண்மையில் வழங்கி யுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளர் க.அருந்தவபாலனின் முயற்சியின் பயனாக வைத்தியசாலை மத்திய மருந்தகத்தின் நீண்டநாள் தேவையான கணினிக் குரிய பிரின்ரர் அன்பளிப்பாக வழங்கப் பட்டுள்ளது.

இதேவேளை (வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் விடுதிகளுக்கான மருத்துவ உபகரணங்களின் இரண்டாவது தொகுதி நேற்று முன் தினம் கொண்டு வரப்பட்டுள்ளது.

பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தி னால் இந்த மருத்துவ உபகரணங்கள் கொண்டு வரப் பட்டு கையளிக்கப்பட்டன.

கடந்த மாதம் முதலாவது தொகுதி மருத்துவ உபகரணங்கள் கையளிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. (த-207)

# எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக்.5

பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லை நிர்ணயம் தொடர்பாக பொதுமக்களின் கருத்தை அறிவது தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மு.ப 11 மணியளவில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற வுள்ளதாக அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித் துள்ளார். (த-15)


## கணினி விற்பனைக்கு

P(VI)கணினி LCD Monitorமற்றும்
அனைத்துப் பொருள்களுடனும் ஒரு வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு.
Internet, Skype, V/call பாவிக்கலாம்.Free 4GB Pen Drive/ Web Camera. 19750/= மட்டுமே. 0212224865

Sky Mega Pc
737, K.K.S. Road, Jaffna. (யாழ். இந்துக் கல்லூரி முன்பாக)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

செல்வி பானுகா மனோகரன்



2011 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலையில் கல்வி கற்று 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த பானுகா மனோகரன் அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் கல்வியில் மேலும் பல வெற்றிகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
அம்மா, அண்ணாமார்,
அம்மப்பா, அம்மம்மா,
சித்திமார், சித்தப்பாமார்,
மாமாமார், சகோதரர்கள்.

## ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி

ஒரு குழந்தை தன் தாய் மொழியைப் பேசப் பழகுவதற்காக இலக்கணத்தைக் கற்றுக்கொள்வதில்லை. மாறாக தன் குடும்பத்தில் உள்ளவர்கள் பலரும் பேசும் வசனங்களை அவதானித்தே தானும் அது போலப் பேசப்பழகுகிறது. ஒரு மொழியைப் பேச பழகுவதற்கான சரியான வழி இது போன்ற பழக்கப்படுத்தலே.

எமது ஆங்கிலக் கற்பித்தல் முறையும் இது போன்றதே. இங்கு இலக்கணப் பயிற்சியோ, எழுத்துப் பயிற்சியோ வழங்கப்படுவதில்லை. மாறாக மாணவர்களுக்கு வசன அமைப்பு முறையை விளக்கி ஏனையவர்களுடன் அவர்களை உரையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலம் 3 மாதத்திலேயே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகிறது.

எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இணைந்த அனைத்து மாணவர்களுமே தற்போது ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்புகிறீர்களா? பயிற்சியில் இணைய விரும்பும் இளைஞர் யுவதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலை மாணவர்கள், பணியாளர்கள், கிராம சேவகர்கள் 08/10/2011 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 a.m பிரிவு III 01 - 03 p.m
பிரிவு II 10 - 12 a.m பிரிவு IV 03 - 05 p.m

03 மாத பயிற்சிநெறிக் கட்டணம்
ரூபா 3000.00

பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு , மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசமுடியாதுவிடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம்.

SAAMSON ENGLISH 279,Clock Tower Road, Jaffna. Tel:0776214567

## திருமதி லீலா கணேசலிங்கம் அவர்களின் சேவை நலன் பாராட்டு



யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் 20 வருடங்கள் மனையியல் ஆசிரியையாக மகத்தான சேவையாற்றி தமது 57 ஆவது வயதில் 05.10.2011 திகதியன்று சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் எம் சிரேஷ்ட ஆசிரியை திருமதி லீலா கணேசலிங்கம் அவர்களின் உன்னத சேவையை மனதாரப் பாராட்டுவதுடன் அவரின் ஓய்வுக் காலம் மன அமைதியும் மகிழ்வும் நிறைந்திட வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவர்கள்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை.



யா/மூளாய்.
சைவப்பிரகாச வித்தியாலய
அதிபர்
சிறந்த ஆசிரிய விருதுக்குரியவர்
மாண்புறு
திருமதி சிவமலர் சுந்தரபாரதி
அவர்கள் மீண்டும் ஒரு சிறந்த
அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு
2011 இல் அதற்கான
ஜனாதிபதி விருதினை
அவர்
பெற்றுக்கொள்வதை



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

சற்குருவாக அன்று மூளாய் சைவப்பிரகாச வந்து
பற்பல பணிகளாற்றி சிறந்த ஆசிரியர் விருதும் பெற்று
பொற்பதம் பதித்து நின்ற திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்கள்
மற்றுமோர் ஜனாதிபதி விருதும் பெற்றார் சிறந்த அதிபராய் வாழி வாழி!

கற்றுணர்ந்தொழுகி நின்றோர் கருத்தினைக் கவர்ந்து வந்து
நற்பெருந்தவத்தாலெங்கள் சைவப்பிரகாச தலைமை ஏற்று
உற்ற நற் பதவி காக்கும் திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்கள்
மற்றுமோர் ஜனாதிபதி விருதும் பெற்றார் சிறந்த அதிபராய் வாழி வாழி!

மற்றவர்க்காக வாழும் மாண்பினை புரிந்து வந்து
பெற்றதோர் தாயேயாகி பிள்ளைகள் பொறுப்பை ஏற்று
அர்ப்பணிப்போடு காக்கும் திருமதி சிவமலர் சுந்தர பாரதி அவர்கள்
மற்றுமோர் ஜனாதிபதி விருதும் பெற்றார் சிறந்த அதிபராய் வாழி வாழி!

வெற்றிகள் பலதைத்தேடி பிள்ளைகள் கைக்கொடுத்து
பற்றினால் அவர்கள் வெற்றி தன் வெற்றி என்றே ஏற்று
சற்றுமே சலிக்காதுழைக்கும் திருமதி சிவமலர் சுந்தர பாரதி அவர்கள்
மற்றுமோர் ஜனாதிபதி விருதும் பெற்றார் சிறந்த அதிபராய் வாழி வாழி!

முற்றுமே மாணவர்காய் முழுவாழ்வும் அர்ப்பணித்து
அற்புத அதிபராகி ஆசிரியர் அன்பும் ஏற்று
நிற்குமோர் நிகரிலாதார் திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்கள்
மற்றுமோர் ஜனாதிபதி விருதும் பெற்றார் சிறந்த அதிபராய் வாழி வாழி!

கற்றவர் சபையிலெல்லாம் கல்லூரிப் பெயர் பதித்து
வற்றிடா வளங்களெல்லாம் வாரியவர் வழங்க ஏற்று
நிற்கதி நிலையைப் போக்கும் திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்கள்
மற்றுமோர் ஜனாதிபதி விருதும் பெற்றார் சிறந்த அதிபராய் வாழி வாழி!

வெற்றிடம் என்று ஒன்று இருந்திடா வண்ணம் காத்து
பொற்குடம் என்றே மற்றோர் புகழ்வதைச்செயலால் ஏற்று
விற்பன்னம் பலதும் காட்டும் திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்கள்
மற்றுமோர் ஜனாதிபதி விருதும் பெற்றார் சிறந்த அதிபராய் வாழி வாழி!

2011ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

ஜீ.அபிராமி -164 பி-கயூரி-162 சி-ஜிந்துஜா-161 க.பிரணவன்-158 தே-யாதவன்-156

ஆகியோரையும் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்,
மூளாய், சுழிபுரம்.

சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருது பெறும் அதிபர்
திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்களை மனமார வாழ்த்தும்
பாடசாலை பழைய மாணவர் சங்கம்.

# மூன்று விஞ்ஞானிகளுக்கு இந்த வருடம் மருத்துவத்துறைக்கான நோபல் பரிசு

## அவர்களில் ஒருவர் 3 நாள்களுக்கு முன் மரணம்



உடலின் நோய் எதிர்ப்பு சக்தி பற்றிய நமது புரிதலை மேம்படுத்திய மூன்று விஞ்ஞானிகளுக்கு இந்த வருடத்துக்கான மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு வழங்கப்படுகிறது. இத்தகவல் சுவீடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் நோபல் பரிசுக் குழுவால் அறிவிக்கப்பட்டது.

உயிரினங்களில் நோய் எதிர்ப்பு சக்தி எவ்வாறு உந்தப்படுகிறது என்பதைக் கண்டறிந்தமைக்காக அமெரிக்காவின் புரூஸ் பட்லர் மற்றும் பிரான்ஸைச் சேர்ந்த ஜூல்ஸ் ஹொஃப்மன் ஆகியோருக்கும், புதிய அச்சுறுத்தல்கள் வர வர அவற்றுக்கேற்ப நோய் எதிர்ப்புக் கட்டமைப்பின் ஒரு பிரிவு எப்படி உருமாறிக் கொள்கிறது என்பதைக் கண்டறிந்தமைக்காகக் கனடாவைச் சேர்ந்த ரல்ஃப் ஸ்டெய்ன்மனுக்கும் இந்த விருது வழங்கப்படுகிறது.

சுவீடன் விஞ்ஞானி அல்பிரட் நோபல் எழுதி வைத்த உயிலின் படி 1901ஆம் ஆண்டு முதல் நோபல் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், பொருளாதாரம் மற்றும் அமைதி என்ற வரிசையில் இந்தப் பரிசுகள் அறிவிக்கப்படும்.

இதில் முதற்படியாக மருத்துவத் துறையில் மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தி எவ்வாறு செயற்படுகிறது என்பது பற்றிய ஆய்வுகள் நிகழ்த்திய மூன்று பேருக்கு இந்தப் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த மூன்று பேரின் பங்களிப்பும் மருத்துவத் துறையில் மாபெரும் மாற்றங்களைக் கொண்டு வந்தன என்று நோபல் பரிசுக்குழு பாராட்டியுள்ளது. இவர்களது கண்டுபிடிப்புக்களை அடிப்படையாக வைத்து புதிய வகை மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

பரிசு வழங்கப்பட்ட விஞ்ஞானி ஒருவர் தற்போது இறந்து விட்டார். கனடாவின் ரல்ஃப் ஸ்டெய்மன் மூன்று நாள்களுக்கு முன்னர்தான் இறந்திருந்துள்ளார் என்பது அவர் பெயரை அறிவித்த பின்னர்தான் பரிசுக் குழுவுக்குத் தெரியவந்துள்ளது.

இறந்தவர் ஒருவருக்கு சாதாரணமாகப் பரிசு வழங்குவதில்லை என்ற வழக்கத்தை நோபல் தேர்வுக் குழு வைத்துள்ளது. ஆனால் பரிசை அறிவித்தபோது ரல்ஃப் இறந்ததை அது அறிந்திருக்கவில்லை என்ற நிலையில் ரல்ஃப்புக்கு பரிசு செல்லுமா என்பது பற்றித் தேர்வுக் குழு தனது விதிகளை ஆராய்ந்து வருகிறது.

# ஓசோன் மண்டலத்தில் மோசமான பாதிப்பு

சுகுபா, ஒக்.05

பூமியின் வட துருவமான, ஆர்க்டிக் பகுதியின் வான் வெளியில் ஓசோன் மண்டலத்தில்,மிக மோசமான ஓட்டை விழுந்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஓசோன் மண்டலத்தைப் பற்றிய ஆய்வுக்காக, ஜப்பான் உள்ளிட்ட ஒன்பது நாடுகளின் விஞ்ஞானிகள் இணைந்த ஒரு குழு செயற்பட்டு வருகிறது. இந்தக் குழு சமீபத்தில் நடத்திய ஆய்வின்படி, ஆர்க்டிக் துருவத்தின் மேல் பகுதியில், ஓசோன் மண்டலத்தில் மிகப் பெரிய ஓட்டை விழுந்துள்ளது.

இந்த ஓட்டை, ஆண்டு தோறும் குளிர்காலமான செப்ரெம்பர் - ஒக்ரோபர் மாதங்களில் தென் துருவமான அந்தார் டிக்கின் மேல் பகுதியில் விழும் ஓட்டை அளவுக்கு இருப்பதாகவும் அந்தக் குழு தெரிவித்துள்ளது.

இந்த ஓட்டைக்கு, அப்பகுதியில் நீண்ட காலமாக நிலவிவரும் குளிர் சூழலே காரணம் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. குளிர் சூழலில் வெளியிடப்படும் குளோரின் மூலக் கூறுகள், ஓசோனைச் சிதைக்கும் தன்மை கொண்டவை.

இதுகுறித்து, 'நாசா'வின் மிக்கேல் சான்டீ கூறுகையில், ''பூமியிலிருந்து, 10 முதல் 50 கிலோ மீற்றர் வரை பரவியுள்ள ஸ்ட் ரோட்டோஸ்பயர் என்ற வளி மண்டல அடுக்கில், குளிர் காலத்தில் பொதுவாக, சில இடங்களில் வெப்பமாகவும் சில இடங்களில் குளிராகவும் இருக்கும். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக அந்த அடுக்கின் அனைத்துப் பகுதிகளிலும் குளிராகவே இருக்கிறது. இதனால், குளோரின் வெளியீடு அதிகரிக்கும். அப்படி அதிகரித்தால் ஓசோனில் உள்ள ஓட்டை அதிகமாகவே செய்யும்'' என்றார்.

பூமியில் இருந்து, 10 முதல் 15 கிலோ மீற்றர், உயரத்தில் அமைந்துள்ள இந்த மண்டலம், பல்வேறு வாயுக்களால் சேதம் அடையும் போது அடர்த்தி குறைந்து விடுகிறது. இதனால், புற ஊதாக் கதிர்கள் நேரடியாகப் பூமியைத் தாக்குகின்றன. இந்தத் தாக்குதலால், புற்றுநோய், கண்நோய் உள் ளிட்ட பல்வேறு நோய்கள் அதிகரிக்கின்றன. இதன் விளைவுகள் குறித்து, அக்குழு தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது.



பலஸ்தீனத் தலைநகர் ராமல்லாவில் அந்த நாட்டு அதிபர் முகமது அப்பாஸை (வலது), அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் லியன் பனேட்டா சந்தித்துப் பேசினார்.

# கொழுப்பு உணவுகளுக்கு டென்மார்க்கில் வரி

ஐரோப்பிய நாடான டென்மார்க்கில் கொழுப்பு சத்துமிக்க மிகுந்த திரவ வடிவிலான பால், வெண்ணை, எண்ணெய் வகைகள் மற்றும் இறைச்சி, பீஷா உள்ளிட்ட உணவுப் பொருள்களுக்குப் புதிதாக வரி விதிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க்கில் பால், இறைச்சி, வெண்ணை, பீஷா மற்றும் எண்ணெய் வகைகளை பொதுமக்கள் அதிக அளவில் விரும்பிச் சாப்பிடுகின்றனர். இதனால் உடலில் கொழுப்பு அதிகமாகி உடல் நலன் பாதிக்கப்பட்டு பல்வேறு நோய்களுக்கு ஆளாகி அவதிப் பட்டு வருகின்றனர்.

இதனால் தங்கள் நாட்டு மக்களை நோயில் இருந்து காப்பாற்ற உடல் நலத்துடன் வாழ வைக்க டென்மார்க் அரசு புதுவிதமான அதிரடி முயற்சியை மேற்கொண்டுள்ளது. அதாவது கொழுப்புச் சத்து மிகுந்த திரவ வடிவிலான பால், வெண்ணை, எண்ணெய் வகைகள் மற்றும் இறைச்சி, பீஷா உள்ளிட்ட உணவுப் பொருள்களுக்குப் புதிதாக வரி விதித்துள்ளது.இதை மக்கள் நலனில் அக்கறை கொண்ட ஏனைய நாடுகள் பின்பற்றினாலும் ஆச்சரியமில்லை.

# 24 வயது குறைந்தவரை மணக்கும் 85 வயது மூதாட்டி

ஸ்பெயினைச் சேர்ந்த 85 வயது மூதாட்டி ஒருவர் தன்னை விட 24 வயது குறைந்த மணமகன் ஒருவரை இன்று திருமணம் செய்கிறார். இந்த மூதாட்டியின் திருமணத்துக்கு அவரது பிள்ளைகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இருந்த போதும் அவர் அதனைக் கருத்திற் கொள்ளாது இந்த முடிவை எடுத்துள்ளார். இவரது துணைவராகப் போபவர் ஒரு சமூக வேவையாளர் ஆவார்.

இந்தச் சீமாட்டி தனித்துவமான நாகரீகத்துக்காகப் பேர்போனவராகவும் 3 பில்லியன் சொத்துக்களை வைத்திருப்பவருமாக இருக்கின்றார்.

# தேவாலய ஆராதனையின் போது தனது கண்களைத் தோண்டிய நபர்

## இத்தாலியில் பரபரப்புச் சம்பவம்

ரோம்,ஒக.5

தேவாலயத்தில் ஆராதனைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது நபரொருவர் தனது கண்களைத் தோண்டியெடுத்து அங்கிருந்த அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திய சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இத்தாலியில் இடம்பெற்றுள்ளது.

வியரோக்கியோ பிராந்தியத்திலுள்ள செண். அன்ட்றியா தேவாலயத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து, கண்களை வெளியே தோண்டியெடுத்த அல்டோ பியன்சினி என்ற மேற்படி நபர் உடனடியாக வேர்ஸிலியா நகரிலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

பிரிட்டனைப் பிறப்பிடமாகக் கொண்ட பியன்சினி (வயது 46) விபரிக்கையில்:

''குரல் ஒன்று என் கண்களைத் தோண்டி எடுக்கும் படி என்னிடம் கூறியது'' என்று தெரிவித்தார்.



இந்த நபருடைய கண்களை மீளவும் பொருத்தி அவருக்குப் பார்வையை ஏற்படுத்துவது சாத்தியமில்லாது உள்ளதாகத் தெரிவித்த மேற்படி மருத்துவமனையின் சத்திர கிசிக்சை நிபுணர்கள் அவர் வாழ்நாள் முழுவதும் குருடாக இருக்க நேரிடும் எனக் கூறுகின்றனர்.

அல்டோ பியன்சினி மன நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து வேர்ஸிலியா மருத்துவமையை சேர்ந்த மருத்துவர் ஜியோ பர்பாக்சி கூறியதாவது;

எனது 26 வருட கால சேவைக் காலத்தில் இது போன்ற அதிர்ச்சி யூட்டும் சம்பவத்தைக் காண நேர்ந்ததில்லை என்று கூறினார்.

அல்டோ பியான்சினி அம்புலன்ஸில் அவரது வயதான தாயாருடன் மருத்துவ மனையை வந்தடைந்தாதகவும் தனது மகனுக்கு எவ்வாறாவது பார்வையை மீளப் பெற்றுத்தரும் படி அந்தத் தாய் கண்ணீர் மல்க மருத்துவர்களிடம் கெஞ்சியமை நெஞ்சை உருக்கும் விதத்தில் இருந்தாதகவும் அவர் தெரிவித்தார்.

# தாய்லாந்தில் கொண்டாடப்பட்ட சீனர்களின் பாரம்பரிய திருவிழா



தாய்லாந்தின் புகெத் நகரில் வசிக்கும் சீன சமூகத்தினரின் பாரம்பரிய திருவிழா ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமானது.

இந்து மதம் சார்ந்த திருவிழாவின் போது தமது உடலில் பல்வேறு துளைகளையிட்டு துப்பாக்கிகள், ஆயுதங்கள் மற்றும் ஏனைய பொருள்கள் செருகி வைத்தவாறு மக்கள் ஊர்வலமாகச் சென்றனர்.

சீன நாள்காட்டியின் பிரகாரம் 9 ஆவது மாதத்தில் மாமிசத்தை விலக்கி புலனடக்கத்தைக் கொண்டு இறை சிந்தையில் மனதை ஒருமுகப்படுத்துவதன் மூலம் நல் ஆரோக்கியத்தையும் மன அமைதியையும் பெற முடியும் என்ற நம்பிக்கை சீன சமூகத்தினரிடையே நிலவுகிறது. இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்ட பக்தர்கள் கன்னங்களில் துளையிட்டு துப்பாக்கி மற்றும் குடைகளைச் செருகியிருப்பதையும் வாள்களை குத்தியிருப்பதையும் காணலாம்.

# யங்கம்பன்ஸ் உதைபந்தாட்டம்

# சென்.சேவியர், சிவானந்தா வெற்றி

யாழ்ப்பாணம், ஒக.05

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழகம், கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் ஆகியன வெற்றி பெற்றுள்ளன.

முதல் இடம்பெற்ற ஆட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணியினரும் உற்சாகத்தோடு களம் புகுந்தனர். இதனால் ஆட்டம் பார்வையாளர்களுக்கு விருந்தாக அமைந்தது. ஆட்டம் தொடங்கியது முதல் இரண்டு அணியினரும் எதிர் அணியினரின் கோல் பரப்பினுள் புகுந்து விளையாடினர்.

ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி 2:0 கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.


இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் மேலும் கோல்களைப் பெற வேண்டும் என்ற உற்சாகத்தோடு விளையாடினர். இதனால் ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது. இதன்போது சக்கோட்டை விளையாட்டுக் கழகம் மேலும் ஒரு கேலைப் பெற்றது.

அல்வாய் நக்கீரன் அணியினரின் முயற்சிகளை எதிர் அணியின் பின்கள வீரர்கள் தடுத்து நிறுத்தினர். ஆட்டம் நிறைவில் சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணி 3:0 கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதனைத் தொடரந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இரண்டு அணியினரும் ஆட்ட நேரத்தில் எந்தவித கோல்களையும் பெறாமையினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் வெற்றி தோல்வி காண்பதற்காக ஐந்து சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)



யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை பாடசாலை கழகங்களுக்கு இடையே நடத்திய ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்ட கிறாஸ்கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணித் தலைவர் கிறோசியன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் எஸ்.கனகராசாவிடம் இருந்து வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொள்கிறார். (த-23)

# யங்கென்றீஸ், யூனியன் வெற்றி

யாழ்ப்பாணம், ஒக்.5

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம், இளவாலை யங்கென்றீஸியன் விளை யாட்டுக் கழகம் ஆகியன வெற்றி பெற்றன.

முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்கென்றீஸியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பாரதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இளவாலை யங்கென்றீஸியன் விளையாட்டுக் கழக அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

# பெண் அணிகளின் கிரிக்கெட் சனியன்று

யாழ்ப்பாணம், ஒக்.5

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் வடமராட்சிப் பகுதிக்கு உட்பட்ட பெண்கள் அணிகளுக்கு இடையே முதல்முறையாக 6 பேர் பங்கு பற்றும் ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டி எதிர்வரும் 8ஆம் திகதி சனிக்கிழமை கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்கு கொள்ளவுள்ள அணிகள் நேரத்துடன் மைதானத்துக்குச் சமுகம் தருமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளணர். (த-23)

## அனோஷனுக்கு வெள்ளிப் பதக்கம்

யாழ்ப்பாணம், ஒக்.5

தியகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மாணவன் ஜி.ஏபிரகாம் அனோஷன் வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளார்.

17 வயது பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் 47.17 மீற்றர் தூரத்தை எறிந்து இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளார். (த-23)



# இறுதியாட்டம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,ஒக்.05

மன்னார் உதைபந்தாட்ட லீக் அமரர் சின்னச்சாமி கணேசன் வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் பனங்கட்டி கொட்டு சென்ஜோசப் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பள்ளிமுனை சென் லூசியா விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கைத்தொழில்துறை அமைச்சர் றிசாத் பதியுதீனும்,சிறப்பு விருந்தினர்களாக மன்னார் மாவட்ட அரச அதிபர் அ.வேதநாயகன், மன்னார் பிரதேச செயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் ஆகியோர் பங்கு கொள்ளவுள்ளனர். (த-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.5

வல்வெட்டித்துறை கழுகுகள் விளையாட்டுக்கழகத்தின் வைரவ விழாவை முன்னிட்டு நடத்தப்படும் 20/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மகேசன் விளையாட்டுக் கழகம் மோதும்.

(த-23)

***

யாழ்ப்பாணம், ஒக். 5

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று இடம்பெறும் ஆட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதும்.

(த-23)

***

யாழ்ப்பாணம்,ஒக.05

கைதடி குமாரநகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தும் தாச்சி சுற்றுப்போட்டி இன்று புதன்கிழமை இரவு மின்னொளியில் இடம்பெறவுள்ளது.

இதில் கைதடி துர்க்கா விளையாட்டுக்கழக 'பி' அணியும்,கைதடி மின்னொளி விளையாட்டுக்கழக 'ஏ'அணியும் மோதவுள்ளன.


(த-288)

## சதுரங்கப் போட்டிக்கு தெரிவான வீராங்கனைகள்

யாழ்ப்பாணம்,ஒக்.05

யாழ்.மாவட்ட சதுரங்கசங்கத்தினால் நடத்தப்பட்ட சதுரங்க தெரிவுப் போட்டியில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய பெண்களின் விவரம் வருமாறு:-

உமையாழினி தேவதாசன், பவித்ரா அருள்ராஜசிங்கம், பிரவீணா பார்த்தீபன், பரபாலினி இராமச்சந்திரன், தீபனா கோவிந்தராஜா, கஜானா விக்னேஸ்வரன், நீர்த்திகா வரதராஜா,வேதிகா ஸ்ரீதயா மோகன், இனோசா இராசேந்திரன்,கௌதமி மகாலிங்கம், மாதுமை வதனரூபன், உமையாள் சிவகுமாரன், சாகித்தியா பார்த்தீபன், லாவண்யாலோகேஸ்வரன், சன்சிகா சிவகாந்தன், மாதுமை ராஜகுரு, வித்யா நவரத்ன சிங்கம், ஷர்மினி ஜெயராசா, மதுமிதா சிவகுமாரன், வித்யா சண்முக வசீகரன், ஸ்வதிகா வசந்தகுமார், மாதங்கி மதீஸ்வரன், செம்பூவினி பாஸ்கரன், தர்ஷிகா சண்முக வசீகரன். (த-23)



யாழ் பல்கலைக்கழக விளையாட்டு அவையால் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட ஐம்பது பந்து பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் சிறந்த ஆட்டநாயகனாக தெரிவுசெய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக அணித் தலைவர் இ.ஜெயரூபனுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முருகவேள் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார். (த-23)

# சென்.றோக்ஸ் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக.5

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக்கழகம் எதிர் நவாலி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம்.

* மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்.பல்கலைக்கழகம். (த-23)

# முதற் சுற்றுடன் முடிந்தது நடப்புச் சம்பியன் ஆட்டம்

## சொந்த மண்ணில் படுதோல்வி

டேவிட் வோர்னரின் அதிரடி முழக்கத்தில் சிக்கிய சென்னை சூப்ப கிங்ஸ் அணி படுதோல்வியடைந்தது. நேற்றைய ஆட்டத்தில் சென்னையை 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் வெற்றி கொண்டது. இதன் மூலம் சென்னை சொந்த மண்ணில் முதல் சுற்றுடன் வெளியேறியது. சம்பியன் லீக் தொடரின் குழு 'ஏ' ஆட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. இரவு 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் அணியும், ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸ் சவுத் வேல்ஸ் அணித்தலைவர் ஹட்டிச் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக வோர்னர், வொட்ஸன் ஜோடி களமிறங்கியது. இரண்டாவது பந்து பரிமாற்றத்திலேயே சவுத் வேல்ஸ் அதிரடியை தொடங்கியது. 36 பந்துகளில் அணி முதலாவது 50 ஓட்டங்களை எட்டியது. வொட்ஸன் 19 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 22 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அஸ்வினின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார்.


அதன் பின்னர் சென்னை சூப்ப கிங்ஸின் சரிவு தொடங்கியது. வோர்னர், ஸ்ர்வன் ஸ்மித் இணைந்து சென்னையை போட்டுத் தாக்கினர். வோர்னர் ஒவ்வொரு பந்து பரிமாற்றத்துக்கு நான்கு, ஆறு ஓட்டங்கள் என்று விளாசினார். டோனி பந்து வீச்சாளர்களை மாற்றியும் எந்தவொரு வியூகமும் வோர்னரின் அதிரடியை கட்டுப்படுத்தவில்லை. இருப்பினும் வோர்னர் 36 ஓட்டங்களில் கொடுத்த பிடியை ஜகாத்தி தவறவிட வோர்னரின் சரவெடி எகிறியது.

சகலரது பந்து வீச்சையும் கலைத்து கலைத்து தாக்கிய வோர்னர் 33 பந்துகளில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் ஸ்மித் வோர்னருக்கு ஏற்றவாறு சென்னையை போட்டுத் தாக்கினார். 2 ஆவது இலக்குக்காக 37 பந்துகளில் 50 ஓட்டங்கள் பகிரப்பட்டது. வோர்னர் அதிரடியாய் 'றிவேஸ் ஸ்வீப்'பில் நான்கு ஓட்டங்கள், ஆறு ஓட்டங்கள் விளாச சென்னை திணறியது. 22 பந்துகளில் மூன்றாவது அரைச்சதத்தை வேல்ஸ் எட்டியது. 61 பந்துகளில் 2 ஆவது இலக்குக்காக 100 ஓட்டங்கள் பகிரப்பட்டது. இறுதியில் அணி 17.3 பந்து பரிமாற்றங்களில் 155 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஸ்மித் ஆட்டமிழந்தார். 29 பந்துகளில் 31 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் குலசேகரவின் பந்து வீச்சிலேயே ஸ்மித் ஆட்டமிழந்தார்.

அதிரடியாய் ஆடிய வோர்னர் 58 பந்துகளில் சதம் கடந்தார். இறுதியில் 20 பந்து பரிமாற்றங்களில் 201 ஓட்டங்களை இரண்டு இலக்குகளை மாத்திரம் இழந்து நியூ சவுத் வேல்ஸ் பெற்றுக் கொண்டது.

வோர்னர் 69 பந்துகளில் 8 ஆறு ஓட்டங்கள், 11 நான்கு ஓட்டங்கள் அடங்கலாய் 135 ஓட்டங்களையும், ஹென்றிகியூஸ் 4 பந்துகளில் 9 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொண்டனர்.

கடின இலக்கை விரட்டிய சென்னைக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ஹஸி, விஜய் களமிறங்கினர். ஹஸி முதலாவது பந்தை கிளார்க் வீச நான்கு ஓட்டங்கள் விளாசினார். தொடர்ந்து இரண்டு நான்கு ஓட்டங்கள் விளாச முதலாவது பந்து பரிமாற்றத்தில் 12 ஓட்டங்கள் பெறப்பட்டது. தொடர்ச்சியாய் அதிரடியாய் ஆடிய ஆரம்பத் துடுப்பாட்ட ஜோடி 37 பந்துகளில் 50



ஓட்டங்களைப் பகிர்ந்தது.

27 பந்துகளில் 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 37 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஹஸி ஆட்டமிழந்தார். தொடர்ந்து ரெய்னா களம்புகுந்தார். அணி 67 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது இலக்கை இழந்தது. விஜய் 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

ரெய்னா, டோனி ஜோடி அதிரடியாய் ஆடிய போதும் அது நீண்ட நேரத்துக்கு நிலைக்கவில்லை. 10 ஆவது பந்து பரிமாற்றத்தில் ரெய்னா ஆறு, நான்கு அடுத்தடுத்து விளாசிய போதும் இறுதிப் பந்தில் ஆட்டமிழந்தார். 14 பந்துகளில் 5 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்து பரிமாற்றத்தின் முதலாவது பந்திலேயே டோனி 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சென்னையின் சத்தம் அடங்கியது.

பின்வரிசையில் பிராவோ 16, பத்திரிநாத் 13, சஹா ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினர். பின்னர் சிறிது நேரம் குலசேகர வான வேடிக்கை காட்டினார். இறுதியில் 12 பந்துகளில் 18 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பொலஞ்சர் 11 பந்துகளில் 17 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க சென்னையின் ஆட்டம் முடிவை எட்டியது. 18.5 பந்து பரிமாற்றங்களில் 155 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது.

பந்து வீச்சில் ஸ்ர்வன் ஓ கவீ 3 இலக்குகளையும், ஸ்ரூவட் கிளார்க், ஸ்ரெக் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக நியூ சவுத் வேல்ஸின் டேவிட் வோர்னர் தெரிவானார். (15)

## காலிறுதிக்கு தகுதி

சம்பியன் லீக் 'ரி-20' ஆட்டத்தில் குழு 'ஏ' பிரிவிலிருந்து ஆஸ்திரேலியாவின் பிராந்திய அணியான நியூ சவுத் வேல்ஸ் அணியும், இந்தியாவின் ஐ.பி.எல் அணியான மும்பை இந்தியன்ஸ் அணியும் காலிறுதி சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளன.

குழு 'பி' பிரிவிலிருந்து இன்று நடைபெறும் ஆட்டம் மூலம் இரண்டு அணிகள் தெரிவாகும். காலிறுதி ஆட்டங்கள் 7,8 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (15)

---

### நாரந்தனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். 45 இற்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டதாக மதிக்கப்படும் இந்தச் சடலம் அடையாளம் காண முடியாதவாறு உருக்குலைந்த நிலையில் யாழ்.போதனா வைத் தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ஒ-15-167)

---

### வலி.தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குப்பைகளை அகற்றும் பணியில் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே பணிகளைப் புறக்கணித்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள்.

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது சம்பந்தமாக எந்தவொரு முன்னறிவித்தலும் கொடுக்காது கையொப்பம் இட்டு விட்டு வேலைக்குச் செல்லாத நிலையில் நின்றதுடன் வெலை செய்தவர்களைத் தடுத்ததால் சுன்னாகம் பொலிஸாருக்கு பிரதேச சபையால் அறிவிக்கப்பட்டது.

சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் இந்த விடயம் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டார். (ஒ-86)

---

## பரபரப்பான ஆட்டத்தில் ரொபாக்கோ வெற்றி

சென்னைக்கு எதிரான ஆட்டத்தில் அதிரடியாய் ஆடி ரொபாக்கோவுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்த கூப்பர் மீண்டும் நேற்றைய ஆட்டத்தில் அசத்த ரொபாக்கோ இரண்டாவது வெற்றியைப் பதிவு செய்தது.

சம்பியன் லீக் தொடரின் குழு 'ஏ' ஆட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது. மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் கேப்ஹோப்பிராஸ் அணியும், மேற்கிந்தியத் தீவுகளின் ரினினாட் ரொபாக்கோ அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கேப்ஹோப்பிராஸ் அணித் தலைவர் கெம்ப் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கேப்ஹோப்பிராஸ் 20 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 137 ஓட்டங்களுக்கு 4 இலக்க்களை இழந்திருந்தது. அந்த அணி சார்பாக ஒவைஸ் ஷா 50 பந்துகளில் ஒரு ஆறு ஓட்டம், 6 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 63 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றார். டானி விலாஸ் 44 பந்துகளில் 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 54 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். 3.1 பந்து வீச்சுக்களில் 10 ஓட்டங்களுக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் இழந்து திணறிய கேப்ஹோப்பிராஸ் அணிக்கு ஷா, விலாஸ் ஜோடி சிறந்த இணைப்பை வழங்கி மீட்டது. பந்து வீச்சில் பட்ரி, ராம்போல், நரேன், கூப்பர் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்கு இலக்குவான இலக்கை விரட்டிய ரொபாக்கோவும் ஆரம்பத்தில் தடுமாறியது. சீரான இடைவெளியில் இலக்குகளை இழந்து கொண்டேயிருந்தது. ஹோப்பிராஸ் அணித்தலைவர் கெம்ப் ரொபாக்கோவின் அதிரடியை கட்டுப்படுத்தி இலக்குகளை சரித்தார். இறுதி 3 பந்து பரிமாற்றங்களில் 33 ஓட்டங்கள் பெற வேண்டிய நிலையில் கூப்பரின் அதிரடி கைகொடுக்க ரொபாக்கோ வெற்றி பெற்றது. இறுதிப் பந்து பரிமாற்றத்தில் 9 ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் பந்து வீசிய லங்காவெல்த் முதலாவது பந்தில் ராம்போலை ஆட்டமிழக்கச் செய்தார். இருப்பினும் அந்த பந்து பரிமாற்றத்தில் முறையற்ற பந்து வீசியதுடன் கூப்பர் நான்கு ஓட்டங்கள் விளாச இரு பந்துகள் மீதமிருக்கையில் இரண்டு இலக்குகளால் வெற்றியை ரினினாட் ரொபாக்கோ தனதாக்கியது. கூப்பர் 11 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், ஒரு நான்கு ஓட்டம் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். டரன் பிராவோ 29 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் கெம்ப் 3 இலக்குகளையும், லங்காவெல்த் 2 இலக்குகளையும் கைப்பற்றினர். ஆட்ட நாயகனாக கூப்பர் தெரிவானார். (15)

---

### மாணவிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னையைச் சேர்ந்த சி.சங்கீதா என்ற மாணவிக்குப் பாட ஆசிரியர் அனுமதி மறுத்தார்.

ஆனால் மாணவி உயிரியல் பாடம்தான் கற்க வேண்டும் என்று விடாப்பிடியாக இருந்தார். இந்த நிலையில் பாடசாலை நிர்வாகம் மாணவியின் விருப்பத்துக்கு மறுப்புத் தெரிவித்து பாடசாலையை விட்டு வெளியேறுமாறு பணித்தது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மாணவியின் பெற்றோர் கடந்தவாரம் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவை நாடினர்.

பெற்றோரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து மனித உரிமை ஆணைக்குழு மேற்படி பாடசாலை அதிபரை அழைத்து மாணவியின் விருப்பத் தெரிவுப் பாடத்தை கற்க அனுமதிக்குமாறு அறிவுறுத்தியிருந்தது.

இதனை அடுத்து மாணவியும் பெற்றோரும் பாடசாலைக்கு நேற்றுச் சென்றிருந்தனர். இந்தச் சமயத்தில்தான் பாடசாலை உயர்தர வகுப்பு மாணவர்கள் அவர்களை உள்ளே விட்டு வாயிலைப் பூட்டி வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த மாணவியை பாடசாலையில் கற்க அனுமதிக்கக் கூடாது என்று மாணவர்கள் கூச்சலிட்டுள்ளனர்.

சம்பவத்தை அறிந்த வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இராஜேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சுந்தரசிவம் ஆகியோர் பாடசாலைக்குச் சென்று சமரச முயற்சியில் ஈடுபட்டனர்.

மாணவி, தொடர்ந்து உயிரியல் பாடப் பிரிவில் கற்பதற்கான முடிவு எடுக்கப்பட்டபோதும் மாணவர்கள் கூச்சலிட்டுக் கொண்டு கூட்டத்தில் இருந்து வெளியேறியுள்ளனர்.குறித்த மாணவர்கள் ஆசிரியர்கள் ஓரிருவரின் தூண்டுதலிலேயே தமது சக மாணவிக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ-10-86-39)

அமெரிக்கன் லொத்தர் வீசா 2013



DV 2013 அமெரிக்கன் லொத்தர்
வீசா விண்ணப்பங்கள்
ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
முடியும் திகதி 04.11.2011 வரை



திருமுருகன் கொம் னெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
05, திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. ஐ, பிரதான வீதி, நெல்லியடி. 021 222 7835

## வாழ்த்துகின்றோம்

**உலக ஆசிரியர் தினம் 2011- ஒக்ரோபர் 06 ஆம் திகதி**

எங்கள் உடுவில் கோட்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அர்ப்பணிப்புள்ள சேவையினால் அறிவுடைய மாணவச் செல்வங்களை உருவாக்குவதற்கும் பாடசாலை கல்வி வளர்ச்சி மேம்பாடடைய உழைத்தமைக்காக தங்களை, கோட்ட பாடசாலை கல்விச் சமூகம் நன்றி உணர்வுடன் மேன்மேலும் தங்கள் பணி சிறக்க வாழ்த்துகிறது.

கோட்டக்கல்வி அலுவலகம்,
உடுவில். 05.10.2011.

வாழ்த்துவோர்:
கோட்டக்கல்விப்பணிப்பாளர்,
கல்விசாராப்பணியாளர், நலன்விரும்பிகள்,
கோட்டபாடசாலை அபிவிருத்திச் சங்க சமூகத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



வலிகாமம் கல்வி வலயத்தில் நல்ல அதிபராகி
உலக ஆசிரியர் தினத்தில்
அலரிமாளிகையில் நடைபெறும்
ஜனாதிபதி விருது விழாவில்
கௌரவம் பெறும்
எமது கல்லூரி முதல்வர்
**திரு.சு.சண்முககுலகுமாரன்**
M.Ed, BA, PGDE, Sc. Trd SLPS
அவர்களைப் பாராட்டுவதோடு.
அவர் இன்னும் பல உயர்வுகளையும்
பெற்று சிறப்புற வாழ்வதற்கு
வாழ்த்துகின்றோம்

ஆசிரியர்கழகம்
யா/இணுவில் இந்துக்கல்லூரி

## பாராட்டுகின்றோம்



கைதடி சரஸ்வதி வித்தியாலயத்தில்
அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிச் சென்ற
**லயன். ப.செல்லத்துரை** அவர்களின்
சிறப்பான பணியை மனமாரப் பாராட்டுவதுடன்
அவரது பணி தொடரவும், ஓய்வுக் காலத்தினை
பயனுள்ள வகையில் மேற்கொள்ளவும்
வாழ்த்துகின்றோம்.
டச்சு வீதி, சாவகச்சேரி.
லயன் M.Pசண்முகநாதன் குடும்பம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**திரு. இரவீந்திரராசா அனுராகரன்**
[கலைமானி சிறப்புக் கலைப்பட்டம்- B.A (Hons)



எதிர்வரும் 06.10.2011
[வியாழக்கிழமை] அன்று
நடைபெறும் 27ஆவது பட்டமளிப்பு
விழாவில் கலைமானி சிறப்புக்
கலைப்பட்டம் (B.A Hons) பெறும்
திரு.இரவீந்திரராசா அனுராகரன்
அவர்களைப் பாராட்டுவதோடு
மேலும் பல பட்டங்களைப் பெற
வேண்டும் எனவும்
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்-
அக்கா, அத்தான், மருமக்கள்(அபிநயன்,
கேதியா), கிருபாகரன் (தம்பி)

## வைரவிழா

வைரவிழாக் காணும்
மதிப்புக்கும், கௌரவத்துக்கும், பாசத்துக்குமுரிய

**திரு.மு.குகதாசன்**

அவர்கள் 70 ஆவது வயதிலும் கம்பீரமாக வாழ்ந்து, வற்றாப்பளை கண்ணகை அம்மன் தேவஸ்தானத்தின் நிர்வாகத்திலும் தலைவராக இருந்து சரிவர மற்ற உறுப்பினர்களின் எண்ணத்தை உணர்ந்து சிரித்த முகத்தோடு முடிவு கூறும் திறன் கொண்டவர் தன் இளமைக் காலத்திலும் பொதுப் பணிகள் செய்ய முன் நின்றவர். ஆசிரியராக கடமையாற்றி, அதிபராகி பிள்ளைகளின் உள்ளம் எல்லாம் இடம் பிடித்தவர். இல்வாழ்க்கை சிறப்புற வாழ்ந்து ஒரு புதல்வரையும், இரண்டு புதல்விகளையும் பெற்று, சீராட்டி நல்ல நிலைக்கு கொண்டு வந்து இறைபணியிலும் ஆத்மீகப் பணியிலும் ஈடுபட்டவர். அதைவிட வற்றாப் பளைச் சந்தியில் சித்திர வேலாயுத சுவாமிக்கு கோயில் ஒன்று அமைத்து அதை அழகு செய்தார்.

வாழ்க! வாழ்க! பல்லாண்டு வாழ்க!
சுபம் அஸ்து

பிரதம குருவும்
மகன் குடும்பத்தினரும்.
வற்றாப்பளை

# பழைய பூங்கா...

(14 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள். ஆளுநரின் இந்த மாதிரியான அடாவடித்தனங்கள்தான் புத்தர் கோயிலும் வரப்போகிறது என்பதான கதைகளுக்கும் வித்திடுகிறது.

**கலந்துரையாடலும் பிறழ்வுகளும்**

கடந்த மாதம் 23ஆம் திகதி ஆளுநர் அலுவலகத்தில் பழைய கச்சேரி புனரமைப்பு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதில் தொல்பொருள் திணைக்களத்தை சேர்ந்தவர்களும் கலந்து கொண்டுள்ளனர். இதன் போது பழைய பூங்காவில் உள்ள பழைய மாவட்டச் செயலகக் கட்டடத்தில் முளைத்துள்ள மரங்களை வேதியல் பதார்த்தம் கொண்டு அழிப்பதற்கு தொல்பொருள் திணைக்களம் அனுமதித்து குறித்த வேலையையும் பொறுப்பேற்றுக் கொண்டது. அந்தக் கலந்துரையாடலில் அருகில் அமைந்துள்ள குளத்தின் புனரமைப்பு தொடர்பாகவோ அல்லது பழைய பூங்காவினை மக்கள் பாவனைக்கு திறந்து விடுவது தொடர்பாகவோ வாயே திறக்கப்படவில்லை.

ஆனால், அந்தக் கூட்டத்தில் தொல்பொருள் திணைக்கள அதிகாரி இருந்ததன் காரணமாக, அவருக்கு தெரியும் என்ற அடிப்படையிலேயே பணிகள் ஆரம்பிக்கப்பட்டன என்று ஆளுநர் அலுவலகம் கூறுகிறது. இதனை அடியோடு மறுக்கும் தொல்லியல் திணைக்களம், பூங்கா மதில் உடைப்பது பற்றியோ அங்கு புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வது குறித்தோ தமக்கு எதுவும் தெரியாது என்று சொல்கிறது.

செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி இடித்தழிப்பு வேலைகள் ஆரம்பமாகி, பழைய பூங்காவின் கண்டி வீதியின் பக்கமாகவுள்ள மதில் சுவர் சரிக்கப்படும் வரைக்கும் ஆள்களின் 'ஈகோ'கள் செயற்பட்டனவே தவிர பழைய பூங்கா பற்றி யாரும் கவலைப்படவேயில்லை.

செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி பழைய பூங்காவில் உள்ள பழைய கச்சேரி தொல்பொருள் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அந்தக் கச்சேரியுடன் இணைந்ததாக அதற்கு மேற்குப் பக்கமாக அமைந்துள்ள குளங்களையும் தேசிய மரபுரிமைச் சின்னங்களாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு இடம் தேசிய மரபுரிமைச் சின்னமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் அதன் அமைவிடத்தில் இருந்து 400 மீற்றர் சுற்று வட்டாரத்துக்குள் தொல்பொருள் திணைக்களத்தின் அனுமதியின்றி அணுவும் அசையக்கூடாது. எனினும் பழைய பூங்காவில் அந்த விதி காலாவதியாகப் போனது. யாரும் அந்த விதிகளை மதிக்கக்கூட இல்லை. இவையெல்லாம் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னரும்கூட அழிப்புப் பணிகளைக் கைவிட முதல்வரும் ஆளுநரும் அமைச்சர்களும் தயாராக இருக்கவில்லை. வழக்கம்போல் இவை பத்திரிகைகளின் கட்டுக்கதைகள் என்று கூறிவிட்டுத் தமது பணியைத் தொடரவே அவர்கள் விரும்பினர். எனினும் புத்திஜீவிகள் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிவித்ததன் பின்னரே அவர்கள் கொஞ்சம் இறங்கி வந்தனர். ஆனால் இப்போதும் திட்டம் கைவிடப்பட வில்லை.

யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி செய்யக்கூடாது அழகுபடுத்தக்கூடாது என்று இந்த மண்ணின் எந்த ஒரு உண்மையான குடிமகனும் தெரிவிக்கப்போவதில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் இந்த மண்ணின் கலாசார பண்பாட்டுக்கு மதிப்புக் கொடுங்கள், இங்குள்ள மக்களையும் மனிதர்களாக மதித்து அவர்களது உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள் என்பதுதான். வடமாகாணத்தின் குறுநில மன்னன் தான் என்பதுபோல் ஆளுநரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட சீதனம் போல் அமைச்சர் டக்ளஸ் மற்றும் மாநகர முதல்வரும் பயன்படுத்திக் கொள்வதைத்தான் அவர்கள் வெறுக்கிறார்கள்.

பழைய பூங்கா புனரமைப்புத் திட்டம் குறித்து யாழ்ப்பாண மக்களுக்கு எதுவுமே தெரியாது; அதன் சுவர்கள் இடித்து அழிக்கப்படும் வரைக்கும். போரில் வென்ற மன்னர்கள் தோற்றவர்களின் ஊர்களில் கிடைத்தவை எல்லாம் தமக்கே சொந்தம் என்பதாக நடந்துகொள்வதைப்போல் அரசு நடந்து கொள்வதையுமே வடக்கு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அனைத்துத் தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும் என்பதையே பழைய பூங்காவினுள் இருந்து கிளம்பும் உண்மைகள் கூறுகின்றன.

## VACANCY

மின் இணைப்புப் பொருள்கள் மற்றும் மின்சார உபகரணங்கள் விற்பனையில் அனுபவமுள்ள/அனுபவமற்ற வேலை ஆள்கள் தேவை. நேரில் வரவும்.
யாழ்ப்பாண மின்னகம்
94(6) ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## வீடு விற்பனைக்கு

கலையரசு வீதி, நவாலி தெற்கு,
மானிப் பாயில் 4½ நிலப்பரப்புக்
காணியுடன் வீடு
விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:-0213217499

## தவறிவிட்டது

NP.HA 6747 இலக்கத்தகடு தவறிவிட்டது.
கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும்
முகவரியில் ஒப்படைத்துதவவும்.
T.பாஸ்கரன்
678/1 கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



**சின்னப்பு கனகசபை மதியழகன்**
**(திலகன்)**

மண்டைதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கனகசபை மதியழகன் (03.10.2011) திங்கட்கிழமை ஜேர்மனியில் காலமானார்.
அன்னார் கோசலாவின் அன்புக் கணவரும்,சிவசோதி-கிருஸ்ணவேணி(தேவி) தம்பதியரின் மருமகனும், ரோகணன் (டுபாய்) , ஜெமிலா (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

132/34சிவன்கோயில் வீதி,
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

தகவல்:
சிவசோதி குடும்பத்தினர்,
(மாமா)

நிறுவனங்கள் தமது கணக்குகளை கணனிமயப்படுத்தியுள்ளன.
கணக்கியல்துறை மாணவர்களே!
உங்கள் தெரிவு நிச்சயமாக கணனிக்கணக்கியலாகவே இருக்கவேண்டும்.
நீங்களும் கணனிக்கணக்கியலில் வல்லுனராக இன்றே இணையுங்கள்....
சகலவகையான கம்பனிகணக்குகளையும் கணனிமயப்படுத்தும்படியான
100% பயிற்சியளிக்கப்படும்.
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
உலகின் முன்னணியிலுள்ள Accounting Software களான
Quick Book + ACCPAC + MYOB / Tally ஊடாக..
இக் கற்கைநெறியினை கணக்கியல்துறை மாணவர்கள், பல்கலைகழக, உயர்தொழினுட்பகல்லூரி மாணவர்கள், கணக்கியல்துறையில் வேலைசெய்வோர், வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போர், கணக்கியல்துறை ஆர்வலர்கள் அனைவரும் தொடரலாம்.
வார/வாரஇறுதி வகுப்புக்கள்
அலுவலர்களிற்கான விசேட மாலைநேர வகுப்புக்கள் ஆரம்பமாகிறது.
COMPUTER EXPRESS
No 15, Sirampiyadi Lane, (Off Stanly Rd)
Jaffna. 0212228250
வகுப்புக்கள் ஆரம்பம்:
08/10/2011 11AM
09/10/2011 04PM

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் விரிவுரையாளர் **வ.திலீபன்**
அவர்களின் அன்புத் தந்தை
**சின்னையா வல்லிபுரம்**
அவர்களின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.
நலன்புரி சங்கம்
உயர்தொழில் நுட்பவியல் நிறுவனம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



**ஆறுமுகம் கந்தையா**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்-கொழும்பு இந்துக் கல்லூரி, முன்னாள் கல்விச்சேவை ஆணைக்குழு அத்தியட்சகர்-கொழும்பு, இலங்கை வானொலிப் பணிப்பாளர்)

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மற்றும் ஆஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தையா 03.10.2011 ஞாயிற்றுக்கிழமை ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அருமை மகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், சுதர்சன், தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவசுப்பிரமணியம், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் (முன்னாள் கிராம விதானையார், மறவன்புலோ), செல்லையா, சின்னத்தம்பி ஆகியோரின் மருமகனும் கந்தையாவின் (முன்னாள் பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்-நாவற்குழிப் பகுதி) மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் இன்று (05.10.2011) புதன்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
செ.கந்தையா(மைத்துனர்).

# யாழ். நகர் முற்றவெளியில் இளைஞருக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஒக.5

யாழ் நகர் முற்றவெளிப்பகுதியில் நேற்றிரவு யாழ் - கொழும்பு சேவையில் ஈடுபடும் பஸ்சின் உரிமையாளர் எனக் கூறப்படும் இளைஞர் ஒருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி தலையில் படுகாயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொக்குவில் மேற்கு ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த வசந்தநாயகம் விதுலன் (வயது-20) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்கானவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: பிரஸ்தாப இளைஞர் வழமைபோல நேற்றிரவு 7.30 மணியளவில் பயணிகளுக்கான ஆசனப்பதிவை மேற்கொண்டிருந்த வேளை திடீரென மழைபெய்துள்ளது. அதை அடுத்து வெளியில் நின்ற மோட்டார் சைக்கிளை எடுக்கச் சென்ற வேளை அந்த இடத்துக்கு நடந்து வந்த இருவரில் ஒருவன் வாளால் வெட்டியுள்ளான். பின்னர் இருவரும் தப்பியோடி விட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தென்மராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொடிகாமத்தை மையமாகக் கொண்டு தென்மராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவாக அமையவுள்ளது. இதில் 28 கிராம சேவகர் பிரிவுகள் உள்ளடக்கப்படவுள்ளன. ஜே/320 முதல் ஜே/347 வரையான கிராம சேவகர் பிரிவுகளே அவையாகும்.

இவை தற்போது முன்மொழியப்பட்ட நிலையில் எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பில் இருந்து வரும் எல்லை மீள் நிர்ணயக் குழு மூலமே உறுதி செய்யப்படவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு தங்கராசா

(விநாயகம் - கம்பளை அப்பா)



நெல்லியடியைச் சேர்ந்த கார்த்திகேசு தங்கராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர், பசுமலை - கம்பளை) நேற்று முன்தினம் (03.10.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தமலர், சிவபாலன் (சுவிஸ்), விஜயபாலன்(சுவிஸ்), யோகபாலன்(சுவிஸ்), ஜெயபாலன்(கனடா), கவிதா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராஜா(பிரபல அட்வ கேட்- கொழும்பு), வனஜா(சுவிஸ்), சரோஜினி(சுவிஸ்), கொரின் (சுவிஸ்), சுசீலா(கனடா), சிவகுமார்(கனடா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2011) வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மஹாத்மா வீதி,*
*நெல்லியடி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## கனகசபை காந்தியழகன்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, பிரப்பங்குளம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகவும், வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கனகசபை காந்தியழகன் (இலங்கை வங்கி) நேற்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் ஜெயராணியின் அன்புக் கணவரும், பிரசாந்த், ஸ்ரீசனாத், பங்கஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபாளினியின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற கனகசபை மற்றும் பராசக்தி தம்பதியரின் ஏக புதல்வனும், கமலாஜினி, கலைச்செல்வி, சத்தியதேவி, அருளரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், திரு.திருமதி சண்முகரட்ணம் விஜயலட்சுமியின் அன்பு மருமகனும், சிவதாசபிள்ளை, பாலசுப்பிரமணியம், மகாதேவா, குலசேகரம், ஜெயகௌரி, ஜெயரூபி, ஜெயரதி, ஜெயரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலசிங்கம், சற்குணராஜா, நடராஜ் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.10.2011) வியாழக்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.60, HAMPDEN LANE,
COLOMBO-06.

தகவல்:
குடும்பத்தினர்.

## சூறாவளி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

இந்த நிலையில், கொழும்பு மாநகர சபை மேயர் பதவிக்காகப் போட்டியிடுகின்ற பிரதான ஐந்து கட்சிகளின் வேட்பாளர்கள் சூறாவளி வேகத்தில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கொழும்பு மாநகரசபை மேயர் பதவிக்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொடவும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஏ.ஜே.எம்.முஸம்மிலும், ஜே.வி.பி. சார்பில் சுனில் வட்டகலவும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் சபீக் ரஜாப்தீனும், ஜனநாயக மக்கள் முன்னணியின் சார்பில் அக்கட்சியின் தலைவர் மனோ கணேசனும் போட்டியிடுகின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மேயர் வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்கான இறுதிப் பிரசாரக் கூட்டம் நேற்று கொழும்பு பழைய சோனகத் தெரு பகுதியில் நடைபெற்றது.

எஞ்சிய 4 பிரதான கட்சிகளின் மேயர் வேட்பாளர்களின் இறுதிப் பிரசாரக் கூட்டங்கள் கொழும்பில் இன்று நடைபெறவுள்ளன.

இதன்படி ஐ.ம.சு.முன்னணியின் மேயர் வேட்பாளர் மிலிந்த மொறகொடவின் இறுதிப் பிரசாரக் கூட்டம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இன்று கிராண்ட்பாஸில் நடைபெறவிருக்கிறது.

ஐ.தே.கவின் மேயர் வேட்பாளர் முஸம்மிலின் இறுதிப் பிரசாரக் கூட்டம் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஜிந்துப்பிட்டியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

ஜே.வி.பியின் மேயர் வேட்பாளர் சுனில் வட்டகலவின் இறுதிப் பிரசாரக் கூட்டம் இன்று மாலை 3 மணிக்கு மாளிகாவத்தையிலும், ஜனநாயக மக்கள் முன்னணியின் மேயர் வேட்பாளரான அக்கட்சியின் தலைவர் மனோ கணேசனின் இறுதிப் பிரசாரக் கூட்டம் காக்கை தீவிலும் நடைபெறவுள்ளன.

இம்முறை நடைபெறும் கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அரசுடன் இணையாமல் தனித்துப் போட்டியிடுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியும், முஸ்லிம் வேட்பாளர் ஒருவரையே மேயர் பதவிக்காகக் களமிறக்கியுள்ளது. அத்துடன், ஜனநாயக மக்கள் முன்னணி ஐ.தே.கவுடன் இணையாமல் தனித்துப் போட்டியிடுகின்றது.

இந்த நிலையில், கொழும்பு மாநகரிலுள்ள தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலை உருவாகியுள்ளது என்ற கருத்து நிலவுகின்றது.

இதேவேளை, என்றும் இல்லாத வகையில் இம்முறை நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் பெருமளவு நிதியை பிரசாரங்களுக்காகவும், ஏனைய நடவடிக்கைகளுக்காகவும் செலவழித்து வருகின்றனர் என்று தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டியிருந்தன. (ஒ)

**விற்பனைக்கு**

அலுவலகமொன்றில் உபயோகப்படுத்தப்பட்ட பிளைவூட் MDF பலகைகள், கதவுகள், தரைக்குப் பதிக்கும் பலகைகள் என்பன உடனடி விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு-0726993264

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர் பகுதிகளை அண்டி சிறிய குடும்பம் ஒன்றுக்கு குடியிருக்க வீடு வாடகைக்குத் தேவை பொருத்தமான முற்பணம், வாடகை வழங்கலாம். தொடர்புகளுக்கு: 0714220002

**சாரதி தேவை**

பிரபல தேயிலை வியாபார நிறுவனத்துக்கு கனரக வாகனச் சாரதி தேவை. தகுதி உடையோர் பின்வரும் முகவரிக்கு அலுவலக நேரத்தில் நேரில் வரவும். முடிவுத் திகதி 15.10.2011

பொது முகாமையாளர்
248, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0777437377

# அமெரிக்காவில் சிகிச்சை பெறுவதற்கு ஜனாதிபதி மஹிந்தவுக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, ஒக்.5

ஐ.நா. சபையின் பொதுச்சபை அமர்வில் கலந்துகொள்வதற்காக அமெரிக்கா சென்றிருந்த சமயம் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அமெரிக்க மருத்துவமனையில் சிகிச்சைபெறுவதற்கான அனுமதிக்கப்பட்டுள்ளதாக இணையத்தள செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் ஹூஸ்டன் மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனையொன்றை மேற்கொள்ள உத்தேசித்துள்ள போதிலும், அமெரிக்க அதிகாரிகள் அதற்கான அனுமதி வழங்காது தடுத்துவிட்டதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தலையிட்டு, அமெரிக்காவின் துணை இராஜாங்கச் செயலாளர் றொபர்ட் ஓ பிளேக்கிடம் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு கோரிக்கை விடுத்தபோதும், பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க அமெரிக்க நீதிமன்றமொன்றின் அழைப்பாணையை எடுத்துக் கொண்டு ஜனாதிபதியின் வருகையை எதிர்பார்த்து அதிகாரிகள் காத்துக் கொண்டிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து குவீன்ஸ்லாந்து விகாரைக்கான பயணத்தையும் ஜனாதிபதி இறுதிநேரத்தில் ரத்துச் செய்திருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்திய வெளியுறவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாத்தாய் திட்டமிட்டிருக்கிறார் என்று தெரியவருகிறது. இடம்பெயர்ந்த மக்களுக்கு 50,000 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் இந்தியத் திட்டத்தின் பணிகளைப் பார்வையிடும் நோக்குடன் அவர் இங்கு வருகை தரவுள்ளார். அதேவேளை அவர் சிவில் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசு வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

**அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்**

யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய அதிபர்

**திருமதி சிவமலர் சுந்தரபாரதி**

B.A.Dip-in Ed.M.ed. Sc. Trd.(S.L.P.S.2 II)

எமது பாடசாலையின் அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி நாளை [06.10.2011] வியாழக்கிழமை அலரிமாளிகையில் நடை



பெறவுள்ள தேசிய மட்டத்திலான அதிபர்கள் கௌரவிப்பு விழாவில் வலிகாமம் கல்வி வலயத்தின் அதி சிறந்த அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளார். அவரின் இந்தச் சிறப்பினை பாராட்டுவதுடன் அவர் மேன்மேலும் பல சிறப்புகளும் உயர்வுகளும் பெற்று நீடூழி காலம் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



பாலகிருஸ்ணன் அஜிந்தன் (168)



செல்வி.லிதருகன் சுவஸ்ரிகா




சசிதரன் சஜீன் (151)

வட மாகாண கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான சித்திரப் போட்டியில் தரம் 02 இல் கல்வி கற்கும் செல்வி லிதருகன் கலஸ்ரிக்கா வட மாகாணத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்ததையிட்டு வாழ்த்துவதுடன்

2011 ம் ஆண்டு தரம் 05 புலமைப் பிரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த பாலகிருஸ்ணன் அஜிந்தன்[168], சசிதரன் சஜீன்[151] மற்றும் சு.குகதாசன்[148] அ.நிதர்சன்[128] ம.கஜேந்தி [120] அ.சரணியா[114] லோ.தபோசன் [108]ம.உக்கிரேஸ்வரன் [103] கை.கலைச்செல்வன் [100] புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்களையும் இந்த ஆசிரிய நாளில் வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்
மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை

## கண்ணீர் அஞ்சலி



முன்னால் யாழ்.மாவட்ட அரச அதிபரும் முன்னால் வடமாகாண விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில் அமைச்சின் செயலாளருமாகிய செல்லையா பத்மநாதன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி செல்லையா பொன்னம்மா**

அவர்கள் மறைவுச் செய்திகேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் அதேவேளை அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடுப்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சக உத்தியோகத்தர்கள்.

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் நுழைவு மாணவர்களுக்கான
இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
05.10.2011 காலை 11-1 மற்றும் 06.10.2011 காலை 11-1
கதைத்தலுக்கு தேவையான ஆங்கிலம் முழுமையாக கற்பிக்கப்படும்
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

## பொலிஸுக்கு 100 மோப்பநாய்கள்!

கொழும்பு, ஒக.5

குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கப் பயிற்றுவித்து பொலிஸ் திணைக்களத் தின்மோப்ப நாய்கள் பிரிவில் இணைத்துக் கொள்வதற்காக நூறு மோப்ப நாய்கள் வருகின்றன. டென்மார்க்கிலிருந்து மோப்ப நாய்களை தருவிக்க பொலிஸ் திணைக் களம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. பொலிஸ் மோப்ப நாய்கள் ஒவ்வொன்றும் ஆறு லட்சம் ரூபா பெறுமதி யானவை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

வல்-மேற்கில் ஓர் புதிய உதயம்
கல்வியால் புதிய சகாப்தம் படைப்போம்
றோயல் அக்கடமி
சங்கானை
A/L 2012, 2013 வர்த்தகப் பிரிவு
★ பொருளியல் – S. வரதராஜன்
★ கணக்கீடு – P. பகீரதன்
★ வணிகக்கல்வி- V. முரளி
அனுமதிகள் வழங்கப்படுகின்றது
ஆரம்பம்
06.10.2011 வியாழக்கிழமை பி.ப 4.00 மணி

90% Discount + Free5
Upto
Diploma Course fee
Ms Office, DTP, Hardware & Networking
Accounting, Web Design, Business English
MCS தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
Supported By UNDP/JRRP
324,Palaly Road,Parameswara Junction
facebook - mcsitcampus www.mcsitcampus.org

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் இராசரெத்தினம் சண்முகரெத்தினம்

(இளைப்பாறிய அதிபர் பூந்தூர் சோமஸ்கந்தக்கல்லூரி, ஏழாலை மகா வித்தியாலயம் காங்கேசன்துறை)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சண்முக ரத்தினம் நேற்று (04.10.2011) செவ்வாய்க்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம்-பத்மாவதி, தம்பதியரின் ஏக புத்திரனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம்-இராஜலக்ஷ்மி தம்பதியரின் மருமகனும் அருள்நாயகி (முன்னாள் ஆசிரியை மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை),அன்புக் கணவரும் சிறிதரன் (ரவி), சசிந்திரன் (சசி) அவர்களின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று(04.10.2011)செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்று கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

958/8 நாச்சிமார் கோவிலடி, காங்கேசன் வீதி,யாழ்ப்பாணம்.
தகவல்: அருள்நாயகி(மனைவி)

1st in Com., G.A.Q. (FIRST EXAMINATION IN ARTS) வெளிவாரி
யாழ்ப்பாணம் பேராதனைப் பல்கலைக்கழகம்
★ மேற்படி பல்கலைக்கழகங்களினால் புதிய ஆண்டுக்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
★ A/L இல் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத்தகுதியுடையவர்கள் ஆவர்.
★ புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
குறிப்பு:-
1. பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பதிவுகள் பல்கலைக் கழகத்தினால் மீண்டும் 14.10.2011 வரைநீடிக்கப் பட்டுள்ளது.
2. பேராதனைப் பல்கலைக்கழக பதிவுகள் மட்டும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
3. வெளிமாவட்ட மாணவர்களுக்கு தங்குமிடவசதி இலவசம்.
விவரங்களுக்கு:- S.அருள்நங்கை (நிர்வாகி)
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

"ஏழை மாணவர்களுக்குக் கை கொடுப்போம்"
கந்த கோட்டம் கல்வி நிலையம்
சுழிபுரம் கிழக்கு
ஆசிரியர்கள் தேவை
தரம்-1 தொடக்கம் க.பொ.த. (சா/த) வரை உள்ள எல்லாப் பாடங்களையும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.
குறிப்பு:- தகவல் தொழில்நுட்பம் என்ற பாடத்தினை திறமையான முறையில் கற்பிக்கின்ற ஆசிரியருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
( IT பாட ஆசிரியர் எல்லா மென்பொருள்களையும் கூடியவரை அறிந்திருப்பது விரும்பத்தக்கது)
தகைமை உடையவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். T.P 0779333451
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி- 15.10.2011
கவர்ச்சிகரமான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

metropolitan
பணிநிலை வேண்டுகை
Canon, Acer மற்றும் முன்னணித் தயாரிப்புக்களின் இலங்கை முகவராகத் திகழும் எமது நிறுவனத்துக்கு இளமையும், துடிப்பும் மிக்க சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் (Sale Executive) மற்றும் கணக்கு உதவியாளர் (Accounts Assistant) வேண்டப்படுகின்றனர்.
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
தகைமை:- O/L கணிதம் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தி
வயது:- 20-26 வயது
மோட்டார் சைக்கிள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
கணக்கு உதவியாளர் (Accounts Assistant)
தகைமை:- கணினி அறிவும் Accounting Package சம்பந்தமான அறிவும் தேவை. ஆங்கிலம், சிங்களம் தெரிந்தால் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.
விண்ணப்ப படிவங்களை 12.10.2011 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
Metropolitan Office (pvt) Ltd,
No. 186/22, Off Point Pedro Road,
Kurunatha Suwami Lane Jaffna. Tel/Fax: 0212220777

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 15 | 05 |
| 09 | 09 |
| 1943 | 2011 |

### அமரர் மாணிக்கம் சிவரத்தினம்

(ஓய்வு பெற்ற முன்னாள் இ.போ.ச நடத்துநர்)

எமது அன்புத் தெய்வத்தின் உயிர் பிரிந்த வேளை தோளோடு தோள் நின்று உதவிய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அன்னாரது இறுதிக் கிரியையில் கலந்து மலர்வளையங்கள்,மலர்கள்,மலர் மாலைகள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும்,அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர்களுக்கும்,பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோர்களுக்கும்,இரங்கல் உரைகள் நிகழ்த்தியவர்களுக்கும் தொலைபேசி தந்திகள் மூலம் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டு ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எம் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (05.10.2011) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கார் விற்பனை
நிசான் Sa 14 டீசல் - கார் GGXXXX சில்வர் கலர் ஸ்லோவில் புதிய ரயர், பவர் அன்ரனா, பவசட்டர், பவர் மிரர் AC டவுன் எயாபக், மனுவல் சியர், T.V. DVD டீ, புளுத்துட் அடங்கிய கார் செற் என்பன உள்ளடங்கியது.
தொடர்பு: 0750422086

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
25% கட்டணக் கழிவு
Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
BI Exam IELTS Minimum 6.0 band உத்தரவாதம்
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்குத் தோற்றமுடியும். Duration : 2 Months
Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.
Diploma In English (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.
A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◇ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◇ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◇ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◇ 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
◇ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◇ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
அனைத்து பிரிவுகளும் ஆரம்பமாகின்றன
Batch I 07.10.2011 2.00 - 4.00
Batch II 08.10.2011 8.00 - 9.00
Batch III 09.10.2011 2.00 - 4.00
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna.Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 13A, Annai Teresa Lane, (Near Rambaikulam Girls Convent) Rambaikulam, Vavuniya. Tel: 024 324 5287

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.